33°/31°
பக்கங்கள் 24

# உதயன்

■ பதிப்பு: யாழ்
■ விலை: ரூபா 25
■ சுடர் 28
■ கதிர் 138
■ வள்ளுவர் ஆண்டு 2044
■ பங்குனி 31, சனி 13.04.2013
UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

## பிரதேச சபை உறுப்பினருக்கு மிரட்டல்

கிளிநொச்சி, ஏப்.13
முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழித்து மேற்கொள்ள முற்சிக்கப்பட்ட குடியேற்றத்துக்கு எதிராக நீதிமன்றில் பொது நல வழக்குத் தாக்கல் செய்த,

பார்க்க பக்கம் 04

# கோத்தாவின் கூற்றால் அதிர்ச்சியில் புதுடில்லி

## தீவிரமாகப் பரிசீலித்து கொழும்புக்கு பதிலடி கொடுக்கத் தயாராகிறது இந்தியா

கொழும்பு, ஏப்ரல் 13
இலங்கை மீதான இந்தியத் தலையீடுகள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் கருத்து, இந்திய இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருப்பதாக நம்பகரமாக அறியமுடிகின்றது.

கடந்தவாரம் கொழும்பிலிருந்து வெளியாகும் அரச ஆதரவு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்திருந்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கையில் இந்தியத் தலையீடு குறித்து ஆரம்பத்தில் இருந்து விசாரணைகளை நடத்துவது தொடர்பில் சர்வதேச சமூகம் கவனஞ்செலுத்தவேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார்.

''கோத்தபாயவின் இந்தக் கருத்து பாரதூரமானது. இந்தியா இதனை

பார்க்க பக்கம் 04

போராட்டங்கள் தொடரும் தமிழகத்துக்கான மாணவர் போராட்டக்குழு அறிவிப்பு
6

வரம்பை மீறுகிறது வடகொரியா கடுப்படைகின்றது அமெரிக்கா
7

முஸ்லிம் மக்களுக்கு எதிராக எந்த அநீதியும் இடம்பெறாது
15

அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி யாழில் 'பார்'கள் திறப்பதற்கு முயற்சி
19

# ஈழப்போருக்கும் இந்தியாவுக்கும் எந்தவிதத் தொடர்புமே கிடையாது

■ கோத்தாவின் கூற்றை மறுக்கிறார் நாராயணசாமி



சென்னை,ஏப்.13
இலங்கை அரசின் அடக்கு முறைகள் காரணமாகவே ஈழத்தில் போர் வெடித்தது. இந்தப் போருக்கும் இந்திய அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கைப் போருக்கு இந்தியாதான் காரணம் என்று தெரிவித்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன் என இந்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

இலங்கையில் 30 வருட காலம் இழுபறிப்பட்டு முடிவடைந்த போருக்கு இந்தியாவின் முன்னாள் ஆட்சியாளர்கள் காரணமாக இருந்துள்ளார்கள் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்திய மத்திய அரசின் இணை அமைச்சர் நாரயணசாமி கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு, அங்குள்ள ஈழத் தமிழர்களுக்கான உரிமையை வழங்காமல் அவர்களைத் துன்புறுத்

பார்க்க பக்கம் 04

# ஈழ அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை

## தமிழக மாணவர் அமைப்பு கோரிக்கை

சென்னை,ஏப்.13
இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும். அத்துடன் தமிழகத்திலுள்ள சிறப்பு அகதி முகாம்கள் மூடப்பட வேண்டும் என்று தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு கோரியுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகமெங்கும் மாணவர்களினால் தொடர்ச்சியான ஒழுங்கு முறை அடிப்படையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பினர் சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்றுப் பேசினர்.

''ஈழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட மே - 19 ஆம் திகதியன்று மாபெரும் கவன வீர்ப்புப் பேராட்டங்கள் தமிழகம் முழுவதும் நடத்தப்படவுள்ளன. இந்தப் போராட்டங்கள் மாணவர் கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்படும்'' என்று அவர்கள் அறிவித்தனர்.

மேலும் இந்தியாவிலுள்ள ஈழஅகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தமிழகத்திலுள்ள பூந்தமல்லி, செங்கல்பட்டு ஆகிய சிறப்பு அகதி முகாம்களை மூடுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

# புத்தாண்டிலாவது தீர்வைத் தாருங்கள்

■ அரசிடம் கோருகிறார் சம்பந்தன்

கொழும்பு, ஏப்.13
மலரும் தமிழ் - சிங்கள புத்தாண்டிலாவது இலங்கை அரச தரப்பினர் தமது காடைத்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் தமிழருக்குத் தீர்வை வழங்க முன்வர வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அதேவேளை, தமிழ்

பார்க்க பக்கம் 04

# பிரபாகரனும் சூசையும் போரிலேயே உயிரிழந்தனர்

■ சரத்பொன்சேகா

கொழும்பு,ஏப் 13
கடற்புலிகளின் தளபதி சூசை தற்கொலை செய்து கொண்டார் என ஊடகங்களில் வெளியான தகவல்களை நிராகரித்துள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, போரின் இறுதி நாளில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சூசையும் கொல்லப்பட்டார் என்று தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய சரத் பொன்சேகா, போரின் இறுதி நாளில் பிரபாகரன் மற்றும் 100 போராளிகளுடன் சூசை

பார்க்க பக்கம் 04

# ரூபா 12 லட்சம் மோசடி; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.13
வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 12 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த நபர் ஒருவர் வெளிநாட்டுக்குச் செல்ல முற்பட்டுள்ளார். அவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவர் 12 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளார். கடந்த வருடம் ஜூலை மாதம் இந்தப் பணக் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றது.

எனினும் இன்றுவரை அவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமலும் உரிய பணத்தையும் திருப்பிக் கொடுக்காமலும் குறித்த நபர் இழுத்தடித்து வருவதால் பாதிக்கப்பட்டவர் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (த-4)

# பொறுப்புக் கூறும் விடயத்தில் இலங்கைக்கு உதவத் தயார்

■ புது வருட வாழ்த்துச் செய்தியில் அமெரிக்கா

வோஷிங்டன்,ஏப்.13
இலங்கையில் மோதல்கள் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் மீள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கை மக்கள் முன்னோக்கிச் செல்லும் பயணத்தில் ஒத்துழைப்பு வழங்கி உதவ அமெரிக்கா எப்போதும் தாயாராகவே இருக்கிறது என்று அமெரிக்க வெளியுறவுச்செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் சிங்கள - தமிழ் மக்களின் புது வருடத்தையொட்டிய வாழ்த்துச் செய்தியொன்றை விடுத்துள்ளார் வெளியுறவுச் செயலர் ஜோன்கெரி. அமைதி

பார்க்க பக்கம் 04

# கைபேசியில் உரையாடியவாறு பஸ்ஸை செலுத்தினால் தண்டம்

## தனியார் மினி பஸ் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 13

தனியார் பஸ்களின் சாரதிகள் கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டு பஸ்ஸை செலுத்தினால் சங்கம் ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடுவதுடன் தொடர்ந்து அதேசெயற்பாடுகளில் ஈடுபட்டால் சாரதியின் 'லைசன்ஸ்' பறிமுதல் செய்யப்படும் என்று தனியார் பஸ் சங்கத்தின் உபதலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

தனியார் பஸ் சாரதிகள் கைத்தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனம் செலுத்துவதால் பொதுமக்கள் பல்வேறு இடையூறுகளைச் சந்திப்பதுடன் விபத்துக்களையும் சந்திக்க நேரிடுகிறது. இது தொடர்பாகக் குறித்த சாரதிக்கு எதிராகச் சங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன என்பது தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பஸ்களின் சாரதிகள் பஸ் செலுத்தும்போது கைத்தொலைபேசி பயன்படுத்த முடியாது. இது தொடர்பாக சங்கத்தால் சாரதிகளுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இதனையும் மீறிச் சாரதிகள், பயணிக்கும் போது கைத்தொலைபேசியில் உரையாடுகிறார்கள்.

இதனை வீதிகளில் வைத்து சங்கம் கவனிக்க முடியாது. ஆனால் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் இதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

சங்கத்தின் ஒழுங்கு விதிகளுக்கு மாறாகச் சாரதி பஸ்ஸைச் செலுத்திக் கொண்டு கைத்தொலைபேசியில் உரையாடினால் ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்படும். அத்துடன் தொடர்ந்து அதே சாரதி அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்படும். இதனைச் சங்கம் வீதிகளில் வைத்து நடைமுறைப் படுத்துவது சாத்தியமற்றது.

இது தொடர்பாக வீதிப் போக்குவரத்து பொலிசாரிடம் பலமுறை முறைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதனை அவர் கண்காணிப்பதாகத் தெரியவில்லை.

பொலிஸார் இதற்கான சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தினால் மட்டுமே பயணிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தவிர்க்க முடியும் - என்றார்

(த-14)

# மீண்டும் பிரிவினைவாதத்தை தூண்டுகிறது அமெரிக்கா

## கோத்தபாய சீற்றம்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜேசிசன் வெளியிட்டுள்ள கருத்துகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இன்னமும் உள்ள பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலுக்கு வலுச்சேர்க்கிறது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் அமெரிக்கத் தூதுவர் நிகழ்த்திய உரை குறித்து கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்கத் தூதுவர் போருக்குப் பிந்திய சூழலை அறியாதுள்ளார் அல்லது அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய அறியாதது போல இருக்கிறார். அரசியல் அதிகாரங்களைப் பகிர்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவது முக்கியம் என்று அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார். இந்த விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் விளையாட்டு நடத்துகிறது என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டும். 2009 இல் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களின் பிரதிநிதிகள் என்ற உரிமையை மீளப் பெற்றது. அதற்கு முன்னர், அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகளின் ஊதுகுழலாகவே இருந்தனர்.

2001 இல் தமிழ்மக்களின் ஒரு பிரதிநிதி என்று விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரபாகரன் நிர்ப்பந்தித்ததை ஒருவேளை தூதுவர் சிசன் இன்னமும் அறியாமல் இருந்திருக்கலாம். அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நோர்வேயின் தலைமையிலான சமாதான முயற்சிகளில் இருந்து தந்திரமாக வெளியேற்றப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் உயிருக்குப் பயந்து இன்னமும் அமைதியாக உள்ளனர். கொழும்பிலுள்ள அமெரிக்கா உள்ளிட்ட எந்தவொரு இராஜதந்திர தூதரகமுமே, அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நிற்கவில்லை. அவர்கள் குற்றச்சாட்டுகள் குறித்துப் பொறுப்புக்கூற வலியுறுத்துகின்ற போதிலும், மோதல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கு குறித்து அமைதி காக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் சிறுவர்களை ஆயுதமுனையில் தமது தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தியது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறைந்த பட்சம் தமது நிலைப்பாட்டையேனும் விபரிக்க வேண்டும். இன்று தமிழ் மக்களின் ஒரு தெரிவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே உள்ளது. விடுதலைப் புலிகள் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் இன்னமும் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் உள்ள போதிலும், சுதந்திரமாகச் செயற்படும் விடுதலைப் புலிகளுடன் பல்வேறு மட்டங்களில் அந்த நாடுகள் பணியாற்றி வருகின்றன. இலங்கையை இலக்கு வைத்த இரண்டாவது அமெரிக்கத் தீர்மானம் குறித்த தூதுவர் சிசனின் விளக்கம், போலியானது.

ஊடக சுதந்திரம் குறித்து எமக்குப் போதிக்கும் அவர்கள், தமது நலன்கள் அச்சுறுத்தலுக்குள்ளான போது வித்தியாசமாக செயற்பட்டார்கள். விக்கிலீக்ஸ் தகவல்களை அம்பலப்படுத்திய போது, அமெரிக்காவின் இரட்டைவேடம் வெளிப்பட்டது. விடுதலைப் புலிகள் இருந்த போது அனைத்துலக சமூகம் பொறுப்புக்கூறச் சொல்லிக் கேட்கவில்லை. மரணங்கள் அழிவுகள் பற்றி அவர்கள் பரப்புரைகளை முன்னெடுத்த போது தான், இதனைக் கேட்கிறார்கள்-என்றார்.(த)

# இந்திய மீனவர்கள் 49 பேரை கைது செய்யாத கடற்படை

சென்னை,ஏப் 13

இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைய முயன்ற தமிழக மீனவர்களைக் கைது செய்யாமல் இலங்கைக் கடற்படை திரும்ப ஒப்படைத்துள்ளது. நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 49 மீனவர்கள் இந்திய கடல் எல்லையை விட்டு இலங்கைக் கடல் எல்லையில் மீன்பிடிக்க நுழைந்த போது இலங்கைக் கடற்படையினர் அவர்களை பிடித்து இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்கள் நேற்று 9.45 மணிக்கு காரைக்கால் துறைமுகம் வந்தடைந்தனர். அவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த முறை தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்யாமல், இந்தியக் கடலோரப் படையினரிடம் ஒப்படைத்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த)

# வடக்கு ரயில் பாதைகளில் விரைவில் தானியங்கி கருவிகள்

கொழும்பு, ஏப்.13

வடக்கு ரயில் பாதையில் தானியங்கிக் கருவிகள் பொருத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மணிக்கு 120 கிலோ மீற்றர் என்ற அதி வேகத்தில் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என இலங்கை ரயில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் இந்திய ரயில் நிறுவனங்களினால், மதவாச்சி- தலை மன்னார் மற்றும் ஓமந்தை- காங்கேசன் துறை வரையான இரு ரயில் பாதைகளின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இரு பாதைகளிலுமே அதிவேக ரயில் சேவையை நடத்தும் பொருட்டு தானியங்கிக் கருவிகள் பொருத்தப்படவுள்ளன.

இந்தப் புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் வடக்கில் மட்டும் நேரடியாக இரண்டாயிரம் பேருக்கும் மறைமுகமாக ஆயிரம் பேருக்குமாகச் சுமார் 3 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பை பெறுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக்குப் பயன்படுத்துவதற்கான தானியங்கி சமிக்ஞை இயந்திரங்கள் மூன்று தற்போது கொழும்பு துறைமுகத்தை வந்து சேர்ந்துள்ளன.

சுங்கத் திணைக்கள அனுமதிக்காக அந்த இயந்திரங்கள் காத்திருப்பதாகவும் வெகுவிரைவில் மேற்படி இரு ரயில் பாதைகளிலும் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இலங்கை ரயில் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(த-16)

# விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இராமேஸ்வரம் திரும்பினர்

சென்னை,ஏப்.13

மன்னார் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 19 மீனவர்களும் நேற்று வெள்ளிக்கிழமை இராமேஸ்வரத்தை சென்றடைந்தனர் என இந்தியச் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி, இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்ததாகக் கூறி 19 இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட 19 மீனவர்களும் மன்னார் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்ட 19 பேரும், நீதிமன்றத்தால் உடனேயே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் 19 பேரும் இலங்கைக் கடற்படையால், இந்தியக் கடலோரக் காவல் படையிடம் கையளிக்கப்பட்டு நேற்றுத் தமது சொந்த இடமான இராமேஸ்வரம் திரும்பினர்.

இராமேஸ்வரம் திரும்பிய 19 மீனவர்களிடம் இந்திய 'கியூ' பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (த-5)

# அமெரிக்காவுடனான தொடர்புகளை வலுப்படுத்த 100 மில்லியன் ரூபா

கொழும்பு,ஏப் 13

அமெரிக்காவுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள இலங்கை அரசு 100 மில்லியன் ரூபாவைச் செலவிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவை மையமாகக் கொண்ட பொதுமக்கள் தொடர்பு நிறுவனமொன்றுக்கு இலங்கை மத்திய வங்கி இந்தப் பணத்தை செலுத்த உள்ளது. எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளுக்கு முன்னதாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தொடர்பு முகவர் நிறுவனமொன்றின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

(த)

# உயிரிழந்த இரு மாதக் குழந்தை உரிய விசாரணையின்றி புதைப்பு

## பொலிஸார் மீண்டும் தோண்டி எடுத்து விசாரணை

யாழ்ப்பாணம்,ஏப். 13

உயிரிழந்த இரண்டு மாதக் குழந்தை உரியவர்களுக்கு அறிவிக்காமல் புதைக்கப்பட்டுள்ளது.

சேமக்காலையில் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்ட குழந்தையை அங்குவைத்து உடற்கூற்றுப் பரிசோதனை, விசாரணைகளின் பின்னர் மீண்டும் புதைக்கப்பட்டது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சுழிபுரம் தெற்கில் நேற்று இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த விதூசன் அனுரன் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த குழந்தைக்கு அவரது தாயார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தாய்ப்பாலூட்டியுள்ளார். அது புரைக்கேறியதனால் குழந்தை மூர்ச்சையாகிவிட்டது. அந்தக் குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அது இடைவெளியில் உயிரிழந்துவிட்டது.

இதனால் குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லாமல் வீட்டுக்கே திரும்பிக் கொண்டு சென்றுள்ளனர் பெற்றோர். வீட்டில் உரிய கிரியைகளின் பின்னர் குழந்தையின் சடலத்தை சுழிபுரத்திலுள்ள சவக்காலையில் நேற்றுமுன்தினமே அடக்கம் செய்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்துப் பொலிஸார் சேமக்காலைக்குச் சென்றதோடு குறித்த பெற்றோரையும் விசாரணை செய்தனர்.

இது குறித்துப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். நீதிவானின் உத்தரவுக்கமைய சட்ட வைத்திய அதிகாரியும் சேமக்காலைக்குச் சென்று நீதிவான் முன்னிலையில் குழந்தையின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. அங்கு வைத்து உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் மூலம் தாய்ப் பால் புரைக்கேறியதனாலேயே குழந்தை உயிரிழந்தமை தெரியவந்தது.

இதன் பின்னர் குழந்தையை மீண்டும் புதைக்க உத்தரவிட்ட நீதிவான், விசாரணையை நிறைவுக்குக் கொண்டு வந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சில நாள்களுக்கு முன்னர், இதேபோன்று உயிரிழந்த மற்றொரு குழந்தையும் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தாமல் புதைக்கப்பட்டமையால் மீண்டும் அது தோண்டி எடுக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# 8 ரயில் சேவைகள் இடைநிறுத்தம் பயணிகள் சிரமம்

ரயில் சாரதிகள் கடமைக்குச் சமூகமளிக்காமையினால் ரயில் சேவைகளை இடைநிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக அந்தச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பு,ஏப் 13

பிரதான ரயில் சேவ்வகளில் 8 ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில் திணைக்கள கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

ரயில் சாரதிகள் கடமைக்குச் சமூகமளிக்காமையினால் ரயில் சேவைகளை இடைநிறுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டதாக அந்தச் சபை அறிவித்துள்ளது.

ரயில் சாரதிகள் எடுத்த இந்தத் திடீர் தீர்மானத்தினால் தமிழ்-சிங்கள புது வருடத்துக்குத் தங்களுடைய சொந்த இடங்களுக்கு செல்ல விருந்தவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர். (த)

## 25 ஹெக்ரேயரில் எள்ளுச் செய்கை

யாழ்ப்பாணம்,ஏப். 13

யாழ்.குடாநாட்டில் 25 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விவசாயிகள் எள்ளுச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்போக நெல் அறுவடை முடிந்த கையோடு விவசாயிகள் தமது வயல்களைச் சீர் செய்து எள்ளுச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

'உமா' இனத்தைச் சேர்ந்த விதை எள்ளை விவசாயத் திணைக்களம் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் விநியோகித்தது.

தற்போது இந்த 'உமா' இன எள்ளு விதைக்கப்பட்டு பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை விவசாயிகளால் பயிரிடப்பட்ட இந்த எள்ளை அறுவடையின் பின்னர் மீளப் பெறுவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

விவசாயத் திணைக்களம் விதை அத்தாட்சிப்படுத்தும் பிரிவு ஊடாக இந்த எள்ளைப் பெற்று களஞ்சியப்படுத்தி அடுத்த போகத்துக்கு விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (த-17)

## யாழ்.வளைவு கட்டுமான பணி பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஏப். 13

யாழ். வளைவின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என்று நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப. வசந்தகுமார் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட இந்த வளைவுக்கு வர்ணம் பூசப்பட்டு அது திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

முன்னர் இருந்த யாழ். வளைவு, வீதி அகலிப்பு நடவடிக்கைகளுக்காக இடித்து அகற்றப்பட்டதை அடுத்துத் தற்போது புதிய வளைவு அமைக்கப்பட்டுள்ளது.

அகற்றப்பட்ட வளைவை மீண்டும் அதே இடத்தில் அமைப்பதற்கான நிதி உதவியை வீதி அபிவிருத்தி அதிகார சபை நல்லூர் பிரதேச சபைக்கு வழங்கியிருந்தது.

கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து இந்த வளைவை விரைவாக திறந்து வைக்கவும் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (த-17)

# நடைபாதைக் கடைகளில் புதுவருட வியாபாரம் 'சூடு'

## வெயிலையும் பொருட்படுத்தாமல் குவிந்த மக்கள்







யாழ்ப்பாணம், ஏப்.13

***யாழ்.நகரில் சித்திரைப் புத்தாண்டு வியாபாரம் நடைபாதைக் கடைகளில் நல்ல சூடு பிடித்த அதேவேளை நகர வர்த்தக நிலையங்கள் வியாபாரம் இன்றி வெளிச்சோடிக் காணப்பட்டன. கடந்த இரண்டு தினங்களாகப் புத்தாண்டு வியாபார நடவடிக்கைகள் நடைபாதைக் கடைகளில் களைகட்டியிருந்தன.***

சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் மக்கள் நகரை நோக்கி நேற்றுக்காலை முதல் படையெடுத்ததால் நகர்பகுதியில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

உச்சிவெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் காலையில் இருந்தே நகரில் குவிந்து உடுபுடைவைகள் மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

புத்தாண்டுக்காக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களும் நேற்று முதல் யாழ்ப்பாணத்துக்கான மேலதிக பஸ்சேவைகளை ஆரம்பித்தன.

இதனைவிட தனியார் பஸ்களின் போக்குவரத்து சேவையும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

நகரில் போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் குற்றச் செயல்கள் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இம்முறை நகரின் உட்பகுதியில் ஆஸ்பத்திரி வீதி, மின்சாரநிலையவீதி, வைரவர் கோயிலடி வீதி போன்ற இடங்களில் நடைபாதை வியாபாரத்துக்கு அனுமதி வழங்கபடவில்லை.

நடைபாதை வியாபாரங்கள் அனைத்தும் யாழ்.முற்ற வெளிப் பகுதியில் மேற்கொள்வதற்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தென்பகுதியில் இருந்து நடைபாதை வியாபாரிகள் பலர் யாழ்.நகருக்கு நேற்று முன்தினம் இரவு அதிக எண்ணிக்கையில் படையெடுத்தனர்.

இவர்கள் விசேட கொட்டகைகளை அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை யாழ். நகருக்கு வெளியே திருநெல்வேலி, சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளின் சுற்றாடலிலும் நேற்றுப் புத்தாண்டு வியாபார நடவடிக்கைகள் களைகட்டியது. (த-17)

## பாதசாரிக் கடவைகள் இல்லாமையால் ஆபத்து

யாழ்ப்பாணம்,ஏப். 13

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகவும் நகரின் பிரதான வீதிகளிலும் பாதசாரிக் கடவைகள் அமைக்கப்படாமையால் தாம் இடையூறுகளை எதிர்கொண்டு வருவதாகப் பாதசாரிகள் மற்றும் வைத்தியசாலைக்கு செல்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் முன்புறமாகவும் நகரின் பிரதான வீதிகளின் கரையோரங்களிலும் வெள்ளை நிறக்கோடு வரைந்து போக்குவித்து இலகுபடுத்தப்பட்டுள்ளது.

வாகனங்கள் நகரப் பகுதிக்குள்ளும் மிக வேகமாகப் பயணிக்கின்றன. பிரதான வீதிகளிலும் வைத்தியசாலை முன்பாகவும் பாதசாரிகள் வீதியைக் கடக்க வேண்டிய தேவையுள்ளது. ஆனால் வீதியைக் கடப்பதற்கான மஞ்சள் கோடுகள் வரையப்பட்ட பாதசாரிக் கடவைகள் இன்மையால் மக்கள் வீதியைக் கடப்பதில் ஆபத்தையும், சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதியின் இருமருங்கிலும் வெள்ளை நிறக்கோடு வரையப்பட்ட போதும் முக்கியமாக இருக்க வேண்டிய பாதசாரிக் கடவையை அதிகாரிகள் வரையத் தவறியுள்ளனர். என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகத் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வீதியைக் கடக்கின்றனர். நோயாளர்கள், நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் மட்டுமன்றி மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் அனைவரும் வீதியைக் கடப்பதில் இடையூறுகளையே எதிர்கொண்டுள்ளனர். என்று வைத்தியசாலைப் பணியாளரொருவர் தெரிவித்தார்.

எனவே பாதசாரிக் கடவையை விரைவில் அமைத்து பாதசாரிகள் வீதியைக் கடக்கக் கூடிய நிலையை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-4)

## 100 கிலோ வேதாள வெங்காய உண்மை விதை யாழுக்கு

யாழ்ப்பாணம்,ஏப். 13

வேதாள வெங்காயச் செய்கையை மேலும் ஊக்குவிக்கும் வகையில் 100 கிலோ உண்மை விதை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது.

இந்தியாவில் இருந்து தருவிக்கப்படும் இந்த வேதாள வெங்காய உண்மை விதைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததும் அவை உடனடியாக விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாய திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் ஆர். சௌந்தரராஜன் தெரிவித்தார்.

இந்த உண்மை விதை தேவைப்படும் விவசாயிகள் உடனடியாகத் தத்தமது பிரிவு விவசாய போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முதற்கட்டமாக இந்த உண்மை விதைகள் எடுத்து வரப்படுவதாகவும், மேலும் விதை தேவைப்படும் பட்சத்தில் அவற்றைத் தருவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

குடாநாட்டில் வேதாள வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் முதற்கட்டமாகவும், பரீட்சார்த்தமாகவும் இந்தியாவில் இருந்து இதற்கென வேதாள வெங்காய உண்மை விதைகள் தருவிக்கப்படவுள்ளன. (த-17)

## தொண்டை, வாயை இறுக்கிப் பிடித்து வயோதிபரின் மோதிரம் பறிப்பு

அதிகாலை நேரம் ஆலயத்துக்குச் சென்றுகொண்டிந்த வயோதிபரை வழிமறித்த வாலிபர் சத்தம் போடாத வண்ணம் அவரின் தொண்டையையும்வாயையும் கையால் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு அவர் அணிந்திருந்த 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க மோதிரத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் இடம் பெற்றுள்ளது. இது பற்றி குறிப்பிடுவதாவது-

அதே இடத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் காலை நேரப் பூசையில் கலந்துகொள்வதற்காக தினசரி சைக்கிளில் செல்வது வழக்கம்.

சம்பவ தினம் காலை 5 மணி போல் வயோதிபர் அலயத்தை நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும் போது வீதியில் இவரை எதிர்பார்த்துக் காத்து நின்ற வாலிபர் வயோதிபரை கீழே தள்ளி விழுத்தி ஒரு கையால் தொண்டையும் மறுகையால் வாயைப் பொத்திய வண்ணம் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றுமாறு மிரட்டியுள்ளார்.

இவரின் மிரட்டலுக்குப் பயந்த முதயவர் அணிந்திருந்த இரு மோதிரங்களில் ஒரு மோதிரத்தைக் கழற்றி வாலிபரிடம் கொடுத்து விட்டார். மோதிரத்தைப் பெற்றுக் கொண்ட வாலிபர் மறுகணம் அந்த இடத்திலிருந்து ஓடிமறைந்து விட்டார்.

இந்தத் திருட்டுப் பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதைத் தொடர்ந்து புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் அதே இடத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவரை சந்தேகத்தின் பெயரிலே கைது செய்துள்ளனர். (ஓ-115)

## சமுர்த்திக் கொடுப்பனவை வழங்குமாறு பணிப்புரை

யாழ்ப்பாணம்,ஏப். 13

யாழ்.மாவட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவினை வழங்குமாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவு வழங்கப்படாமை குறித்து முறையிடப்பட்டதையடுத்து யாழ்.மாவட்ட செயலகம் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த கொடுப்பனவுகள் சமுர்த்தி வங்கிகளில் வழங்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# கூட்டு ஒப்பந்தத் துரோகத்துக்கு எதிராக துண்டுப்பிரசுரப் போர்

## 15 முதல் மலையகத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு அதிரடி

கூட்டு ஒப்பந்தத் துரோகச் செயலுக்கு எதிராக மாபெரும் துண்டுப் பிரசுரப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ள மலையக தொழிற்சங்கக் கூட்டமைப்பு, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது.

கூட்டு ஒப்பந்தத்தினூடாக தோட்டத்தொழிலாளர்களுக்கு இழைக்கப்படவுள்ள அநீதிகள், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தொழிற்சங்கங்களின் சதி நடவடிக்கைகள் உட்பட தொழிலாளர்களைத் தெளிவுபடுத்தும் வகையில் மேலும் பல விடயங்கள் துண்டுப்பிரசுரத்தில் உள்ளடக்கப்படவுள்ளன.

# மானிப்பாய், சுன்னாகம், நல்லூர் நகர சபைகளாக விரைவில் தரமுயர்வு

## உள்ளூராட்சி அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். மாவட்டத்திலுள்ள நல்லூர், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய பிரதேச சபைகளின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் அவற்றைத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ''நல்லூர், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய பிரதேசசபைகளை நகரசபைகளாகத் தரமுயர்த்துமாறு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு, பல மாதங்கள் கடந்தும் எந்தவித முன்னேற்றமுமில்லை. இது தொடர்பாக அமைச்சர் விளக்குவாரா? என்று நாடாளுமன்றில் எழுத்துமூலமாக சமர்ப்பித்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

''உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் கட்டளைச் சட்டப்படி தேசிய எல்லை நிர்ணயக்குழு மற்றும் மாவட்ட எல்லை நிர்ணயக்குழு என்பவற்றின் மூலம் உள்ளூராட்சி சபைகளின் வட்டார எல்லைகளை நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எனவே எல்லைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் முடிவுற்றதன் பின்னர் நல்லூர், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய பிரதேச சபைகளை நகரசபைகளாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.'' என்று அமைச்சர் அதாவுல்லா பதிலளித்துள்ளார். (ங)

# சமாதானத்துக்காகப் பாடுபடுவோம்

## புதுவருட வாழ்த்தில் ரணில்

சமாதானத்துக்கும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கும் இந்தப் புத்தாண்டு தினத்திலிருந்து முயற்சிகளை மேற்கொள்வோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வாழ்த்துச் செய்தியில்- புதுவருடப்பிறப்பை சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றி வரவேற்பது எமது வழக்கமாகியுள்ளது. புத்தாண்டு சம்பிரதாயங்கள் எமது குடும்பத்தில் மட்டுமன்றி, அயலிலுள்ளவர்களுடனும், நண்பர்களுடனும் மற்றும் பிற இனத்தவர்களுடனும் கூடி சமாதானத்துடனும் - சகோதரத்துவத்துடனும் வாழும் பண்பை எமக்குப் போதிக்கிறது.

ஆனால், இந்த ஒற்றுமையெல்லாவற்றையும் அழித்துவிடும் பின்னணியொன்று இந்நாட்டில் உருவாகிவருவது துரதிர்ஷ்டமானதாகும்.

இந்த நாட்டின் எதிர்கால சுபீட்சம் ஒளிர்வது சமாதானத்தை நிலைநிறுத்துவதிலும் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதிலும் மாத்திரமேயாகும். இந்த சமா தானத்துக்கும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கும் இந்தப் புத்தாண்டு தினத்திலிருந்து முயற்சிகளை மேற்கொள்வோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### ஈழப்போருக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தியதாலேயே அங்கு போர் வெடித்தது. இந்தப் போருக்கு முழுப் பொறுப்பும் இலங்கை அரசுடையதே.

எங்கள் அரசு ஒரு போதும் வன்முறையை விரும்புவதில்லை. வன்முறையை ஊக்குவிப்பதும் இல்லை. எமது அரசு, இந்திரா காந்தி காலம் முதல் ஈழத் தமிழர்களுக்கு உதவி வருகின்றது.

அதனை அறியாத தமிழக அரசியல் கட்சிகள் எங்கள் மீது குற்றஞ்சுமத்துகின்றன.

கோத்தபாய ராஜபக்ஷ, எம்மையும் எமது அரசையும் குற்றம் சொல்லியிருப்பதைக் கண்டிக்கின்றோம் - என்றார். (த-5)

### பொறுப்புக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மற்றும் நல்லிணக்க உணர்வுகளுடன் மக்கள் ஒன்றிணையும் சந்தர்ப்பத்தை புது வருடம் உருவாக்கித் தருகிறது என்றார்.

உலகம் முழுவதும் வாழுகின்ற சிங்கள - தமிழ் மக்கள் புதுவருடத்தைக் கொண்டாடுவதையொட்டி உங்களை நான் வாழ்த்துகின்றேன். மகிழ்ச்சியான ஓய்வு நாள்களும் செழிப்பு மிக்க புது வருடமும் உங்களுடையவையாகட்டும் என்று அவர் தனது செய்தியில் குறிப்பிட்டார்.

இலங்கை எதிர்நோக்கும் முக்கிய விடயங்களில் இலங்கையோடும் இலங்கையர்களோடும் ஒன்றாகப் பங்காளியாக நிற்க நாம் தயாராக இருக்கிறோம் என்றார்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் நீங்கள் மேற்கொண்டுள்ள பணிகளில் நாம் மிக ஆர்வத்துடன் அதிபர் ஒபாமாவின் சார்பில் கலந்து கொள்கின்றோம் என்று ஜோன் ஹெரி தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (த-ப)

### பிரதேச...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சேருவில பிரதேச சபை உறுப்பினர் க.சிவலோகேஸ்வரனுக்கு இனந்தெரியாத சிலர் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு சிவலோகேஸ்வரன் வீட்டுக்குச் சென்ற இருவர், அவரிடம் ஏன் வழக்குத் தாக்கல் செய்தீர்கள்? என்று மிரட்டும் பாணியில் கேட்டுள்ளனர்.

''எனது உயிருக்கு ஏதாவது நேருமாக இருந்தால் அதற்கு இந்த அரசுதான் முழுப்பொறுப்பு'' என்று பிரதேச சபை உறுப்பினர் சிவலோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-5)

### பிரபாகரனும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யும் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். பிரபாகரன் மற்றும் சூசையின் குண்டுதுளைத்த உடல்களை நாம் கண்டெடுத்தோம். அவர்கள் கடைசிவரை போராடியே மரணமானார்கள் என்பதை வெளிப்படுத்தும் ஆதாரங்கள் எமக்குக் கிடைத்தன.

பிரபாகரனும், சூசையும் சயனைட் உட்கோள்ளவோ, தற்கொலை செய்து கொள்ளவோ இல்லை. விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் மனைவி தற்கொலை செய்து கொண்டிருந்தார். சயனைட் அருந்திய நிலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அவரது கழுத்தில் இன்னொரு சயனைட் கிடந்தது.

பொட்டுஅம்மானின் நிலை குறித்து இலங்கை இராணுவம் அறியவில்லை.அவர் பற்றி எமக்குத் தகவல் கிடைக்கவில்லை. ஆனால், கடலேரியில் இருந்து தப்பிச்செல்ல முயன்றபோது, அவரும் கொல்லப்பட்டு விட்டார் என்றே நாம் நம்புகிறோம்.

தற்கொலை அங்கியை வெடிக்க வைத்துப் பொட்டுஅம்மான் இறந்ததாக கே.பி அறிக்கை வெளியிட்டிருந்தார் என்றார். (த)

# கிரிக்கெட் சபை நிர்வாகத் தெரிவுக்கு தேர்தல் திணைக்களம் ஒத்துழைப்பு

கொழும்பு, ஏப்.13

இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தேர்தல் திணைக்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் வேண்டுகோளின் பிரகாரமே தேர்தலுக்கு உதவி வழங்குவதற்கு தேர்தல் திணைக்களம் இணங்கியுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபைக்கான தேர்வு எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் நிர்வாக சபைத் தெரிவுக்கான தேர்தலொன்றுக்கு தேர்தல் திணைக்களம் தலையிடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இந்த விவகாரமானது கிரிக்கெட் இரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு அண்மையில் தேர்தல் நடைபெறவிருந்தது.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதி பாலவினால் ஏற்பட்ட சர்ச்சையால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட்சபை தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதி பால தாக்குதல் செய்திருந்த வேட்பு மனு விளையாட்டுத் துறை அமைச்சரினால் நிராகரிக்கப்பட்டது. இதற்கு எதிராக திலங்க சுமதிபாலவால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவும் நிராகரிக்கப்பட்டது.

விளையாட்டுச் சட்டத்தில் அண்மையில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களின் பிரகாரமே இந்த மனு நிராகரிக்கப்பட்டது. புதிய சட்டத் திருத்தத்தின் பிரகாரம் ஊடக நிறுவனத்தின் உரிமையாளராக இருப்பவர் கிரிக்கெட் சபை நிர்வாக உறுப்பினர் பதவிக்கு போட்டியிடமுடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, கிரிக்கெட் சபையின் ஆயுட்காலத்தை இரண்டு வருடங்களாக நீடித்துள்ள விளையாட்டுத்துறை அமைச்சு எதிர்காலத்தில் அதை 4 வருடங்களாக அதிகரிப்பதற்கு முஸ்தீபு செய்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

16ஆம் திகதி பி.எம்.ஐ.சீ.எச். (B.M.C.H) நடைபெறவுள்ள தேர்தலில் கிரிக்கெட் சபைக்கான செயலாளர் உட்பட முக்கிய பல பதவிகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தலை நடத்தும் நோக்கிலேயே தேர்தல் திணைக்களத்தின் ஒத்துழைப்பை கிரிக்கெட் சபை கோரியுள்ளது எனத் தெரியவருகின்றது.

# அனைத்து மக்கள் வாழ்விலும் மகிழ்ச்சி - சுபீட்சம் மலரட்டும்

## ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்து

கொழும்பு,ஏப் 13

மலரும் புத்தாண்டை எல்லோரும் மகிழ்ச்சியுடன் வரவேற்போம் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விடுத்த புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சித்திரைப் புதுவருடம் நாம் பண்டைய காலம் தொட்டு கொண்டாடிவரும் மிகப்பெரும் கலாசாரப் பண்டிகையாகும். இது சூரியனுடனான பூமித்தாயின் மேன்மைமிக்க சங்கமத்தை குறித்து நிற்கும் பண்டிகையாகும். ஒரு விவசாய வாழ்க்கை முறையால் போஷிக்கப்பட்ட இலங்கையர்கள் இந்தப் பாரம்பரிய புத்தாண்டுப் பிறப்பை அர்த்தமிக்கதாய் ஏற்று மகிழ்கின்றனர்.

புத்தாண்டின் முழுமையான மகிழ்ச்சி வீடும், குடும்பச் சூழலும் நிறைவுற்று விளங்கும் சுதந்திரமானதொரு நாட்டிலேயே சாத்தியமாகும். அரிசியில் நாட்டைத் தன்னிறைவடையச் செய்து, ஒழுக்கப் பெறுமானங்கள் நிறைந்தொரு சமூகத்தைக் கட்டியெழுப்பி, மகிழ்ச்சி நிறைந்த இப்புத்தாண்டுப் பிறப்பைக் காண்பது எமக்கு மிகுந்த திருப்தியைத் தருகின்றது.

முன்னெப்போதுமில்லாத வகையில் இன்று எமது மக்கள் புத்தாண்டுப் பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பது எம் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது.

புத்தாண்டுப் பாரம்பரியங்கள் காரணமாக குடும்பங்களிடையே நாம் காணும் பிணைப்பு எமது சமூகத்தை மேலும் பலப்படுத்துகின்றது. எனவே, கடந்த பல நூற்றாண்டுகளாக நாம் பேணிப்பாதுகாத்துவரும் பாரம்பரியங்களை மதித்து, அவற்றை எதிர்கால தலைமுறையையும் பின்பற்றுவதற்கு வழி செய்ய வேண்டும். இதன் மூலமே தேசத்தின் இருப்பு உறுதியாகிறது.

உங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியும் சபீட்சமும் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புத்தாண்டி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் எனவும், இறைவன் ஒருபோதும் தமிழரைக் கைவிடமாட்டார் எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் நேற்று 'உதயனி'டம் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் தொடர்பில் நியாயமான கோரிக்கைகளையே நாம் முன்வைத்துள்ளோம்.

இந்த நாட்டில் நாம் சுதந்திரமாக - தமிழ்ப் பிரஜைகளாக வாழ விரும்புகின்றோம். வன்முறைகளை நாம் ஒருபோதும் விரும்பியதில்லை.

ஆனால், எமது கோரிக்கைகளை - விருப்பங்களை முறியடிக்க பல்வேறு சதி வேலைகளில் இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது. காடையர் கும்பல்களைக் களமிறக்கி தமிழ் மக்கள் மீதும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும், தமிழருக்காகக் குரல் கொடுக்கும் ஊடகங்கள் மீதும் காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. தமிழர்களை இந்த அரசு வலிந்து வன்முறைக்கு இழுக்கின்றது. ஆனால், நாம் பொறுமையுடன் கொண்ட இலட்சியத்தில் உறுதியாக நிற்கின்றோம்.

கடந்த வருடங்களில் இலங்கை அரசு தமிழர்களின் கோரிக்கைகளை செவிசாய்க்காமல் காடைத்தனத்தில் ஈடுபட்டதனால்தான் சர்வதேச வலைக்குள் சிக்கித் தவிக்கின்றது.

எனவே, மலரும் தமிழ் - சிங்கள புத்தாண்டிலாவது இலங்கை அரச தரப்பினர் தமது காடைத்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் தமிழருக்குத் தீர்வை வழங்க முன்வரவேண்டும்.

அதேவேளை, தமிழ் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்க அரசின் அடிவருடிகளினால் மேற்கொள்ளப்பட்டும் சதி வேலைகளுக்குள் எமது மக்கள் சிக்கக்கூடாது. தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். இறைவன் எமக்கு உதவி செய்வார். இறைவன் ஒருபோதும் தமிழரைக் கைவிடமாட்டார் - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன்.

### கோத்தாவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆழ்ந்த கவனத்தில் கொண்டுள்ளது. இந்த விவகாரத்தை ஆராய்ந்து இலங்கை அரசுக்குப் புதுடில்லி தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும். ''இது ஒரு சாதாரண விடயமாகக் கருதப்பட்டுவிட முடியாது'' - என்று இந்தியாவின் மூத்த இராஜதந்திரியொருவர் நேற்று மாலை 'உதயனி'டம் தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளரின் இந்தக் கருத்து தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயமும் விரிவான அறிக்கையொன்றை புதுடில்லியிலுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசுக்குத் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு அழுத்தங்களை வழங்கவேண்டுமென தமிழ்நாட்டில் வலுவான கோரிக்கை விடுக்கப்பட்டுவரும் நிலையில், கோட்டாபயவின் இந்தக் கருத்து இந்திய மத்திய அரசுக்குப் பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாக மேலும் அறியமுடிகின்றது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்கத்தை உற்பவிக்க உதவாத கருத்து நீள்வது ஏன்...?

* இலங்கையில் முப்பது வருடங்களாக நடை பெற்ற போருக்கு முழுக்க முழுக்க இந்தியாவே காரணம். அது பொறுப்புணர்வுடன் செயற்பட்டிருந்தால், இலங்கை மக்கள் அந்த நீண்ட காலப் போரினால் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.

* நாட்டின் முப் படைகளும் இணைந்து, 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் பயங்கர வாதத்தைப் பூண்டோடு அழித்திருக்காவிடில், சகல இனங்களையும் சேர்ந்த மக்கள் இப்போதும் அதன் பயங்கரங்களை அனுபவிக்க நேரிட்டிருக்கும்.

* இலங்கையில் பயங்கரவாதத்துக்கு வித்திட்ட இந்தியா அதனை ஒப்புக் கொள்ள மறுத்தாலும், அந்தக் குற்றத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது. இலங்கையை மறைமுகமாகத் தாக்குவதன் மூலம் அதனைப் புரட்டுவதற்கு நேரடியாக செயற்பட்டவர்களில் சிலர், தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு [ஜனாதிபதி] மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறார்கள்.

மேற்கண்டவாறு காரசாரமாக, கருத்து வெளியிட்டு இருக்கிறார் : கடும் தொனியில் கண்டித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பதவி வகித்த ஹாடிப் சிங் பூரி வெளியிட்ட கருத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலேயே, பாதுகாப்புச் செயலாளரின் ஆவேசமான கருத்து பீறிட்டுள்ளது.

ஹாடிப் சிங் பூரியும் அவரது மனைவி லஷ்மியும் 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான காலப்பகுதியில் ஜே.என்.டிக்ஸிற் அந்த நாட்டின் தூதுவராகப் பணியாற்றிய காலத்தில், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உயர் அதிகாரிகளாகக் கடமையாற்றியவர்கள்.

இறுதிப் போரின் கடைசி நூறு நாள்களிலும் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஹாடிப் சிங் பூரி தெரிவித்த கருத்தே பாதுகாப்புச் செயலாளருக்குக் ' கடுப்பை' ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இயக்கங்களுக்கும் இந்தியா ஆயுதப் பயிற்சி வழங்கியது. தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்குத் தாராளமாகப் பணம் வழங்கப்பட்டது: ஆரம்பத்தில் கரந்தடி இயக்கமாக இருந்த அவர்கள் மரபுவழி இராணுவமாக மாறியதில் இந்திராகாந்திக்கு பெரும் பங்குண்டு.

சமாதானப் பேச்சுகள், ஒப்பந்தங்கள் எல்லாம் தோல்வியடைந்த நிலையில், ஆயுதப் போராட்டம் மூலமே இலங்கை அரசை வழிக்குக் கொண்டுவர முடியும். தமிழ் மக்கள் சுய கௌரவத்துடன் வாழும் சூழ்நிலையை உருவாக்க இயலும் என்று இந்திரா காந்தி நம்பினார்.

ஆனால் துரதிர்ஷ்டமாக இந்திரா காந்தியின் மரணத்துக்குப் பின்பு இந்தியக் கொள்கையில் மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டது. 1987 ஒப்பந்தத்துக்குப் பின்னர் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்தியப் படைகளுக்கும்,விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர், ராஜீவ் காந்தி கொலை என்பன மாற்றத்துக்கு வழிவகுத்தன எனலாம். விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்தியா உறுதி பூண்டது. இறுதியில் 2009 இல் விடுதலைப் புலிகளை அழிப்பதில் இந்தியாவின் வகிபாகம் பிரதானமாக இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளை வளர்த்ததும் இந்தியாதான். பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் இழப்புகளுடன் அழித்ததும் இந்தியாவே. விடுதலைப் புலிகளை இந்தியா வளர்த்ததையே பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார். அழித்தது குறித்து வாயும் திறக்கவில்லை.

போர் மூண்டு நீடித்ததற்கான காரணம் கண்டறியப்படவேண்டும். மீண்டும் ஓர் ஆயுத மோதல் சூழ்நிலை உருவாவதைத் தடுக்கும் அரசியல் நடவடிக்கைகளே தேவை. பிராந்திய வல்லரசாக உருவாகிவரும் இந்தியாவின் அரசியல் போக்கு தொடர்ந்தும் ஒருமாதிரி இருக்கப் போவதில்லை. 1987 இல் இந்தியா நேரடியாகத் தலையிட்டதை இலங்கை ஏன் ஒரு பாடமாகக் கருதக் கூடாது .அந்த வழி சிந்திக்க அதற்கு விருப்பமற்றுப் போனது ஏன்...?

இலங்கையில் தமிழர் மண்ணில் இறுதிப் போர் நடைபெற்ற 2009 இல் தமிழகத்தில் ஏற்பட்டிருக்காத வேகமும், போராட்டங்களும் இப்போது வெடித்து, மத்திய[ புதுடில்லி] அரசையும் ஓர் உலுக்கு உலுக்கி உள்ளது. பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் யஷ்வந் சிங், ஈழத் தமிழ் மக்களுக்கு தமிழீழமே தீர்வு என்று கருத்து வெளியிடும் அளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன.

யார் சன்னதம் ஆடினாலும் ஆடட்டும், தான் நினைத்ததையே செய்வது என்ற அழுங்குப் பிடியில் நிற்கிறது அரசு. பழையனவற்றைக் கிளறிக் கொண்டு, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைக் கணக்கில் எடுக்க மனம் கொள்ளாமல்-

அவர்களின் உரிமைகளை உறிஞ்சி எடுக்கும் போக்குடன் செயற்படுவதும், ஏன் எதிர்மறையான, எதிர் மாறான கருத்துக்களை கூறுவதும், நல்லிணக்கத்தை ஒருபோதும் கொண்டு வரமாட்டா என்பதனை ஆட்சியாளர்கள் உணரப்போவது எப்போது... ?

# வாகன வரிச் சலுகையால் 5,700 கோடி ரூபா இழப்பு

கொழும்பு, ஏப்.13

அரச ஊழியர்களுக்கு வரிச் சலுகை முறையில் வாகனங்களை இறக்குமதி செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் காரணமாகக் கடந்த இரண்டு ஆண்டுகளுள் அரசுக்கு 5700 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வரிச் சலுகை முறையில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக கடந்த 2011ஆம் ஆண்டில் அரசுக்கு 1,830 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதோடு அது கடந்த ஆண்டில் 3,860 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது.

அரச சேவையில் மற்றும் அரச சிறுதொழில் முயற்சி சேவை ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள நிறைவேற்று மட்டத்திலுள்ள நிர்வாக முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் தொழில்சார் பதவிகளிலுள்ள அதிகாரிகளுக்கு வரிச் சலுகை நிபந்தனைகளின் கீழ் கார்களை இறக்குமதி செய்து கொள்வதற்கு அல்லது உள்ளூரில் ஒருங்கிணைக்கப்படும் வாகனங்களைக் கொள்வனவு செய் வதற்கு நிதி அமைச்சினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

ஆறு ஆண்டுகள் காலம் தொடர்ச்சியான மற்றும் காத்திரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள முப்படைகளின் லெப்ரினன்ட் கேணல், லிங்க் கொமாண்டர் அல்லது அதற்கு மேலான பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அதிகாரிகளும், முப்படைகளில் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக ஆறு ஆண்டு காலம் சிறப்பான சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள வைத்தியர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள், கட்டடக் கலைஞர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரும் இந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற முடியும்.

அத்துடன் பல்கலைக்கழகங்களின் கல்வி சாரா அலுவலக ஊழியர் குழுக்களில் 8 ஆண்டு காலச் சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள மற்றும் மேற்படி பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் பல்கலைக் கழகங்களின் வேந்தர்களும் இந்தச் சலுகையைப் பெறமுடியும்.

அரச சிறுதொழில் முயற்சிகளின் சிரேஷ்ட மட்டத்திலான பதவியொன்றில் 12 ஆண்டுகால காத்திரமான சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள மற்றும் சம்பந்தப்பட்ட பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்களும் இதனைப் பெறலாம்.

இவ்விதம் இறக்குமதி செய்யப்படும் அல்லது உள்ளூரில் கொள்வனவு செய்யப்படும் அதிகபட்சமாக 25ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதிக்கு உட்பட்ட வாகனங்களை மூன்றாண்டுகள் செல்வதற்கு முன்னர் பிறருடையதாக்க முடியாது என்ற நிபந்தனை அண்மையில் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-22)

## காசோலைகளில் கையொப்பமிடும் உத்தியோகத்தர்களின் விவரம்

### மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் அறிவிப்பு

தென்மராட்சி, ஏப். 13

உள்ளூராட்சி மன்றங்களில் காசோலைகளில் கையொப்பமிடும் உத்தியோகத்தர்கள் தொடர்பான விவரங்கள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர் மற்றும் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் காசோலைக்கு கையொப்பமிடும் முறை நடைமுறையில் இருந்தது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டு மாநகர முதல்வர், நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றின் தவிசாளர்கள் காசோலைகளில் கையொப்பம் வைப்பதற்குப் பதிலாகசபையில் கடமை யாற்றும் இரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் காசோலையில் கையொப்பமிடுமாறு அறிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்கள் காசோலையில் கையொப்பமிட்டு வந்தனர்.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூவினால் உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதப் பிரகாரம் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாநகர சபையில் இரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் நகரசபைகளில் செயலாளரும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும் (கணக்காளரும் ) பிரதேச சபைகளின் செயலாளரும் பிரதம முகாமைத்துவ உதவியாளரும் காசோலைகளில் கையொப்பமிடல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநடைமுறை கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் அறிவித்துள்ளார். (த-9)

## தூத்துக்குடி மீனவர்கள் பட்டினிப் போர்

தூத்துக்குடி,ஏப்.13

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி நெல்லை தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் நேற்று ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 22 கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் புறக்கணித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு கிராமங்களிலும் மீனவச் சங்கங்கள் ஊடாக அந்தந்த கிராமங்களில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை மனித நேய மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுதல் கைது செய்யப்படுதல் போன்ற சம்பவங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று சென்னையில் இடம்பெற்றது. (ஒ-14)

# இனத்துவேசத்தைப் பரப்ப பொய்யுரைக்கிறார் சம்பிக்க

### சாடுகிறார் மனோ கணேசன்

கொழும்பு,ஏப். 13

இலங்கை வந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொய்யுரைத்து, இனத்துவேசம் பரப்ப வேண்டும் என்பதற்காகவே அமைச்சர் சம்பிக்க கொழும்பில் சிங்களைவர்களைவிட தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றனர் என்று அப்பட்டமான பொய்யைச் சொல்லியுள்ளார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு நகரில் 2 இலட்சத்து 4 ஆயிரத்து 520 சிங்களவர்களும், ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 198 தமிழர்களும் வாழ்கின்றனர். இலங்கை அரசின் புள்ளி விவரத் திணைக்களம் 2011ஆம் ஆண்டு நடத்திய சனத்

**அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர் பதவியையும், கட்சிப் பதவி போல் உண்மையை மறைத்துப் பொய் கூறுவதற்கு பயன் படுத்துவதும் இதன்போது அம்பலமாகியுள்ளது.**

தொகைக் கணக்கெடுப்பின்படி இதுதான் உண்மை. இதைவிட ஜாதிக ஹெல உறுமய வேறு ஒரு புள்ளி விவரத் திணைக்களத்தை நடத்துகின்றதா என்று கேட்க விரும்புகின்றேன்.

இவர் முழு நாட்டுக்கும் பொறுப்பான ஓர் அமைச்சர். இன்று இவர் தனது அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர் பதவியையும், கட்சிப்பதவி போல் உண்மையை மறைத்துப் பொய் கூறுவதற்கு பயன்படுத்துவதும் அம்பலமாகியுள்ளது.

இலங்கை வந்த இந்திய நாடாளுமன்ற குழுவினர் இந்தப் பொய்களைக் கேட்டுக் கொண்டுதான் நாடு திரும்புகிறார்களோ என்று எனக்குத் தெரியவில்லை. இனவாதக் கண்ணோட்டத்தில் கழுத்து இறுகிப்போன சம்பிக்கவின் நம்பகத்தன்மை இன்று, இந்தப் பொய்த் தகவல்கள் மூலம் சந்தி சிரிக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதுபோலவே இனப்பிரச்சினை தொடர்பாகவும் உண்மைக்குப் புறம்பான, தேசிய நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் இனவாதக் கருத்துக்களை ஹெல உறுமய தொடர்ந்து தெரிவித்து வருகிறது-என்றார். (த-5)

# ஓய மாட்டோம்

## தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக்குழு அறிவிப்பு

சென்னை, ஏப். 13

முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நினைவுகூரும் வகையிலும், இந்திய மத்திய அரசின் தமிழின விரோதக் கொள்கையைக் கண்டித்தும் இந்தமாதம் 15ஆம் திகதி முதல் எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி வரை தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக் குழு அறிவித்துள்ளது.

நேற்றுச் சென்னையில் தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக் குழு நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே குழு இணைப்பாளர்கள் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

இறுதிப்போரின் போது முள்ளிவாய்க்காலில் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவுகூரும் வகையில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் மே மாதம் 19ஆம் திகதிவரை தொடர் போராட்டங்களைத் தமிழகமெங்கும் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

போராட்டங்களை நான்கு கட்டங்களாக முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. போராட்டம், பிரசாரம் என்று பல வழிகளில் அவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை இலங்கையைப் புறக்கணிப்போம் என்ற முழக்கத்தின் கீழ் இலங்கை தூதரகத்தை அகற்ற வேண்டும், ஐ.பி.எல். கிரிக்கெட் ஆட்டங்கள், பொது நலவாய மாநாடு போன்றவற்றை புறக்கணிக்கக் கோரும் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

இரண்டாம் கட்டமாக ஏப்ரல் 22ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை செங்கல்பட்டு, பூந்தமல்லியில் உள்ள இலங்கை அகதிகள் சிறப்பு முகாம்களை மூடக் கோரியும், அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கக் கோரியும் முகாம்களை நோக்கி மாணவர்கள் பிரசாரப் பேரணியை நடத்தவுள்ளோம்.

மூன்றாம் கட்டமாக இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்படுவதைக் கண்டித்து மாணவர்கள், மீனவர்கள் கூட்டுப் போராட்டம் ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் மே 5 ஆம் திகதிவரை நடைபெறும்.

நான்காம் கட்டமாக இந்திய மத்திய அரசின் தமிழின விரோதக் கொள்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம், பிரசாரம் என்பன மே மாதம் 6 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை நடைபெறும் - என்று அவர்கள் தெரிவித்தனர். (ற)

## தவறான தகவல்களை பரப்புகிறது தி.மு.க.

### மாணவர்கள் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.13

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் லயோலாக் கல்லூரி மாணவர்கள் தி.மு.கவில் இணைந்து விட்டனர் என்று தொடர்ச்சியாக கலைஞர் தொலைக்காட்சி வெளியிட்டுவரும் கருத்து போராட்டத்தைத் திசைதிருப்பும் செயல் என்று குற்றஞ்சாட்டியுள்ளது லயோலாக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பு.

இதுகுறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

7 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கற்கும் கல்லூரியில், ஒரு சில மாணவர்கள் தமது கட்சியில் இணைந்ததைக் காரணம் காட்டி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அனைவரும் தி.மு.க.வில் இணைந்து விட்டனர் என்று தவறான செய்தியைப் பரப்பி வருகிறது கலைஞர் தொலைக்காட்சி.

தமிழீழ விடுதலைக்கான உணர்வெழிச்சியுடன் போராடி வரும் மாணவர்களின் போராட்டங்களைத் திசைதிருப்பி, அவற்றை மழுங்கடிக்கும் செயற்பாடாகவே இதைக் கருத வேண்டியுள்ளது. இவ்வாறான செய்திகளைத் திரும்பத் திரும்ப ஒளிபரப்புவதன் மூலம் மாணவர்கள் தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் என்ற விம்பத்தை உருவாக்க முயல்கிறது தி.மு.க.

ஐ.நா. தீர்மானத்துக்கு பிறகு நீர்த்துப் போய்விடும் என பகல் கனவு கண்டு கொண்டிருந்தவர்கள் நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் இந்த வேளையில் தொடரும் மாணவர் போராட்டத்தைக் கண்டு செய்வதறியாமல் விழி பிதுங்கி நிற்கின்றனர். விரைவில் தொடங்கும் மாணவர் போராட்டம் இலக்கை அடையாமல் ஓயாது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## டில்லியில் தீ விபத்து; குடிசைகள் நாசம்

புதுடில்லி, ஏப். 13

வடமேற்கு டில்லியில் பாவானாவில் உள்ள குடிசைப்பகுதியில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டது. நேற்றுப் பிற்பகல் ஒரு குடிசையில் ஏற்பட்ட தீ மற்ற குடிசைகளுக்கும் வேகமாகப் பரவியது. இதனால் அந்த இடம் முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

20 தீயணைப்பு வாகனங்களில் தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க போராடி வருவதாகவும் இதில் ஏராளமான குடிசைகள் நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

குடிசைப்பகுதியில் இருந்து சிலிண்டர் வெடித்தது போன்று ஒரு சத்தம் கேட்டது என்றும், அதன்பின்னர் தீ பிடித்ததாகவும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## தமிழர் மூவரையும் காப்பாற்ற சட்டசபையில் தீர்மானம்

### நிறைவேற்ற வேண்டும் என்கிறார் ராமதாஸ்



சென்னை, ஏப்.12

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரைக் காப்பாற்றுவதற்காக தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரியுள்ளார் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்.

டில்லி குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தேவிந்தர் பால் சிங் புல்லார் என்பவர் தமது கருணை மனுவை குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்ததை எதிர்த்து தொடர்ந்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்ததுடன், அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்தும் தீர்ப்பளித்திருக்கிறது.

புல்லாரின் மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்திருப்பதால், அதே காரணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூன்று தமிழர்களின் மனுக்களையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்யும் ஆபத்துள்ளது.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை ரத்து செய்யக் கோரி கடந்த 2011-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோன்று அரசியல் சட்டத்தின் 161- வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மூவரின் தூக்கு தண்டனையை தமிழக ஆளுனர் இரத்து செய்ய வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றுவதன் மூலம் 3 தமிழர்களையும் காப்பாற்ற முடியும்.

அரசியல் சட்டத்தின் 161-ஆவது பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மூவரின் தூக்கு தண்டனையை தமிழக ஆளுனர் ரத்து செய்யும் பட்சத்தில் அதில் யாரும் தலையிட முடியாது.

எனவே, தமிழக முதலமைச்சர் உடனடியாக அமைச்சரவையை கூட்டி, தீர்மானத்தை நிறைவேற்றி பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று தமிழர்களின் உயிரையும் காப்பாற்ற வேண்டும்- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## உடையுமா தே.ஜ. கூட்டணி?

### பிரதமர் வேட்பாளர் யார்? கட்சிகளுக்குள் 'குடுமிப்பிடி'



சென்னை, ஏப்.13

பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரதமர் வேட்பாளரை முன்னதாகவே அறிவிக்க வேண்டும் என்று கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஐக்கிய ஜனதா தளம் போர்க்கொடி தூக்கியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி இன்று தீர்மானம் நிறைவேற்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதையடுத்து தே.ஜ.கூட்டணி உடையுமா என்ற பரபரப்பு டெல்லி அரசியல் வட்டாரங்களில் உருவாகியுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் தே.ஜ. கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக நரேந்திரசிங் மோடி அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அந்தக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஐக்கிய ஜனதாத் தளம் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இதுகுறித்து அந்த கட்சி கருத்துத் தெரிவிக்கையில்,

''மக்களவைத் தேர்தலுக்கு அனைத்து கட்சிகளும் தயாராகி வருகின்றன. தே.ஜ. கூட்டணியும் தயாராக வேண்டும். அதன் முதற்கட்டமாக கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை அறிவிக்க வேண்டும். அப்போதுதான் கூட்டணிக் கட்சியினர், சுறுசுறுப்பாக களப்பணிகளை மேற்கொள்ள முடியும். ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் இன்று இது குறித்து முடிவெடுக்கும்''- என்று தெரிவித்துள்ளது. (ற)

## மன்மோகன் விருந்தில் புகுந்த நரியால் பரபரப்பு

பேர்லின், ஏப்.13

ஜேர்மனில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்ட விருந்தின்போது திடீரென நரி ஒன்று நுழைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

பிரதமர் மன்மோகன்சிங் மூன்று நாள் பயணமாக ஜேர்மனிக்குச் சென்றுள்ளார். பெர்லின் நகரில் பிரதமர் மன்மோகன் சிங்கை வரவேற்று, அந்த நாட்டு ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல் விருந்தளித்தார்.

இந்த விருந்தின் போது நரி ஒன்று திடீரென உள்ளே நுழைந்தது. சில நிமிடங்கள் அந்த நரி பாதுகாவலர்களிடம் சிக்காமல், அங்கும் இங்கும் ஓடியது.

அங்கிருந்த பாதுகாவலர்கள் நரியைப் பிடிப்பதற்கு பெரும் முயற்சி எடுத்தனர். எனினும் அது கைகூடவில்லை. அதையடுத்து அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. கடைசியில் அந்த நரி தானாகவே அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டதாம். (ற)

## கருணை மனு மீதான தாமதத்தால் தூக்குத் தண்டனை குறையாது

### புல்லர் வழக்கில் நேற்றுத் தீர்ப்பு

புதுடில்லி, ஏப்.13

கருணை மனு மீது இந்தியக் குடியரசுத் தலைவர் தாமதமாக முடிவெடுத்தால் அதனை ஆயுள் தண்டனையாக குறைக்கலாமா என்பது குறித்து உச்சநீதி மன்றம் நேற்று முக்கியதீர்ப்பை அறிவித்தது. நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி, குரியன் ஜோசெப் அடங்கிய அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியது.

1993 ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்புடைய பஞ்சாப்பைச் சேர்ந்த புல்லருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. புல்லரின் கருணை மனுவை கடந்த 2011 ஆம் ஆண்டு அப்போதைய குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் நிராகரித்தார்.

இதனை அடுத்து கருணை மனு காலதாமதமாக நிராகரிக்கப்பட்டதால் புல்லரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்குமாறு கோரி புல்லரின் குடும்பத்தினர் உயர் நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுத் தாக்கல் செய்தனர்.

விசாரணை முடிந்த நிலையில், இந்த மனு மீது நேற்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. கார்க் குண்டு வெடிப்பு வழக்கில் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை குறைக்கக் கோரி தேவேந்தர் பால் சிங் புல்லர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு தமிழ்நாட்டுக்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றுள்ள மூன்று பேரின் மேல் முறையீட்டு மனுக்களும் தீர்ப்பளிக்கப்பட உள்ளதால் இந்தத் தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

புல்லருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை குறைக்கக் கோரி இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய கருணை மனுவை 8 ஆண்டுகளுக்குப் பிறகு, காலதாமதமாக பரிசீலித்து நிராகரித்ததைக் காரணம் காட்டி, தூக்குத் தண்டனையை இரத்து செய்ய முடியாது என்று உச்ச நீதிமன்ற நீதிபதி ஜே.எஸ். சிங்வி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (ற)

### டெல்லி மாணவி கொலை வழக்கு

## சம்பவ இடத்தில் இல்லை சந்தேகநபர்கள் மறுப்பு

புதுடில்லி, ஏப்.13

டில்லியில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கல்லூரி மாணவி 6 பேர் கொண்ட குழுவால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் இருவர், தாம் அந்தச் சமயத்தில் குறித்த பஸ்ஸில் இருக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான வழக்கு டில்லி விரைவு நீதிமன் றில் நடைபெற்று வருகின் றது. அங்கு நடைபெற்ற விசாரணைகளின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒரு சிறுவன் தவிர மற்ற 5 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் முக்கிய குற்றவாளியான பஸ் சாரதி ராம்சிங் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார். மற்றைய நான்கு பேரிடமும், சாட்சி களிடமும் டில்லி விரைவு நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையில், குற்றவாளிகள் வினய் சர்மா மற்றும் பவன் குப்தா இருவரும், குறித்த சம்பவம் நடந்த பஸ்ஸில் நாங்கள் இல்லை என்று நீதிபதியிடம் கூறியுள்ளனர். அவர்கள் இருவரும் நண்பர் ஒருவருடன் ஒரு இசைக்கச்சேரியில் கலந்துகொண்டதற்கான வீடியோ ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் காட்டினார்கள் என்று கூறப்படுகிறது.(ற)

# வரம்பை மீறுகிறது வடகொரியா

## கடுப்படைகின்றது அமெரிக்கா

**கொரிய தீபகற்பத்தில் நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி, நேட்டோ படைத் தலைவர் ஆண்டர்ஸ் பாக் ராஸ்முஸ்ஸன் ஆகியோர் இன்று தென்கொரியா தலைநகர் சியோல் செல்லவுள்ளனர்.**



வோஷிங்டன், ஏப்.13

வடகொரியா அபாயக் கோட்டைத் தாண்ட முயற்சிக்கிறது என்று எச்சரித்துள்ள அமெரிக்கா வடகொரியாவின் எந்தவித அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள அமெரிக்கா தயாராகவுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் சக் ஹெகல்,

''சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி அணு ஆயுத சோதனைகள் மேற்கொண்டமையால்தான் வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா. தடைகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது வடகொரியா அமெரிக்கா மற்றும் தென்கொரியா மீது தாக்குதல் நடத்தப்போவதாகக் கூறிவருவதுடன், மத்திய தூர இலக்குகளை தாக்கும் ஏவுகணை சோதனையை நடத்தவும் திட்டமிட்டுள்ளது.

இந்த முயற்சிகளைக் கைவிடும்படி வடகொரியாவின் நட்பு நாடுகளான சீனாவும், ரஷ்யாவும் வலியுறுத்தியுள்ளன. எனினும் அது குறித்து அந்த நாடு சாதகமான சமிக்ஞை எதையும் வெளியிடவில்லை.

போரைத் தூண்டும் வகையில் வடகொரியா பேசி வருவது, அந்த நாடு வரம்பை மீறி அபாயக் கோட்டைத் தாண்ட முயற்சிப்பதையே காட்டுகிறது. அவர்களது பேச்சும், செயற்பாடும், பதற்றத்தை மேலும் அதிகரிக்கின்றன. வடகொரியா எடுக்கக் கூடிய எந்தவிதமான நடவடிக்கையிலிருந்தும் எங்களையும், எங்களின் நட்பு நாடுகளையும் பாதுகாத்துக் கொள்ளும் திறன் எமக்கு உண்டு. எந்தச் சவாலையும் எதிர்கொள்ள தயாராக உள்ளோம். வடகொரியா அரசு மற்றும் அதன் ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் செயற்பாடுகளை கணிக்க முடியவில்லை''- என்று தெரிவித்தார். (ற)

## பெலஸ்ரிக் ரக ஏவுகணை வடகொரியாவிடம் உண்டு

### அமெரிக்க உளவு நிறுவனம் எச்சரிக்கை

நியூயோர்க், ஏப்.13

அணுவல்லமை கொண்ட பெலஸ்ரிக் ரக ஏவுகணையை ஏவும் திறன் வடகொரியாவிற்கு உள்ளதாக அமெரிக்க உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனால் வடகொரியா பரீட்சிக்கவுள்ள ஏவுகணை குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அந்த உளவு நிறுவனம் அமெரிக்க மற்றும் தென்கொரிய நாடுகள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதத்தின் தரவுகளுக்கு அமைய முதல் முறையாக அமெரிக்க பாதுகாப்புப் புலனாய்வு நிறுவனம் இவ்வாறான தீர்மானத்திற்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான நம்பகத்தன்மை மிக் குறைவாகவே உள்ளது என்று தெரிவித்துள்ள குடியரசு கட்சியை சேர்ந்த அமெரிக்க பிரதிநிதி லம்போர்ன், எவ்வளவு வீச்சு கொண்ட ஏவுகணைகளை வடகொரியா கொண்டுள்ளது என்பது குறித்து எந்தவித தகவல்களையும் வெளியிடவில்லை. (ற)

## இந்தியாவுடனான உறவு எதிர்காலத்தில் பலப்படும்

### பென்டகன் தெரிவிப்பு

வோஷிங்டன், ஏப்.13

எதிர்காலத்தில் இந்தியாவுடன் நீண்ட கால இராணுவ ஒத்துமைப்பு மேற்கொள்வதில் தீவிர கவனம் செலுத்தப்படும் என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறைத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்புத் தொடர்பான நிலைப்பாட்டை ஜனாதிபதி ஒபாமா தலைமையிலான அரசு மறு ஆய்வுக்குட்படுத்தி வரும் நிலையிலேயே பென்டகன் இவ்வாறு தெரிவித்துள்ளது.

''இந்தியாவுடன் பலமான, நீண்ட கால ராணுவ கூட்டை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். பிராந்திய அளவிலும், இந்திய பெருங்கடல் பகுதியிலும் இந்தியாவின் திறன்களை மேம்படுத்த அமெரிக்கா ஆதரவு தரும். இராணுவ ஒத்துழைப்பு எங்கு தேவையோ அங்கெல்லாம் அமைத்துக் கொள்ளப்படும். உலகை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு இருப்பதால் உலக அளவில் பென்டகன் ஒத்துழைத்துச் செயல்படும். குறிப்பாக ஆசிய-பசிபிக், மத்திய கிழக்கு ப்குதிகளில் தீவிர கவனம் செலுத்தப்படும். ஐரோப்பா, இஸ்ரேல் போன்ற பகுதிகளில் பாதுகாப்பை உறுதி செய்ய அமெரிக்கா கவனம் செலுத்தும்.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு சீனா, அமெரிக்காவுக்கு உள்ளது. எனினும் சீனா தனது ராணுவ நவீனமயமாக்கத்தை வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டும்''- என்று தெரிவித்துள்ளது பென்டகன். (ற)

## சிறுவர்களின் உயிரிழப்புகளை குறைக்கும் நடவடிக்கையில் ஐ.நா.

நியூயோர்க், ஏப்.13

நியூமோனியா, மற்றும் கடுமையான வயிற்றுப்போக்கு காரணமாக சிறுவர்கள் உயிரிழப்பதை தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இதற்கென 10 ஆண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. பிரதானமாக ஆபிரிக்கா மற்றும் தெற்காசிய பிராந்தியங்களை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டளவில் இரண்டு மில்லியன் சிறுவர்களின் உயிரிழப்புக்களை தடுக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 10 ஆண்டுகளுக்கு ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என ஐ.நா. சபை கணக்கெடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



ஈரானைத் தாக்கிய நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. 850 இக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நிலநடுக்கத்தால் பெருமளவு கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. மீட்புப்பணிகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று கூறப்படுகிறது.

## ஏவுகணை சோதனை நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### வடகொரியாவை எச்சரிக்கின்றன 'ஜி-8' நாடுகள்

லண்டன், ஏப்.13

மீண்டும் அணுகுண்டு மற்றும் ஏவுகணை சோதனை நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடகொரியாவுக்கு 'ஜி 8' நாடுகள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கொரிய தீபகற்பத்தில் வட கொரியா போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தென்கொரியா மற்றும் அமெரிக்கா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்துவோம் என்றும் மிரட்டல் விடுத்து வருகிறது.

இந்த நிலையில் வளர்ந்த நாடுகள் என்றழைக்கப்படும் 'ஜி 8' நாடுகளின் கூட்டம் லண்டனில் 2 நாள்கள் நடந்தது. அந்தக் கூட்டத்தின் போது வடகொரியா மீது 'ஜி 8' நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

அவை விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''வடகொரியா அணுகுண்டு மற்றும் ஏவுகணைகளை தயாரித்து சோதனை நடத்தி வருவது கண்டிக்கத்தக்கது. அதற்கான யுரேனியம் செறிவூட்டுதலிலும் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலை மேலும் தொடர்ந்தால் வடகொரியா மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும். வடகொரியா தொடர்ந்து நடத்தும் அணுகுண்டு சோதனை சர்வதேச நாடுகளின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா.பாதுகாப்புச் சபை கொண்டு வந்துள்ள தீர்மானங்களுக்கு 'ஜி-8' நாடுகள் ஆதரவு வழங்கும்.

வடகொரியா மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்தும் பட்சத்தில் அதன் மீது ஐ.நா.சபை எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் 'ஜி-8' ஆதரவு வழங்கும்''- என்றுள்ளது. (ற)

## பங்களாதேஷில் வன்முறை: 3 பேர் சாவு; 20 பேர் காயம்



குல்னா, ஏப்.13

பங்களாதேஷில் இஸ்லாமிய எதிர்கட்சிகள் நாடு தழுவிய ரீதியில் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. அதில் 3 பேர் உயிரிழந்தனர். 20இக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பங்களாதேஷில் நாட்டுக்கு துரோகம் மற்றும் மத ஒற்றுமையை சீர்குலைக்கும் விதத்தில் எழுதினார் என்ற குற்றஞ்சாட்டின் அடிப்படையில் இஸ்லாமிய எதிர் கட்சிகளுக்கு ஆதரவான பத்திரிகை ஆசிரியர் ரகுமான் கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, ஆளும் அவாமி லீக் கட்சியினருக்கும், முஸ்லிம் அடிப்படைவாத கட்சியான ஜமாத் இ இஸ்லாமி ஆதரவாளர்களுக்கு இடையே வன்முறை வெடித்தது. அதில் 3 பேர் உயிரிழந்தனர். 20இக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

1971 போர் குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு, நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு நடந்து வரும் வன்முறையில் இதுவரை 101 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## ஓரினச் சேர்க்கைக்கு உருகுவே அனுமதி

லண்டன், ஏப்.13

உருகுவேயில் ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்திற்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பான சட்ட மூலத்துக்கும் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ள இரண்டாவது லத்தின் அமெரிக்க நாடாக உருகுவே கருதப்படுகின்றது. எனினும் ஒரு சில கிறிஸ்தவ அமைப்புக்கள் இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தன.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, ஆதரவாளர்கள் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர். அண்மைக்காலமாக வெளிநாடுகளில் இதுபோன்றதொரு கலாசாரம் வெகுவாக பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சுவீடனிடமிருந்து சுவிஸுக்குப் போர் விமானங்கள்

### நாடாளுமன்ற ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது சுவிஸ் இராணுவம்

பெர்லின், ஏப்.13

சுவீடனிமிருந்து போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் திட்டத்தை சுவிட்ஸர்லாந்து இராணுவம் நாடாளுமன்றத்திடம் சமர்ப்பித்துள்ளது.

ஆனால் சுவிஸ் நாடாளுமன்றத்தின் கீழவையின் பாதுகாப்புக் கொள்கை குழு போர் விமானங்களை கொள்வனவு செய்வதற்குத் தேவையான தொகையை பெறுவது குறித்த விவாதங்களை நிறுத்தி வைக்கும்படி தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதத்தில் இறுதியில் அடுத்த கூட்டம் இடம்பெறும் வரை இந்த ஒத்திவைப்பு தொடரும் என்று பாதுகாப்புக் கொள்கைக் குழுவின் தலைவரான சாந்தல் கலாட் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்து, ஸ்வீடனிடமிருந்து போர் விமானங்களை வாங்க வேண்டும் என்றால் பல துறைகளிலும் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மேலும் நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைத்தாலும் மக்களிடம் நடத்தப்படும் பொதுவாக்கெடுப்பில் போர் விமானம் வாங்க அனுமதி கிடைப்பது கடினமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)



# மணல் தட்டுப்பாட்டால் வீடமைப்பதில் பாதிப்பு

புதுக்குடியிருப்பு, ஏப்.13

வீடு கட்டுவதற்குத் தேவையான மணல் தட்டுப்பாடு காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் பாதிக்கப்படுவதாகத் தெரிய வருகின்றது.

போர் காரணமாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பகுதி மக்களுக்கு இந்திய அரசின் நிதிஉதவியுடனும், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடனும் நிரந்தர மற்றும் தற்காலிக வீடுகளை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமாக வேறு பகுதிகளுக்கு மணல் மற்றும் மண் எடுத்துச் செல்லப்படுவதால் இந்தப் பகுதிகளில் இவற்றை ஏற்றிச் செல்வதற்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்திய வீட்டுத் திட்டத்தின் மூலமாக நிரந்தர வீடுகளை அமைப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மணல் தட்டுப்பாட்டால் வீட்டின் கட்டுமானப் பணிகளுக்குரிய ஆரம்ப கட்டக் கொடுப்பனவுகளைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஜ-400)

## தேர்தலை இலக்கு வைத்து அரசின் வேலைத் திட்டங்கள்

### வவுனியா ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 13

இன்று அரசு தேர்தலை இலக்கு வைத்து தனது வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமாதானத்துக்கான மக்கள் அரணைச் சேர்ந்தவருமாகிய இ.சந்திரசேகரன் வவுனியாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த 10 ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பொன்று வவுனியா நகர விடுதியொன்றில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசு விளம்பரத்துக்காகச் சில அபிவிருத்தி வேலைகளைச் செய்து விட்டு அவற்றைப் பெரிதாகக் காட்டிக் கொள்வதற்கு முற்படுகின்றது. இன்று தமிழ் மக்களின் காணிப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. தமிழ் மக்களின் நிலங்கள் திட்டமிடப்பட்ட ரீதியில் அபகரிக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவில் காணிகள் இல்லாத அவல நிலையில் பல தமிழ் மக்கள் இருக்கின்ற போது அவர்களைப் பற்றிக் கவனம் செலுத்தாத இந்த அரசு காணிகளை வேறு இனத்தவர்களுக்கு வழங்குவதற்கு முனைகின்றது.

இந்த திட்டமிட்ட செயற்பாட்டினால் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு வருகின்றது. இன்று அப்பகுதி பதற்றம் நிறைந்த பகுதியாக மாறியுள்ளது. இதற்கு இந்த அரசுதான் காரணமாகும்.

கிளிநொச்சிப் பிரதேசத்திலும் ஆலயம் ஒன்றுக்குச் சொந்தமான நிலம் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் காணி அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். உரிய தீர்வு கிடைக்காவிடில் மக்களை அணிதிரட்டிப் பெரிய போராட்டம் நடத்தவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## பாதிப்பை எதிர்கொள்ளும் கேப்பாபுலவு பாடசாலை

புதுக்குடியிருப்பு, ஏப். 13

சீனியாமோட்டை இடைத்தங்கல் முகாமில் பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வரும் கேப்பாபுலவு ஆரம்பப் பாடசாலையில் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இறுதிக் கட்டப் போர் இடர்களினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்து வந்த கேப்பாபுலவு மக்கள் சொந்த இடங்களுக்குச் சென்று மீள்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படாத நிலையில் சூரியபுரம் சீனியாமோட்டைப் பகுதியிலுள்ள தற்காலிக இடைத் தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கேப்பாபுலவு பாடசாலையும் சொந்த இடத்தில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு 6 மாதங்கள் கடந்த நிலையிலும் கட்டட வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் மரநிழலின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை தற்போது சீனியாமோட்டையிலுள்ள முன்பள்ளிக் கொட்டகையில் எவ்வித வகுப்பறை வசதிகளும் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது.

தரம் 1 முதல் 5வரையுள்ள இந்தப் பாடசாலையில் சுமார் 73 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். போதிய வகுப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும், ஆசிரியர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அதிபருக் [illegible] எதுவுமே இல்லை. பாடசாலையின் தேவைகளுக்கெனக் கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் அரச, அரசசார் பற்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்குரிய வசதிகள் இல்லாததால் பாடசாலை நிர்வாகம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக பல தடவைகள் பாடசாலை நிர்வாகத்தால் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குத் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லைஎனவும் அறியக் கூடியதாக உள்ளது. (க-400)

### பரீட்சை முடிவுகள்

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆறு மாணவிகள் அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்றுள்ளனர்.

மேலும் 12 மாணவிகள் 8 பாடங்களிலும், 16 மாணவிகள் 7 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்றுள்ளனர். இதில் 156 மாணவிகள் உயர்தரத்தில் கற்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர். (க-402)

### பொதுச்சபைக் கூட்டம்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழக மாவட்டச் சம்மேளனத்தின் பொதுச் சபை கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டம் காலை 9.30 மணிக்கு வவுனியா இளைஞர் சேவை மன்றத்தின் பயிற்சி நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக இளைஞர் கழக மாவட்டச் சம்மேளனத்தின் தலைவர் தே. அமுதராஜ் தெரிவித்துள்ளார். (க-402)

## ஆனந்தபுரம் கிராமத்தில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு

புதுக்குடியிருப்பு, ஏப். 13

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் கிராம சேவகர் பிரிவில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வருகின்றது.

**10 நீர்த்தாங்கிகளுக்கும் தினமும் குடிதண் ணீரை நிரப்புவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் குடி தண்ணீர்க் கிணறுகள் இல்லாததால் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையால் தண்ணீர் தாங்கிகள் மூலமாக தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தப் பகுதியில் சுமார் 222 குடும்பங்கள் வசித்து வருகின்ற போதிலும் தமக்கான குடிதண்ணீர் விநியோக சேவை சீராக இடம்பெறுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வெப்பம் அதிகரித்துள்ளதால் குடிதண்ணீர்த் தேவை அதிகரித்திருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, குடிதண்ணீருக்காக தாம் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்களால் தெரிவிக்கப்பட்டது.

வறட்சி, வெப்பத்தைக் கருத்தில் கொண்டு இங்கு வைக்கப்பட்டுள்ள 10 நீர்த்தாங்கிகளுக்கும் தினமும் குடிதண்ணீரை நிரப்புவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை அந்தப் பகுதியில் பிரதேச சபையால் வைக்கப்பட்டிருந்த மூன்று நீர்த்தாங்கிகள் விசமிகள் சிலரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (க-ஜ-400)

## முல்லை. கல்வி அலுவலகம் தற்போது புதிய கட்டடத்தில்

புதுக்குடியிருப்பு, ஏப்.13

முல்லைத்தீவு கல்வி வலயம் கடந்த திங்கட்கிழமை முதல் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த போர் இடர்களினால் இடம்பெயர்ந்த முல்லைத்தீவு கல்வி வலயம் மீள்குடியமர்வுகளுக்குப் பின்னர் போதிய கட்டட வசதிகள் இன்றி முல்லைத்தீவு தமிழ் கலவன் பாடசாலையில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

இந்த நிலையில் கல்வி வலயத்துக்கென புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. ஆனால் இந்தக் கட்டடத்தில் குறைபாடுகள் காணப்படுவதாகக் கூறப்பட்டு அலுவலகப் பணிகளை அங்கு ஆரம்பிப்பதில் இழுபறி நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் வலயக் கல்வி அலுவலகம் பாடசாலையில் இயங்கி வருவதால் மாணவர்களுக்கு இட நெருக்கடி ஏற்பட்டு கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக பாடசாலை நிர்வாகத்தினர் வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அலுவலக பணிகள் அனைத்தும் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன. (க-ஜ-410)

#### பஸ் நிலையத்துக்கு அருகில்

## நிரந்தரக் கடை கோரும் 'அப்பிள்' வியாபாரிகள்

வவுனியா, ஏப். 13

வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் நிரந்தரக் கடைகளை அமைத்து வழங்குமாறு 'அப்பிள்' அங்காடி வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா நகர சபை, வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் நடைபாதை வியாபாரத்துக்கு கடந்த ஆண்டு தடை விதித்தது. இதற்கு மாற்றீடாக உடுபுடைவைகள், காலணிகள், ஆபரண பொருள்கள், அப்பிள் விற்பனை செய்யும் அங்காடி வியாபாரிகளுக்கு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள இடம் ஒன்றை வவுனியா நகர சபையினர் ஒதுக்கீடு செய்தனர்.

இதனை ஏற்றுக் கொள்ளாத அப்பிள் வியாபாரிகள் தமது நடமாடும் வியாபார நடவடிக்கைகளை பஸ் நிலையத்தில் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் தமக்கு பஸ் நிலையத்துக்கு அருகில் நிரந்தரக் கடைகளை அமைத்துத் தருமாறு அவர்கள் நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க ஜ 402)

#### கால்நடை வளர்ப்பாளர்களின்

## வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள்

புதுக்குடியிருப்பு, ஏப். 13

மன்னாகண்டல் கிராம சேவகர் பிரிவில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை உலக தரிசனம் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

முதற் கட்ட நடவடிக்கையாக அப்பகுதியில் கால்நடை வளர்ப்போர் சங்கம் ஒன்றை அமைத்து அதன் மூலமாக அந்தப் பகுதியில் உற்பத்தியாகும் பாலைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தப் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்களின் நலன்கருதி நல்லினப் பசுக்களைக் கொள்வனவு செய்து வழங்குவதற்கும் உலக தரிசனம் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை இந்தப் பகுதியிலுள்ள சுமார் 50 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு கெயர் நிறுவனம் பல்வேறு உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிய வருகின்றது. (க-400)



அக்கராயன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா நிறைவடைந்த பின்னர் பாடசாலைச் சமூகத்தினர் வலயக் கல்விப் பணிப்பாளருடன் காணப்படுகின்றனர். (க-18)



ஜப்பானைத் தொழில் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஜப்பானியத் தூதுக் குழு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியது.

# வெசாக் முதல் ரூ.25,000 சிங்கள பௌத்தர்களுக்கு

## தாய் நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு வழங்கும்

சிங்கள - பௌத்த குடும்பங்களுக்கு 25000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் தாய் நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட சிங்கள - பௌத்த குடும்பங்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று அந்த அமைப்பின் தலைவர் முரத்தட்டுவே ஆனந்ததேரர் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவு ஐந்து பிள்ளைகளைக் கொண்ட சிங்கள - பௌத்த குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

எதிர்வரும் வெசாக் பௌர்ணமி தினத்தன்று தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு தலா 25000 ரூபா வழங்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக மாதாந்தம் தலா 25000 ரூபா வழங்கப்படும். சிங்கள பௌத்த குடும்பங்களை போசிக்கும் நோக்கில் இவ்வாறு நிதி உதவி வழங்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சாட்சிகளைப் பாதுகாக்க வருகிறது விசேட சட்டம்

கொழும்பு,ஏப்.13

சாட்சிகளைப் பாதுகாக்கும் விசேட சட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

கொள்ளை, கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் சாட்சியளிப்போருக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைத் தடுக்கும் நோக்கில் புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சாட்சியாளர்களை அச்சுறுத்தி வழக்கைத் திசை திருப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதனால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

அனைத்துத் தரப்பினரையும் பாதுகாக்கும் நோக்கில் சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த உத்தேச சட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ச)

# கொழும்பு 'டொக்கியார்ட்'டில் பணிபுரியும் இந்திய பணியாளரை வெளியேற்ற முயற்சி

**இலங்கை பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்குமாறு கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தை அரசு கேட்டுக் கொள்ளவுள்ளது.**

கொழும்பு,ஏப்.13

இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் இந்தியாவில் வலுப்பெற்றுள்ள நிலையில் கொழும்பு, டொக்யார்ட் நிறுவனத்தில் பணியாற்றும் 2000 இந்தியத் தொழிலாளர்களை வெளியேற்றும் நடவடிக்கையை இலங்கை அரசு விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில், கப்பல்களை கட்டும் மற்றும் பழுதுபார்க்கும் செயற்பாடுகளில் கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. அங்கு பெரும்பாலும் இந்தியத் தொழிலாளர்களே பணியாற்றி வருகின்றனர்.

கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தில் 2000 இந்தியத் தொழிலாளர்கள் பணியாற்றுவதாக இலங்கை தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர்களுக்குப் பதிலாக இலங்கை பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்குமாறு கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தை இலங்கை அரசு கேட்டுக் கொள்ளவுள்ளதாக அவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தொழிலாளர்கள் இங்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர்.

எனினும் இந்தியத் தொழிலாளர்களை அங்கிருந்து வெளியேற்றி, இலங்கைப் பணியாளர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது என்று கூறுப்படுகிறது.

இலங்கைக்கு எதிரான போராட்டங்களை நடத்தி வருவதால், தமிழ்நாட்டில் இருந்து வரும் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்க மாட்டோம் என்று கொழும்புத் துறைமுக பொதி இறக்கும் பணியாளர் சங்கத்தின் தலைவர் அண்மையில் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்புத் துறைமுக விரிவாக்கப் பணிகளை சீனா மேற்கொள்ளவுள்ள நிலையில், கொழும்புத் துறைமுகப் பகுதியில் செயற்படும் டொக்யார்ட்டில் இருந்து இந்தியத் தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தில் பயணிகள் கப்பல்கள், வணிகக் கப்பல்கள், கடற்படைக்கான ரோந்துக் கப்பல்கள் போன்றவை கட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

# 4 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு,ஏப்.13

ஹற்றன் - எபோட்ஸ்லி தோட்டத்தில் குளவிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி 4 தொழி லாளர்கள் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்களே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இவ்வாறு குளவிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளர். (ச)

# தம்பகல்லவில் துப்பாக்கிச் சூட்டில் இருவர் படுகாயம்

கொழும்பு,ஏப்.13

மொனராகலை, தம்பகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கைகலப்பு தீவிர மடைந்ததை அடுத்தே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த இருவரும் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியில் இராமலிங்கம் வீதியில் இருந்து செல்லும் அம்மன் வீதியில் நூறு யார் தூரத்தில் சந்திரசேகரனார் வளவு ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 801 2242

(35906)(5-6)

**வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

தோற்றம் 30 ★ 03 ★ 1937



மறைவு 14 ★ 03 ★ 2013

கடந்த 14.03.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**சுப்பிரமணியம் தர்மராஜேஸ்வரன்**

அவர்களின் மறைவின்போது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் செய்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (13-04-2013) சனிக்கிழமை நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சக்கடந்தார் வளவு,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (35952)(6,7)

குடும்பத்தினர்
(0770716857)

☎ 0215671111
advt@uthayan.com

**திவானி பில்டேர்ஸ்**

சகலவிதமான கட்டடங்களும் குறுகிய காலத்தில் உறுதியாகவும் அழகாகவும், தரமாகவும், உத்தரவா தத்துடனும் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அதிசிறந்த கட்டட நிபுணர்களின் கைவண்ணத்தில் உங்களின் எண்ணத்துக்கு ஏற்ப குறித்த தவணையில் ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணித்து தரப்படும்.

அரச அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தகாரர்.
தங்கராசா கேசவதாஸ்
தும்பளை, பருத்தித்துறை. (35954)(5,6,7)
தொடர்புகளுக்கு: 077 900 0957/077 472 7332

**துரித வெளிநாட்டு பொதிகள் சேவை எம்மிடம்**
(Courier Services)

(35948)(6,7)

**Bharathy.com**
Palaly Road, Kondavil
Junction. 021 222 5148
Bharathy1@live.com

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

அமரர்

**இராமநாதர் சின்னத்தம்பி**



தோற்றம்
26.02.1934

மறைவு
16.03.2013

கடந்த நந்தன வருடம் பங்குனித் திங்கள் 3ஆம் நாள் (16.03.2013) சனிக்கிழமை பஞ்சமி சித்தயோகத் திதியில் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் இராமநாதர் சின்னத்தம்பி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (15.04.2013) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் நெடுந்தீவு மேற்கு, பெரியதுறை தீர்த்தக்கரையிலும், அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்று மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியதுறை, நெடுந்தீவு- 02.
T.P- 0215681319, 0778449845

குடும்பத்தினர்.

(35985)(6,7)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி - தொண்டமானாறு பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள 06 பரப்பு விஸ்தீரணமுடைய பழைய அரிசியாலை இயங்கிய காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு: S.இராஜ்குமார்
தொ.பே: 075 429 2956

(C/3333)(6.7.11)



## சாவகச்சேரி ஸ்ரீராம் சில்க்



இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர், சிறுமியருக்கான நவீன டிசைன் ஆடைகள், நாகரீக நங்கையரின் பஞ்சாபிகள், ஸ்கேட் அன்ட் பிளவுஸ், கல்யாண பட்டுப் புடைவைகள் அனைத்தும் மலிவான விலையில் நிறைவான தரத்தில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சி அறையில் புத்தாண்டைக் கொண்டாட ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.சாவகச்சேரியிலுள்ள தனித்துவமான நிறுவனம்.

ஸ்ரீராம் சில்க்
இல. 17, நவீன சந்தை,
சாவகச்சேரி.077 706 9078

(27827)(5.6.7)


## பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிட்டால் அனுமதி இரத்து

கொழும்பு,ஏப்.13

பண்டிகை காலத்தில் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகளிடம் அதிக பணம் அறவிடும் தனியார் பஸ்கள் குறித்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் குறித்த பஸ்களின் வீதி அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும். இவ்வாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தனியார் பஸ்களில் பயணிக்கும் பயணிகளின் வசதிகள் குறித்து தேசிய போக்குவரத்து சபையின் தலைவர் ரொஷான் குணவர்த்தன நேற்றுமுன்தினம் கொழும்பு புறக் கோட்டை பஸ் நிலையத்துக்குச் சென்று ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை, புத்தாண்டுக்கு சொந்த இடத்துக்குச் செல்லும் பயணிகளின் தேவை கருதி அவசியமேற்பட்டால் மேலதிக ரயில்களை சேவையில் ஈடுபடுத்த தயார் என்று ரயில் போக்குவரத்து அதிகாரி எல்.ஏ.ஆர். ரத்நாயக்க தெரிவித்தார். (ச)

## மாத்தளை மனிதப் புதைகுழி விவகாரம்; ஜே.வி.பி. முறைப்பாடு குறித்து விசாரணை

மாத்தளை,ஏப்.14

மாத்தளை மனித புதைகுழி தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய விசேட விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் உத்தரவிட்டுள்ளார்.

மாத்தளை மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் கடந்த புதன்கிழமை இரவு பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சிலர் நடமாடியதாக மக்கள் விடுதலை முன்னணி முறைப்பாடு செய்துள்ளது.

இராணுவ உடையை ஒத்த உடை அணிந்த 10பேர் மாத்தளை மனிதப் புதைகுழி பகுதியில் நடமாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இராணுவ உடையை ஒத்த உடை அணிந்த 10 பேர் மாத்தளை மனிதப் புதைகுழி பகுதியில் நடமாடியதாக அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு குறித்து ஆராய்ந்து விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர், மாத்தளை வலய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்தார். (ச)


## பொறியியலாளராகும் கனவை நிறைவேற்ற உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் யாழ்ப்பாணத்தில் CAPSTONNE இல்

Electrical and Electronics Engineering

- சர்வதேச சான்றிதழ் உடன்
- முதல் தர விரிவுரையாளர்களிடம்
- குறைந்த செலவில்

யாழ்ப்பாணத்திலேயே கற்கலாம்

A/L 2005 இல் அகில இலங்கையில் கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற சி.மயூரன் அவர்களை நேரில் தொடர்பு கொண்டு உரிய வழி காட்டலை பெற்றுக் கொள்ளுங்கள்

தொடர்பு: 077 787 4645

(35804)(6.7.11)



## மண்டப வசதி

அரங்கேற்றம், திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் வைபவங்கள் மற்றும் ஏனைய பொது வைபவங்கள் அனைத்திற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: க. ரதீஸ்கரன்
77, கஸ்தூரியார் வீதி, நாவலர், யாழ்ப்பாணம்.
T.P: 077 754 9803,
021 222 3334

(35862)(6.7.11)



## 'சேட்' மலிவு விற்பனைக்கு

புத்தாண்டு பரிசாக சேட் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நிறுவனத்தினருக்கும், ஏனையோருக்கும் ஒரு நற்செய்தி

- தரமான சேட் குறைந்த விலையில் கிடைக்கும்.
- தேவையான இடத்திற்கு (யாழ். மாவட்டம்) தொகைக்கு ஏற்ப கொண்டு வந்து தரப்படும்.
- அதிக அளவில் எடுப்போருக்கு விசேட கழிவு உண்டு.

தொடர்பு: 077 670 1495,
077 179 8563, 077 163 1062

(27829)(6.7.11)



## புதுவருட சலுகை

டிப்ளோமாக்கள் அனைத்திற்கும்

25% விசேட சலுகை

இச் சலுகை ஏப்ரல் 30ஆம் திகதி வரை மட்டுமே!

துரித அழைப்பு : 077 309 9 308

ESOFT
Shaping Lives, Creating Futures.

இலங்கையின் பாரிய தகவல் தொழில்நுட்பக் கல்வி வலையமைப்பு

### இச் சலுகை வழங்கப்படும் பாடநெறிகள்

DITEC INTERNATIONAL Diploma in Information Technology
Duration : 4 Months
Discount : Rs .4625 SAVE 25%

DISE Diploma in Software Engineering
Duration : 6 Months
Discount : Rs .7375 SAVE 25%

DiHN Diploma in Hardware & Networking
Duration : 3 Months
Discount : Rs .3500 SAVE 25%

DiCA Diploma in Computerized Accounting
Duration : 4 Months
Discount : Rs .4750 SAVE 25%

DiE FREE DVD With Role-Play Videos
Diploma in English
Duration : 4 Months
Discount : Rs .2500 SAVE 25%

DiBM Diploma in Business Management
Duration : 4 Months
Discount : Rs .4625 SAVE 25%

இல 137, K.K.S வீதி
யாழ்ப்பாணம்
தொ.இல : 021 222 4142

ESOFT
Shaping Lives, Creating Futures.

(சி/8334)(6.7)

# புத்தாண்டு சந்தைகளில் 20 லட்சம் பேர் பயன்

கொழும்பு,ஏப்.13

நாட்டின் 407 நகரங்களை இலக்காகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடத்தப்பட்டுவரும் வாழ்வின் எழுச்சி புதுவருட சந்தைகளில் இதுவரை 20 லட்சம் பேர் மலிவு விலைகளில் பொருள்களைப் பெற்று பயனடைந்துள்ளனர் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் 19 அரச நிறுவனங்கள் புதுவருட சந்தையை நடத்துவதுடன் இந்தச் சந்தைகளில் 12,000 கிராமிய உற்பத்தியாளர்கள் தமது பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர் என்று அமைச்சு தெரிவித்தது.

கடந்த 5 ஆம் திகதி முதல் வாழ்வின் எழுச்சித் திட்ட புதுவருட சந்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தச் சந்தைகளில் அரிசி, மரக்கறி, உலருணவு, உடுதுணிகள் மற்றும் கால்நடை சம்பந்தப்பட்ட பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்தச் சந்தை விற்பனை நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைய விருந்தது.

இந்தச் சந்தைகளை சமுர்த்தி அதிகார சபை, கமநல சேவைகள் திணைக்களம், , சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அமைப்பு, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் உட்பட 19 அரச நிறுவனங்கள் இணைந்து நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## களைகட்டுகிறது புத்தாண்டு வியாபாரம்...



கொழும்பு, புறக்கோட்டையில் களைகட்டும் புத்தாண்டு வியாபாரம்.

## ஹற்றனில் சிறுவர் இல்லம் முற்றுகை

கொழும்பு,ஏப்.13

ஹற்றன், கொட்டகல பகுதியில் வீடொன்றில் நடத்தப்பட்ட சிறுவர் இல்லம் சுற்றி வளைக்கப்பட்டது.

அந்த இல்லத்திலிருந்து மீட்கப்பட்ட 5 வயதுக்கும் 11 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை ஹற்றனிலுள்ள வேறொரு சிறுவர் இல்லத்தில் வைத்திருக்குமாறு ஹற்றன் பதில் நீதவான் தமயந்தி பெர்ணான்டோ உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இல்லத்திலிருந்து கைது செய்யப்பட்ட மூன்று நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ச)

## அன்பளிப்பாக வந்த 'சிகரெட்' சிக்கியது

கொழும்பு,ஏப்.13

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பெரும் தொகை சிகரெட்டுக்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 33 லட்சத்து 48 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பிரதிச் சுங்கப் பணிப்பாளர் எச்.பி.தஸ்லிம் குறிப்பிட்டார்.

ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 400 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்ட பொதியில் உள்ளடங்கியிருந்தன என்று அவர் தெரிவித்தார்.

அன்பளிப்பு எனப் பெயரிடப்பட்டு நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்தப் பொதியை பெற்றுக்கொள்வதற்காக வந்திருந்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டனர். (ச)

# புத்தாண்டு,தவணை விடுமுறையில் சிறுவர் நேய பாடசாலை அபிவிருத்தி

### 250 கோடி ரூபா ஒதுக்கீடு என்கிறார் பந்துல

கொழும்பு,ஏப்.13

புத்தாண்டு மற்றும் தவணை விடுமுறை காலப் பகுதிக்குள் நாடு முழுவதிலும் உள்ள 5000 சிறுவர் நேய பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலை ஒன்றுக்கு தலா ஐந்து லட்சம் ரூபா வீதம் ஐயாயிரம் பாடசாலைகளுக்கும் 250 கோடி ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளது.

இதேவேளை, நவீன வசதிகள், ஆய்வு கூடங்களைக் கொண்ட ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 409 பாடசாலைகளின் நிர்மாண வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மேலும் 175 பாடசாலைகள் உலக வங்கி உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

255 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலப் பாட ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.-என்றார். (ச)

## திருட்டில் ஈடுபட்டோர் மாட்டினர்

புத்தளம்,ஏப்.13

திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நால்வரை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


அவர்களிடமிருந்து ஆயுதங்களையும் மீட்டுள்ளனர். பெண்கள் அணியும் நகைகளை அபகரித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடும் நபர்கள் தொடர்பாக புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே இருவர் ஆனமடுவவில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை விசாரித்த போது தாம் ஒரு குழுவாக இயங்குவதாக தகவல் வழங்கியுள்ளனர். அவர்கள் வழங்கிய தகவலையடுத்து நேற்று அதிகாலை தலுவ பகுதியில் வைத்து மற்றொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)


## மரண அறிவித்தல்

### மேரி ஆன் (நேசராணி) மரியாம்பிள்ளை



யாழ்ப்பாணம், குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும் வளன்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிஆன் (நேசராணி) மரியாம்பிள்ளை (11.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சூசைப்பிள்ளை - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி சின்னையா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் பபி, காலஞ்சென்றவர்களான ஜொராட், றெஜி மற்றும் கமிலஸ், ஆனந்தி, சாந்தி (கனடா), லோஜினி, ஜெயா, சுரேஸ், ரமேஸ், தர்சினி (கனடா), கிங்சிலி ஆகியோரின் அன்புத் தாயும் வின்சன்லோகா, வனஜா, சித்திரா, அன்ரன், லைடன், பவானி, ரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியும் இளஞ்செழியன், யூட், நிரோசன், இந்துசன், சுரேஜி, கொன்சி, அஜித், றஞ்சித், நிசாந்தன், காலஞ்சென்ற திலீபன் மற்றும் கார்த்திக்கா, கிசாந்தினி, யசோதினி, மேரிடிலக்சி, லடிஸ், லக்சிகா, சுலக்சன், டிலக்சன், நிரோசி, கிசா, நிந்துசன், நிரோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.04.2013) சனிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து (வளன்புரம், கொழும்புத்துறை) புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப. 3 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
ஜெயா (நரேஸ்- மகள்),
கிங்சிலி (மகன்)
தொ.பே: 077 905 0213.

வளன்புரம்,
கொழும்புத்துறை.

(35957)
(6.7.11)



## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
11*01*1970
அகியாய அழிப்பில்
13*04*2006

### அமரர் பஞ்சாட்சரம் கிருபாகரன்

(உரிமையாளர் - சாரங்கன் நகைமாடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

ஆலமரம் போல் நின்று ஆதரவு தந்தவரே
எங்கள் ஆன்மாவை உலுக்கி விட்டு எங்குதான் சென்று விட்டாய்?
காற்றலையில் கலந்து வந்த அதிகாலைச் செய்தி
நேற்றுப்போல் இருக்கிறது
நீண்ட இந்த உலகினிலே நின் பணிகள் செய்து நின்றாய்
போற்றுகின்றோம் எம் இளைய நாயகனே!
உன் பணிகள் என்றைக்கும் உன் பெயரை உச்சரிக்கும்
எங்கள் ஆத்மா உள்ளவரை உன் நினைவேந்தி
எம் உள்ளக் கமலத்தில் பூஜிப்போம் உந்தனையே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா. அண்ணாமார். அக்கா.
தங்கைமார். அத்தான். அண்ணிமார்.
மைத்துனர். பெறாமக்கள். மருமக்கள்.

157. சாரங்கா நகைமாடம்.
கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.



# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே..

மாறிவரும் நவீன உலகில் நாகரிகம் முன்னேற்றப்பாதையில் செல்வதை நாம் கண்களூடாகவே காண்கிறோம். இன்றைய காலகட்டத்தில் நாகரிகத்தைத் தேடி அலைவது பெண்களே.

இன்றைய யுகத்தில் கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் தொலைக்காட்சிப் பாவனை பெருமளவில் அதிகரித்துள்ளமை கண்கூடு.

இதனைச் சாதகமாகக் கொண்டு பல இளம் பெண்கள் சினிமாத் துறையில் அதி அக்கறையும் நாட்டமும் காட்டி வருகின்றனர். சினிமாப் படங்களில் நடிப்போர் காட்சி கவர்ச்சிகரமாக அமைவதற்காக அணியும் உடைகளை, தமது நாளாந்த வாழ்வியலில் கவர்ச்சியையும் அதேசமயம் ஆபாசத்தையும் வெளிப்படுத்தும் விதத்தில் அணிய ஆரம்பித்துள்ளனர்.

**இளம் பெண்கள் சினிமாத் துறையில் நாட்டத்தைச் செலுத்தியது மட்டுமன்றி, நடிகைகள் காட்சி வெளிப்படுத்துவதற்காக போடும் உடையைதாம்கவர்ச்சிக்காகப் போடத் தொடங்கிவிட்டனர்**

அதுமட்டுமன்றி ஆண்களைக் கவர வேண்டும் என்ற மனவுணர்வுடன் புதிதாய் வரும் நவநாகரிக உடைகளை வாங்கி அணிந்து தம்மைத் தாமே கவர்ச்சி காட்டுகின்றனர். கோயில் திருவிழா, அலுவலகங்களிலும் கூட ஏன் வைத்தியசாலை போகும் நோயாளர்களிலிருந்து யாவரும் ஆணி போன்ற பெரும் நீண்ட தோடுகளையும் காது சவ்வு கூடும் வரை அழகு என்ற மமதையில் போட்டு நாகரிக மோகத்தில் இழுபட்டுச் செல்கின்றனர். எனவே ஒட்டுமொத்தமாக கூறின் பெண்களே இன்று நவநாகரிகத்தை அதிகம் நாடித் தேடிச் செல்கின்றனர் எனலாம்.

ம.கிருத்தியா, நெடியகாடு, வல்வெட்டித்துறை.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது**

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................................

முகவரி :- ......................................................

......................................................

........................ ........................

திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**

'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அழியாத நட்பு

அருகில் இருந்து ஆசையாய்
அதிக நேரம் பேசும்போது- உன்
அன்பை வெறுக்கச் செய்தேன்- நீ
அறியா விடத்தில் மாட்டியபோது- உன்
அழைப்புக்காக ஏங்கினேன் - இதுதான்
நான் உன் மீது வைத்த அழியாத நட்பா?

பெற்ற தாய் தந்தையை விட
பெறாது வளர்த்த தாயை விட
உடன் பிறந்த சகோதரர்களை விட
உயிரான தோழிகளை விட
இடையில் வந்த உன்னை நம்பி
இன்பமான அன்பு செலுத்தினேன்-
இதுதான்
நான் உன்மீது வைத்த அழியாத நட்பா?

ஒரு தடவை உன் குரல் கேட்க
ஓராயிரம் தடவை அழைப்பு மேற்கொண்டு
ஒவ்வொரு விடியலிலும் தோற்றுப்போய்-
உன்
ஒரு குறுந்தகவலுக்காய் ஏங்கி நின்று
ஒருவன் வழியாக தூதனுப்பி
காத்திருந்தேன்- இதுதான்
நான் உன் மீது வைத்த அழியாத நட்பா?

ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆயிரம் ஜென்மம் எடுத்தாலும்
ஆசையாய் நான் உன் மீது வைத்த நட்பு
ஆழ்கடல் போல என்றுமே அழியாத
நட்பே...



எம்.நிர்மலா, சாவகச்சேரி.

# நல்ல நூல்களை வாசிப்போம்

இன்றைய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பாவனை மாணவர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. குறிப்பாகக் கணினி, இணையப் பாவனை, வானொலி, தொலைக்காட்சி, கைத்தொலைபேசிப் பாவனை என்பவற்றில் மாணவர்களின் ஆர்வம் கூடுதலாகக் காணப்படுகின்றது. நல்ல நூல்களைத் தேடி வாசிக்கின்ற ஆர்வம் மாணவர்களிடம் குறைவடைந்து வருகின்றது. இதனால் மாணவர்களிடம் சுயஆற்றல், படைப்பாற்றல் திறன், ஆளுமை விருத்தி என்பன குறைவடைந்துள்ளன.


இன்றைய 21 ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் நல்ல நூல்களை வாசித்துப் புதிய விடயங்களையும் அறிவையும் கருத்துக்களையும் அறிய வேண்டிய தேவை உள்ளது. இதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் போன்றோர் மாணவர்களை ஊக்கப்படுத்துவது அவசியமாகும். அத்துடன் நல்ல நூல்களை வாசிப்பதற்கு மாணவர்களை வழிகாட்டி நெறிப்படுத்துதல் அனைவரதும் பொறுப்பாகும். "வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்" என்பது முதுமொழி. அறிஞர்கள், கல்வியியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்றோரின் வெற்றிக்குப் பின்னணியாக அமைந்தது நல்ல நூல்களைத் தேடி வாசிக்கின்ற ஆர்வமாகும். இந்தச் சாதனையாளர்கள் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி நல்ல நூல்களை வாசிக்க மாணவர்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

அண்மைக்காலங்களில் மாணவர்களின் கல்வித் தர வீழ்ச்சிக்கு நூல்களின் வாசிப்புத் திறன் குறைவடைந்தமையும் ஒரு காரணமாகும். குறிப்பாக இன்று பாடசாலையில் மாணவர்கள் மத்தியில் நூலகப் பாவனை குறைவாகவே காணப்படுகின்றது. பாடசாலை நூல் நிலையத்தில் நல்ல நூல்கள் காணப்படுகின்றபோதும் அந்த நூல்களை மாணவர்கள் வாசிப்பதற்கு ஆர்வம் அற்றவர்களாக உள்ளனர். இதற்கு ஆசிரியர்கள் மாணவர்களை சிறந்த முறையில் வழிப்படுத்துதல் அவசியமாகும்.

மாணவர்களின் வாசிக்கும் ஆற்றலை அதிகரிக்க வைக்க குடும்பச் சூழலும் முக்கியமானது. குறிப்பாகப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் நல்ல நூல்களை வாசிக்க வீட்டிலே ஊக்கப்படுத்தல் வேண்டும். தமது வசதிக்கேற்ப நூலகம் ஒன்றைப் பேணி வருவது அவசியமாகும். இதன் மூலம் மாணவர்கள் தினசரி நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வார்கள். மாணவர்களின் வாசிக்கும் ஆற்றலை அதிகரிப்பதில் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு அவசியமாகும். குறிப்பாக சனசமூக நிலையம், பிரதேச சபை நூல் நிலையம், பொது நூல் நிலையம் என்பவற்றில் பேணப்படும் நூல்களை மாணவர்கள் வாசித்துப் பயன்பெறுவதற்கு சமூக ஆர்வலர்கள் உதவி செய்தல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் வாசிப்பு ஆற்றல் அதிகரித்துச் செல்ல வழி ஏற்படும்.

இன்றைய காலத்தில் வாசிப்பில் ஆர்வம் குறைவடைந்தமைக்கு முக்கிய காரணமாக அமைவது இலங்கையின் கல்வி முறையில் காணப்படும் குறைபாடு ஆகும். குறிப்பாகப் பரீட்சை மையக் கல்வியே அனைத்து மட்டங்களிலும் முக்கியப்படுத்தப்பட்டு வருகின்றது. பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பரீட்சையை மையப்படுத்தி கல்வி கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் சுயமாக வாசித்து மேலதிக விடயங்களைக் கற்கும் ஆர்வம் காணப்படவில்லை. இது அவர்களின் சுயகற்றல், சுயதேடல் நிலைமைகளை பாதிக்கச் செய்கின்றன.

எனவே நல்ல நூல்களை மாணவர்கள் வாசிப்பதற்கு ஊக்கப்படுத்திப் போட்டிகள் நடத்தி பரிசில்களும் வெகுமதிகளும் வழங்குவதன் மூலம் மாணவர்களது வாசிக்கும் ஆற்றலை விருத்தி செய்ய முடியும். மாணவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்குத் தனிப்பட்ட முறையிலும் குழு முறையிலும் பாடசாலைகளில்



சஞ்சிகைகள், மாத இதழ்கள் என்பவற்றை வெளியிடுவதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் முன்வருதல் அவசியமாகும். இதன்மூலம் மாணவர்களின் வாசிப்புத் திறன் மட்டுமன்றி எழுத்துத் திறனும், சுய ஆற்றலும் முன்னேற்றம் அடையும்.

க.கணேசதேவா, மாதகல்.

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (பனிக்கிரோ வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
மூத்தானை வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சுதா பொன்ஸ்' மாவடி சந்தி, அல்வாய்: 021 226 3206. 'நெல்லியடி வொடேன் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519. 'ஜோதி டிக் சென்ரர்' மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 0399. 'மன்னார் சிவசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478. 'கொடிகாமம் அருள்நாயகி' பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585. 'கோபி வலைக்சிற்றி' முல்லைத்தீவு நகர்: 0779598917, 'அம்புசன்' சிவன் கோவிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571.

# கடமை தவறலாமா?

பஸ் புறப்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் பயணிகளை ஏற்றுவதற்காக ஆமையாக நகர்ந்த பஸ், நல்லூர் தாண்டியதும் வேகமெடுக்கத் தொடங்கியது.

'காப்பற்' வீதியில் வழுக்கியபடி விரைந்த பஸ், இடையிடையே நடைபெற்றுவரும் மதகுகளின் புனரமைப்பு வேலைகளால் தனது வேகத்தை மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. கோப்பாய்ச் சந்தியை அண்மிக்க முன்பதாக அடுத்தடுத்து 100 மீற்றர் இடைவெளிகளில் இரண்டு மதகுகள் பிரிக்கப்பட்டு அவற்றுக்கு முன்னால் தார் பரல்கள் அடுக்கி அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. ஒருபுற வழி அடைக்கப்பட்டு, மறுபுறத்தாலேயே வாகனங்கள் செல்லவேண்டிய நிலை.

அப்போது பார்த்து சாரதிக்கு வந்தது ஒரு தொலைபேசி அழைப்பு. குறுகலான பாதையூடாக பஸ்ஸைச் செலுத்தியபடியே, செல்போனை காதில் பொருத்தினார் சாரதி. தொலைபேசியில் என்ன செய்தி வந்ததோ தெரியவில்லை. அடுத்த கணம் அவர் உலகை மறந்தார். பஸ்ஸை மறந்தார். அதிலிருக்கும் பயணிகளையும் மறந்தார். முன்னால் என்ன இருக்கின்றது என்பதையும் அவர் பார்க்க மறந்ததால், எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மினிபஸ் ஆவேசத்துடன் முத்தமிட்டது.

அதில் பயணித்த ஐந்து வயதுச் சிறுவனும், அவனது பெற்றோரும் தூக்கி வீசப்பட, குருதி வீதியில் கொப்பளித்தது. அவர்களின் அவலக் குரல் கேட்டு, சாரதி நிமிர்வதற்கிடையில் பக்கத்தில் நின்ற மதிலையும் போட்டுத் தாக்கிவிட்டு, பக்க யன்னல்களின் கண்ணாடிகளை தொலைத்துவிட்டு, ஒரு பக்கமாக சாய்ந்து ஒதுங்கியது பஸ்.

அந்தப் பக்கமாக அமர்ந்திருந்தவர்களை கண்ணாடித் துகள்கள் பதம்பார்க்கத் தவறவில்லை. ஆனால் வீதியில் வீசப்பட்டவர்களையோ, அல்லது பஸ்ஸுக்குள் சிக்கியிருந்த பயணிகளையோ சாரதியும், நடத்துநரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பஸ்ஸை விட்டுவிட்டு அங்கிருந்து ஓட்டம் பெடுப்பதிலேயே குறியாக இருந்தார்கள். வீதியால் சென்று கொண்டிருந்தவர்களும், அக்கம் பக்கத்தவர்களுமே காயப்பட்டோரை வைத்தியசாலைக்கு ஏற்றி அனுப்பினர்.

இந்த விபத்துக் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டும், அவர்கள் வந்துசேர இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாகிவிட்டது. சாரதியும், நடத்துநரும் தப்பித்தோட, காயப்பட்ட பயணிகள் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு, எஞ்சிய பயணிகள் ஏதாவதொரு பஸ்ஸைப் பிடித்து தாம் போக வேண்டிய இடங்களுக்குப் போய்ச் சேர்ந்த பின்னரே பொலிஸாரின் பிரசன்னம் நிகழ்ந்தது.

வெறும் பஸ்ஸையும், மோட்டார் சைக்கிளையும் அளந்த திருப்தியோடு அவர்களின் கடமை முடிந்துவிட்டது. பாவம், அவர்களுக்கு அன்றைக்கு நிறைய உழைக்க வேண்டிய அலுவல் இருந்திருக்கும். வருடப்பிறப்பு நெருங்கும் சமயம் அல்லவா. பணம் பார்க்கும் வேலையை விட்டுவிட்டு, விபத்து நடந்த இடத்துக்கு ஆத்துப்பதைத்துக் கொண்டு ஓடிவர அவர்களுக்கென்ன பைத்தியமா?

இப்போது நடைபெறும் விபத்துகளின்போது, சாரதியும் நடத்துநரும் தப்பித்தோடுவது ஒரு 'பாஷனாக' மாறிவிட்டது. நாலைந்து நாள்கள் தலைமறைவாக இருந்து, நிலைமையை 'சமாளித்து' விட்டு, அவர்கள் வெளியே வருவார்கள். பின்னர் சம்பிரதாய விசாரணைகளை முடித்துக்கொண்டு, பழையபடி பஸ் ஓட்டத்தில் இறங்கிவிடுவார்கள்.

விபத்து நடந்தவுடன் பின்னர் அடிபட்டவரைப் பற்றியோ, பயணிகளைப் பற்றியோ அவர்கள் கிஞ்சித்தும் கவலைகொள்வதில்லை. இப்படிப்பட்ட சாரதிகளை நம்பித்தான் நிதமும் பொதுமக்கள் பயணப்பட வேண்டியிருக்கிறது. சரியாவது சாரதிகள் தாம் பயணிகளின் காவலர் என்ற பொறுப்புணர்ந்து நடக்கவேண்டும்.

# வேண்டாம் அகதி அடையாளம்

தமிழக அகதி முகாம்களில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற 120 ஈழ அகதிகள் கைதாகினர். இலங்கையில் போர் முடிந்த இந்த நான்கு ஆண்டுகளில் தமிழக முகாம்களிலிருந்து ஆயிரக்கணக்கான ஈழத் தமிழ் அகதிகள்வெளி நாடுகளுக்குத் தப்பிச் சென்று பொலிஸாரிடம் பிடிபட்டு இருக்கிறார்கள். சிக்கியவர்கள் எத்தனை பேர் என்பது ஒருபுறம், தப்பிச் சென்றவர்கள் எத்தனை பேர் என்பதையும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் க்யூ பிரிவு பொலிஸார். இலங்கையிலாவது போர் முடிந்தும் துன்பம் நீங்கா நிலையில் ஈழ மக்கள் தப்புகிறார்கள்: ஆனால், தஞ்சம் தேடி வந்த தமிழகத்தில் பல ஆண்டுகள் அகதிகளாக இருப்பவர்கள் ஏன் தப்பி ஓட வேண்டும்?

1983 - ஜூலைக் கலவரங்களை யொட்டி ஈழ அகதிகள் தமிழகத்துக்கு வருகை தரத் தொடங்கி, 2010-ஆம் ஆண்டு வரை வந்தார்கள். இப்படி வருகை தருபவர்களின் பெயர்கள், வயதுகள் உள்ளிட்ட விவரங்களை மண்டபம் முகாமில் பதிவார்கள். தமிழகம் முழுக்க இருக்கும் 111 அகதிகள் முகாம்களில் ஏதாவது ஒன்றில் அவர்கள் தங்கவைக்கப்படுவர். கடந்த 30 ஆண்டுகளில் விரும்பியோ, விரும்பாமலோ இங்கேயே வாழ்ந்து இந்த மண்ணுக்கு வந்த பின்னர் உருவாகியிருக்கும் புதிய தலைமுறை இந்த அகதி வாழ்வை விரும்பவில்லை.

தொப்புள்கொடி உறவுகளுக்காகக் கொந்தளிக்கும் தமிழகத்திலிருந்து ஏன் இவர்கள் தப்பிச் செல்ல வேண்டும் என்ற கேள்விக்கு விடை தெரிய, ஒரு முறை உங்கள் அருகில் இருக்கும் ஏதேனும் அகதி முகாம் ஒன்றுக்குச் சென்று பாருங்கள்... அதன் காரணம் புரியும்.

''எண்பத்து மூன்றாம் ஆண்டு கலவரத்தின் பின்னர் நான் தமிழகம் வந்தேன். அப்போது எங்களுக்குக் கொஞ்சம் மரியாதை இருந்தது. ஆனால், அப்போது வாழ்க்கைத் தரம் எப்படி இருந்ததோ, இப்போதும் அப்படியே தான் இருக்கிறது. துளி முன்னேற்றம் கூட இல்லை. ஒரு காக்கை, குருவி, ஆட்டுக்குட்டிக்குக் கூட நிரந்தரமான வாழ்விடம் உள்ளது. இப்போதைய தமிழக அரசு பணமும், அரிசியும், ஓய்வுத்தொகையும் கொடுக்கிறது. ஆனால், எங்களுக்கு இந்தியக் குடியுரிமையை யார் கொடுப்பார்கள்?'' எனக் கேட்கிறார் தன் 60 வயது ஆயுளில் பாதியை அகதியாகக் கழித்த சுரேந்தர்.

சுரேந்தரைப் போன்று அவரது அடுத்த தலை முறை, அகதி என்ற இழிவைச் சுமக்கத் தயாராக இல்லை. அதே நேரம் இலங்கைக்குத் திரும்பிச் செல்லவும் விரும்பவில்லை. குடியுரிமையற்ற இந்தியாவில் இருக்கவும் விரும்பவில்லை. புகலிடம் தந்து குடியுரிமையும் தரும் நாட்டைத் தேடி ஆபத்தான கடல் வழியே எல்லை கடந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்கிறார்கள். ஆனால், இப்படிச் செல்கிறவர்கள் கதி, இந்தத் துன்பியல் கதையின் விவரிக்க முடியாத துயரப் பெருங்கடலில் ஒரு சிறு துளிதான்.

வறுமைக்கு வாழ்க்கைப்பட்ட அகதிக் குடும்பம் ஒன்று இரண்டு லட்சரூபாய் கடன் வாங்கி, ஓர் இரவில் யாருக்கும் தெரியாமல் தங்கள் மூத்த மகனைப் படகில் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பியது. இப்போது ஒரு வருடமாகிவிட்டது. தன் மகன் ஆஸ்திரேலியா சென்று சேர்ந்தானா... அல்லது கடலிலேயே காணாமல் போனானா? படகில் சென்றவர்களும் என்ன ஆனார்கள் என எதுவுமே தெரியாமல் வாங்கிய கடனுக்கு வட்டியும் கட்ட முடியாமல் தவித்து நிற்கிறது அந்த ஏழைக் குடும்பம். இந்த மாதிரி, தங்கள் பிள்ளைகளை ரகசியமாக அனுப்பியவர்கள் வெளியில் சொல்ல முடியாமல் தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் முகாம்களில் உண்டு.

சென்னைக்கு அருகே உள்ள புழல் முகாமில் இன் கதை இன்னும் வேதனையானது. அவர் ஆஸ்திரேலியா சென்ற தன் கணவனைத் தேடிக் கைக் குழந்தையோடு ஒரு படகில் கிளம்பினார். அவரைப் படகில் ஏற்றி கேரளக் கரைக்கு அழைத்துச் சென்றார்கள். மறுநாள் ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 150 ஈழ அகதிகள் கொல்லத்தில் கைது என்று ஊடகங்களில் பிரதான இடம் பிடித்த செய்தியில் புவனாவும் இடம் பிடித்தார். புவனா தப்பிச் செல்ல முயன்றதற்காக அவருக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுவிட்டன. இப்படி எல்லை கடக்கும் அகதிகளுக்கு நாமது பொது அகராதியில் நாம் வைத்துள்ள பெயர் 'கள்ளத்தோணிகள்'!

ஆஸ்திரேலியாவுக்கு அவர்கள் போவதும், அப்படிப் போவதற்கான முயற்சியில் பிடிபடுவதும்தான் செய்தி. ஆனால், எத்தனையோ குடும்பங்கள் கணவனை, மகனை, மகளை, குழந்தைகளை அனுப்பிவிட்டு 'ஆஸ்திரேலியாவிலிருந்து போன் வரும்', 'கடலில் இருந்து தகவல் வரும்' என்று காத்திருக்கிறார்கள். தகவல் வந்தால் சென்று சேர்ந்தார்கள் என்று அர்த்தம். தகவலே இல்லாமல் போனால்? அது பெருங்கடல் மட்டுமே அறிந்த ரகசியம்.

''2009-க்குப் பிறகு நாங்கள் இங்கிருந்து எப்போது வேண்டுமானாலும் பலவந்தமாக இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சம் எங்கள் மக்களிடம் நிலவுகிறது. எங்கள் உறவுகளை, வீடுகளைத் தேடி இலங்கைக்குச் சென்றால் திரும்பி வரக் கூடாது என்று சொல்கிறார்கள். அப்படிச் சென்று திரும்பி வந்தவர்களின் அகதிப் பதிவுகள் நீக்கப்பட்டு, அவர்கள் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படுகிறார்கள். நாங்கள் நாடற்றவர்களாகிவிடுகிறோம். அதனால்தான் இலங்கையும் வேண்டாம், இந்தியாவும் வேண்டாம் என, குடியுரிமை தரும் நாட்டைத் தேடி கடல் கடக்கிறார்கள் எங்கள் மக்கள்'' என்கிறார் கொங்கு மண்டல அகதி முகாமில் உள்ள மூத்த அகதி ஒருவர்.

80-களில் இலங்கையிலிருந்து இந்தியா வந்து இங்கிருந்து ரஷ்யா சென்று, போலந்து வழியாக ஜெர்மனுக்குள் நுழைந்து, தாங்கள் தஞ்சமடையும் நாட்டைத் தாய்நாடாக்கி விடுவார்கள் ஈழ அகதிகள்.

ஒரு முறை போலந்தின் எல்லை கடந்து பெர்லினுக்குள் வந்த கன்டெயினரைத் திறந்தபோது அதற்குள் 30-க்கும் மேற்பட்ட ஈழ அகதிகளின் பிணங்கள் மட்டுமே இருந்தன. ஒக்சிஜன் இல்லாமல் உயிர் மரித்த அந்த ஈழ அகதிகளைத்தான் நாம் 'கள்ளத்தோணிகள்' என அடையாளப்படுத்துகிறோம். இப்போது இந்தியாவில் வாழும் ஈழ அகதிகளுக்கு இருக்கும் ஒரே வாசல், ஆஸ்திரேலியாதான்.

ஆனால், ஆஸ்திரேலியாவும் இப்போது தனது நாட்டுக்குள் அகதிகள் வந்து குடியேறுவதை விரும்பவில்லை. இலங்கையில் போர் முடிந்து சமாதானம் வந்துவிட்டது எனச் சொல்லி ஆஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்களைத் திருப்பி அனுப்புகிறார்கள்.

ஆஸ்திரேலியாவிலிருந்து வெகு தூரம் விலகியிருக்கும் கிறிஸ்மஸ் தீவிலோ அல்லது பசிபிக் கடலில் இருக்கும் நவ்ரு, பப்புவா நியூகினியா தீவுகளில் அடைத்து, அவர்களாகவே வெறுத்துப்போய்த் திரும்பிச்செல்லும்படியான நிலையை உருவாக்கிவிடுகிறார்கள்.

இன்னொரு பக்கம் பல லட்ச ரூபாய் செலவு செய்து இலங்கையில் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில், 'இனிமேல் ஆஸ்திரேலியாவுக்கு வராதீர்கள். நாங்கள் அகதிகளை ஏற்பதில்லை'. என்றெல்லாம் விளம்பரம் செய்கிறது ஆஸ்திரேலிய அரசு. ஆனாலும் ஐ.நா. அகதிகள் சாசனத்தில் கையொப்பமிட்ட நாடு என்ற வகையில், ஆஸ்திரேலியா தஞ்சமடைவோரில் கொஞ்சப் பேரை யாவது ஏற்றுக்கொள்கிறது. மீதிப் பேரைக் கொழும்புக்கு அனுப்பிவிடுகிறது. இந்த உண்மைகள் எதுவுமே தெரியாத தமிழக ஈழ அகதிகள், இந்து மகாசமுத்திரத்தைக் கடந்து பசிபிக் கடல் வழியே பழுதடைந்த ஒற்றைப் படகில் பல இரவுகளையும் பகல்களையும் கடந்து பயணிக்கிறார்கள்.

''ஏன் இப்படித் தப்பி ஓடுகிறார்கள். இப்படிக் கடல் கடப்பது சரியா?'' என்று சிறைக்கைதிகள் உரிமை மையத்தின் இயக்குநர் வழக்கறிஞர் புகழேந்தியிடம் கேட்டபோது,

''80-களில் ஐரோப்பாவுக்குச் சென்றவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. அவர்கள் மருத்துவர்களாக, பொறியாளர்களாக வளர்ந்திருக்கிறார்கள். ஆனால், தாய் நிலம் என்று சொல்லக்கூடிய தமிழகத்துக்கு வந்த ஈழ அகதிகளில் மருத்துவராக உருவான ஓர் ஈழ அகதியைக்கூட நீங்கள் பார்க்க முடியாது. இதுதான் இங்கு அவர்களின் நிலை. இவை எல்லாவற்றையும்விட மிகப் பெரிய கொடுமை க்யூ பிரிவு பொலிஸாரின் துன்புறுத்தல்கள் தான். தொடர்ந்து கண்காணிப்பது, அச்சுறுத்துவது, மிரட்டுவது, பொய் வழக்குகள் போடுவது எனத் தொடர்கிறது க்யூ பிரிவு பொலிஸாரின் மனித உரிமை மீறல்கள். இன்னொரு பக்கம் ஐ.நா- வுக்கான அகதிகள் சாசனத்தில் இந்தியா கையெழுத்திடாத காரணத்தால், இந்த அகதிகளுக்கு எந்த உரிமையும் வழங்காமல் குற்றப் பரம்பரையினரைப் போல வைத்திருக்கிறார்கள். இந்தியா கையெழுத்திடாத காரணத்தால் இந்த அகதிகள் விஷயத்தில், ஐ.நா-வும் தலையிட முடியாது. இத்தனை துன்பங்களையும் தாங்கி இங்கே அன்றாடம் செத்துச் செத்து வாழ்வதைவிட, கடல் தாண்டி சுயமரியாதையான ஒரு வாழ்வைத் தேடிச் செல்கிறார்கள். மரணம் உடன் வரும் பயணம் என்று தெரிந்து தான் கடல் கடக்கிறார்கள் என்றால், அதைவிட இந்த வாழ்வைத் துன்பமாக நினைக்கிறார்கள் என்பதே கசப்பான உண்மை!'' என்கிறார் புகழேந்தி.

அகதி என்ற ஓர் அவமானத்தைச் சுமந்து எந்த நேரமும் இலங்கைக்குத் துரத்தப்படலாம் என்ற அச்சத்தோடு வாழும் ஈழ அகதிகளில் 15 ஆண்டுகளாக இங்கு வாழ்வோரின் விருப்பத்தைக் கேட்டறிந்து அவர்களுக்குக் குடியுரிமை கொடுக்க வேண்டும். இல்லையெனில், துயரப் பெருங்கடலில் நாடற்றவர்களாக மிதந்து கொண்டிருக்கும் ஈழ அகதிகளின் கனவுகளை, கடலில் கரைத்த பாவிகளாகிவிடுவோம். ஆகவே மத்திய, மாநில அரசுகளே... இந்த மக்கள் மீது கொஞ்சம் கருணை காட்டுங்கள்!

கடலில் கரையேறியது அந்தக் கப்பல். ஆடுகளை ஏற்றி இறக்கப் பயன்படுத்தப்பட்ட கப்பல். சற்றே பெரிய ஆழ்கடல் மீன்பிடியிலிருந்து 'ஓய்வளிக்கப்பட்ட' பழைய படகுகள் வரை இவர்களின் தொலைதூரக் கடல் பயணத்துக்குப் பயன்படுகிறது. ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல 20-இல் இருந்து 22 நாள்கள் வரை ஆகும். இந்த நாள்களுக்கான உணவுகள், குடிநீர், டீசல் போன்றவற்றைச் சேமித்துக்கொண்டு மீன்பிடிக்கக் கிளம்புவதுபோலக் கிளம்புகிறார்கள். தொழில்முறை படகோட்டிகளோ நீச்சலில் தேர்ந்தவர்களோ இல்லாததால், தவறிக் கடலில் விழுபவர்களைக் காப்பாற்றுவதற்கான வழிவகைகூட இல்லாமல் அப்பாவி அகதிகளை ஏற்றியபடி செல்கின்றன இந்த அகதிப் படகுகள். பிரமாண்டமான கப்பல்களே தவிர்க்கும் கொந்தளிப்பான கடல் பரப்பைக் கடந்தால் மட்டுமே, சென்று சேர வேண்டிய அந்த கனவுத் தீவை இவர்கள் அடைய முடியும்!

(நன்றி-விகடன்)

**தருவது வித்தியா**

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**இடபர்:** எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். யாரிடமும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசாதீர்கள். வியாபாரத்தில் போராடி மிகுதிகளைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**மிதுனர்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் பழைய மிகுதிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கடகர்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை ஏற்படும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**சிங்கர்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**கன்னி:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். முன் கோபத்தால் பகை ஏற்படும். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும்.

**நாளை**

*சித்திரை-01 ஞாயிற்றுக்கிழமை 14.04.2013*
*திதி: சதுர்த்தி மு.இ. 09.05 வரை*
*நட்சத்திரம்: ரோகிணி பி.இ. 05.57வரை*
*சுபநேரம்: 09.05- 10.35 வரை*
*இராகுகாலம்: 04.35- 06.05 வரை*

**துலார்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**விருச்சிகர்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். கையில் பணம் புரளும். பிரிய மானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை அதிகரிப்பீர்கள்.

**மகரர்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**கும்பர்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மீனர்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | | | 4 | 1 | 7 | | 2 |
| | | 7 | | | 6 | | 8 | |
| 6 | | | | 2 | | 3 | 9 | |
| | | | | | | 1 | 7 | |
| | 8 | | 1 | 9 | 3 | | 5 | |
| | 6 | 9 | | | | | | |
| | 1 | 8 | | 7 | | | | 5 |
| | 4 | | 3 | | | 9 | | |
| 9 | | 2 | 4 | 6 | | | 1 | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 9 | 4 | 7 | 2 | 8 | 5 | 1 |
| 7 | 1 | 4 | 3 | 8 | 5 | 2 | 6 | 9 |
| 2 | 8 | 5 | 1 | 9 | 6 | 3 | 7 | 4 |
| 3 | 9 | 7 | 8 | 5 | 4 | 1 | 2 | 6 |
| 1 | 5 | 6 | 9 | 2 | 3 | 7 | 4 | 8 |
| 8 | 4 | 2 | 7 | 6 | 1 | 5 | 9 | 3 |
| 9 | 2 | 1 | 5 | 4 | 8 | 6 | 3 | 7 |
| 5 | 7 | 8 | 6 | 3 | 9 | 4 | 1 | 2 |
| 4 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**கார் விற்பனைக்கு**

NPKV 4213 இலக்க புதிய Maroon colour Maruti 800 AC Car விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0718474739 / 021 222 5255 (35944) (6.7)

**மணமகன் தேவை**

யாழ். இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த அரச உயர் பதவி வகிக்கும் பெண்ணிற்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு: 0772844179, suganthant1983@ gmail.com (35932) (6.7)

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரியில் சகல நவீன வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்திலுள்ள குடும்பத்தினருக்கு மட்டும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 539 3728 (35898) (6.7)

**தேவை**

**காஞ்சிரம் வித்து (எட்டிக்கொட்டை) தொகையாகத் தேவை.**
வன்னி, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கும்.
EK & Co
55/1, ஸ்ரீ மகிந்த தர்ம மாவத்தை, கொழும்பு-09.
Tel: 011-2677077

**MARSHA SYSTEMS (PVT) LTD**
www.marshasystems.lk
SOLUTION TO THE PEOPLE
Solution to the People




FREE
1 year key
Antivirus

CLASSIC
intel Pentium
3rd Generation
Intel® Dualcore® Processor G2020
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
49000.00

HP G4 Pavilion
Intel Core i3 370M 2.40Ghz
2GB DDRIII SDRAM
500GB HDD 7200rpm
14" HD LED Display
69000.00



சித்திரைப்புத்தாண்டு
சிறப்புத்தள்ளுபடி
கையிருப்பு உள்ளவரை மட்டுமே..

CLASSIC
intel CORE i3
3rd Generation
Intel® Core i3 Processor 3.30GHz
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
58000.00


எம்மிடம் கணனிகளை கொள்வனவு செய்து கணனி பராமரிப்பு சேவையினை எப்பொழுதும் இலவசமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் அருகில் இருக்கும் எமது காட்சியறைக்கு விரையுங்கள்..

யாழ்ப்பாணம்
இல : 232 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
TP :021 4924437

நெல்லியடி
MMV Road, Nelliady
TP : 021 4924118

# நெஞ்சம் நெகிழ்ந்த 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் அணைப்பில்
25-02-1978

ஆண்டவர் அழைப்பில்
13-03-2013

அமரர்

## சரவணமுத்து பிறேமச்சந்திரன்(சந்திரன்)

எங்கும் உன் உருவம் எதிலும் உன் வடிவம் காண்பதெல்லாம்
நீயாய் இருக்க 31 நாள்கள் கடந்து போனாலும் மீண்டும் எப்போது
வருவாய்? எம் விழி நீர் சொரிய உன் நினைவால் வாடுகின்றோம்.
தாங்காத வலி தந்து மீளாத்துயில் கொண்ட சந்திரனே!
எம் நெஞ்சில் என்றும் நீ நிலைத்திருப்பாய்...
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தொலைபேசி ஒழுங்கை,
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

(35941) (8,14)

குடும்பத்தினர்.
(அம்மா)

# முஸ்லிம் மக்களுக்கு எதிராக எந்த அநீதியும் இடம்பெறாது

## முஸ்லிம் பிரமுகர்களிடம் உறுதியளித்தார் கோத்தா



மட்டக்களப்பு,ஏப்.13

முஸ்லிம்களுக்கு எதிராக ஒருபோதும் நாம் செயற்படவில்லை. எந்த அநீதியும் முஸ்லிம்களுக்கு எதிராக இடம் பெறுவதை நாம் அனுமதிக்க மாட்டோம். எனவே முஸ்லிம்கள் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஜம் இய்யத்துல் உலமா சபையின் பிரதி நிதிகள் மற்றும் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஹலால் தொடர்பான பிரச்சினைகளை அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையுடன் பேசி சுமூகமான தீர்வுக்குக் கொண்டு வந்துள்ளோம்.

முஸ்லிம்களுக்கு எதிராக சிலரினால் மேற்கொள்ளப்படவிருந்த பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.

நானும், ஜனாதிபதியும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதாக சிலர் பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர். ஒரு போதும் நாம் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படவில்லை.

கிழக்குக்கு வெளியே சில பிரதேசங்களில் சில சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றை நாங்கள் உடனுக்குடன் தடுத்து நிறுத்தியுள்ளோம். ஜனாதிபதி சிறு வயது முதலே முஸ்லிம்களுடன் நெருக்கமாக பழகியதுடன், முஸ்லிம் நண்பர்களுடன் அதிகளவு உறவை வைத்துள்ளவர்.

எங்களுக்கு ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகள் செய்த உதவியை நாங்கள் என்றும் மறக்க முடியாது. எங்களுக்கு எப்போதும் பாகிஸ்தான் உதவத் தயாராக உள்ளது.

முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் முழுமையாகக் கவனமெடுத்து செயல்பட்டுள்ளோம்.

முஸ்லிம்கள் அச்சப்பட வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்பதை மக்களுக்குக் கூறுங்கள்.-என்றார்.

இந்தச் சந்திப்பில் இராணுவ உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன்போது முஸ்லிம்கள் தற்போது எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் பிரமுகர்கள் எடுத்துக் கூறினர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள மட்டக்களப்பு விமான நிலையத்திலிருந்து விசேட வானூர்தி மூலம் முஸ்லிம் பிரமுகர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, மீண்டும் அவர்கள் மட்டக்களப்புக்கு வானூர்தி மூலமே அனுப்பப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பினால் 'டெக் லேங்' ஆங்கில பாலர் பாடசாலையின் பாவனைக்காக ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கப்பட்டன.

## மோசடி வர்த்தகருக்கு எதிராக நடவடிக்கை

மட்டக்களப்பு,ஏப்.13

சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு இடம் பெற்ற வர்த்தக நடவடிக்கையின்போது மோசடியில் ஈடுபட்டார்கள் என்று கூறப்படும் 95 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள் ளன.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் கடந்த 3 நாள்களாக அந்த மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனையை மேற்கொண்டது.

இதன்போதே மேற்படி 95 வர்த்தகர்களும் அகப்பட்டனர் என்று அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, செங்கலடி, கிரான், மட்டக்களப்பு உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்று அவர் கூறினார்.

இந்தச் சோதனையின் போது மோசடியான முறையில் பயன்படுத்தப்பட்ட துணி அளக்கும் கருவிகள், குறைவான நிறுவையுள்ள தராசுகள், முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## மே தினத்தில் தோட்டத் தொழிலாளருக்கு 2 ஏக்கர் தரிசு நிலங்களை வழங்குங்கள்

நுவரெலியா,ஏப்.13

எதிர்வரும் மே தின நிகழ்வில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சுமார் இரண்டு ஏக்கர் தரிசு நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதனின் வேண்டுகோளுக்கு அரசசார்பற்ற தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சுமார் 28 அரச சார்பற்ற தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடல் ஐக்கிய தொழிலாளர் சம்மேளன அலுவலக கொழும்புக்கிளையில் நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் மே தினம் சம்பந்தமான நடை முறை மற்றும் தொழிலாளர்களின் சம்பளம், சமூகப்பிரச்சினைகள் சார்பான இணக்கப்பாடு எட்டப்பட்டு அரசுக்கு எடுத்துரைப்பது என்ற முடிவு அனைத்து தொழிற்சங்கங்களினால் தீர்மானிக்கப்பட்டன. (ச)

P.P.T Guest House P.P.T Express Parcel Service






★ உங்கள் பொருள்கள் இலங்கையில் எப்பாகத்திற்கும் உடனுக்குடன் கொண்டு செல்ல
★ உங்கள் வீட்டுத் தளபாடங்களைக் கொண்டு செல்ல
★ உள்நாட்டு,வெளிநாட்டு துரிதகதி பார்சல் சேர்விஸ்

Tel: 077 386 6250 www.pptxpress.com

P.P.T Express

இலங்கையில் முதல் முறையாக அதிநவீன சொகுசு வசதிகள்

Fully Adjustable Seats,A/C, Non A/C
WI-FI(Internet), VideoMovies, Mobile Charging
Mic,Security Camera, Coolbox (fridge)

தொலைபேசி மூலம் ஆசனப்பதிவுகளை மேற்கொண்டு
பஸ் வண்டியில் ஏறிய பின்னர் பணம் செலுத்தும் வசதி

COLOMBO
No.16, Sangamitha Mw.,Colombo-13.
Tel: 011 437 5790, Mob: 077 575 5175

JAFFNA
No.183, K.K.S.Road, Jaffna.
Tel: 021 492 3240, Mob: 077 573 1318

POINT PEDRO
Main Street, Point Pedro.
Tel : 021 492 3724, Mob: 077 573 6003





Arasadi Lane,
Point Pedro.
Tel: 021 492 3724
Mob: 077 5736003
077 7667715

கொழும்பு - யாழ்ப்பாணம், கொழும்பு - பருத்தித்துறை

(35943)(5.6.7)

# யாழ். அத்தியடி அருள்மிகு
# ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்
## தேர்த்திருவிழா சிறப்பு மலர் (நாளை 14-04-2013)





### அருளாசிச் செய்தி

யாழ்ப்பாணம், அத்தியடிப்பிள்ளையார் கோயிலில் நாளை ரதோற்சவம். ஆனை முகங்கொண்ட ஐந்து கரத்து விநாயகராக ஆரோகணிக்கின்றார். இந்த அத்தியடிப்பதி ஒரு சிறப்பான புனிதப்பதியாகும்.

இந்த அத்தியடியிலே அருளாட்சி புரிகின்ற ஸ்ரீவிநாயகப் பெருமானின் திருவருட் கடாட்சம் சொல்லுந் தரமன்று. வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும் என்பார்கள். அந்த வகையில் தேரேறி வருகின்ற அத்தியடிப் பிள்ளையாரின் பொன்னான திருவடிகளை வணங்கி நிற்கும் அடியவர்கள் பிறந்துள்ள விஜய ஆண்டில் நலமே வாழ வேண்டுமென்று அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

### வினைகளை வேரறுக்கும் விநாயகர் தேரேறி வருகிறார்

அத்தியடிப் பதியுறையும் சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகருக்கு நாளை தேர்த்திருவிழா. வழிபடும் அடி யார்களின் வினைகளை வேரறுக்கும் விநாயகர் புத்தாண்டு நன்னாளில் அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து அடியார்களுக்கு பெரு மானாகக் காட்சி தரும் பஞ்சமுக விநாயகர் அஞ்சேலென அபயமளித்து நிற்கும் அற்புதத் திருவிழா காணக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். புது வருடப்பிறப்பு நன்னாளில் வினை தீர்க்கும் விநாயகர் திருப்பாதங்களைப் பணிந்து ஆசி நல்கி எல்லோரும் நலமுடன் வாழ வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். ஊர் கூடித் தேரிழுத்து மகிழும் அடியார்கள் வாழ்வு மலர மகிழ்வுடன் கணபதி கழல் பணிகின்றேன்.

- கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

**தேர்த்திருவிழா நேர விவரம்**

14.04.2013 ஞாயிற்றுக்கிழமை

**வசந்த மண்டப பூசை காலை 8.15**

**எம்பெருமான் தேருக்கு எழுந்தருளல் காலை 9.00**

**தேர்ப் பவனி ஆரம்பம் காலை 9.30**

-கோயில் நிர்வாகம்-

### மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி



அத்தியடியில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தின் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான அழித்தல் தொழிலை உணர்த்தும் தேர்த் திருவிழா மலர்ந்துள்ள விஜய புது வருடத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அழகிய ஆசனத்தில் பஞ்சமுக விநாயகப்பெருமான் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற போது அத்தேரினை அடியார்கள் வடம் பிடித்து இழுக்கும் போது எம்பெருமானின் திருவருள் கிடைக்கப்பெறுகின்றது. இந்துக்களாகிய அனைவரும் வாழ்வில் அனைத்துசெல்வங்களும் பெற்று வாழ பஞ்சமுக விநாயகப் பெருமானை தியானித்து எமது நல்லாசிகளுடன் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

சிவஸ்ரீ. ந. கணேசராஜக் குருக்கள்
(ஆலய பிரதம குரு)

### அத்தியடிப் பிள்ளையாரே! அலங்காரத் தேரேறி ஆனந்தக் காட்சி தரவேண்டும்!!

தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாதவர் விநாயகர். இந்த விநாயகர் அத்தியடிப் பதியிலே எழுந்தருளி ஆனந்த சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகராக அருளாட்சி புரிகின்றார்.

இந்த அத்தியடிப்பதி ஒரு புனிதமான பதியாகும். அறிஞர்களும் கலைஞர்களும் வாழும் இந்தச் சிறப்புமிகு பதியிலே அழகான கம்பீரமான இராஜகோபுரத்தோடு காட்சிதரும் அருள்மிகு ஆலயத்திலே எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார் விநாயகப்பெருமான்.

புதுவருட நாளைத் தேர் விழாவாகக் கொண்டு இந்த ஆலயத்திலே பத்துநாள் மஹோற்வசம் நடைபெறுகிறது.

இந்த ஆலயத்தில் ஒரு தனிச் சிறப்பு என்னவென்றால் மூலஸ்தானத்தில் இருப்பவர் நர்த்தனகணபதியாக அருள்பாலிக்கின்றார். ஆதலால் அடியார்கள் அனைவரும் மூல மூர்த்தியான நர்த்தன கணபதியை வணங்கி சதுர்வித புருஷார்த்தங்களைப் பெற்றுய்வார்களாக.

- கணபதி அடியான்.

### கோயில் வரலாற்றுச் சுருக்கம்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லூர் விளங்கிய காலத்தில் அந்நகருக்கு தென்மேற்குப் புறத்தே அத்திமரங்கள் நிறைந்த சோலையாக காணப்பட்ட ஓர் அழகிய கிராமமே அத்தியடி ஆகும்.

மருத்துவ குணமிக்க வேப்பமரம் போல் அத்திமரத்தின் வேர், பட்டை, இலை, பழம் என்பனவும் நோய் தீர்க்கும் அருமந்துகளாகும். உடல் நோய் தீர்க்கும் அத்திமரத்தின் கண்ணே எம் பிறவி நோய் தீர்க்கும் விநாயகப் பெருமான் கோயில் கொண்ட வரலாற்றை ஒரு முறை பார்ப்போம்.

முன்னைய காலங்களில் யாழ்ப்பாணத்தவர் பலபேர் தமிழ்நாட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே கட்டு மரங்களினூடாகவும், படகுகள் பாய்க்கலங்களூடாகவும் சென்று வந்து வாணிபத்தொழிலில் ஈடுபட் டிருந்தனர். அவ்வாறு தொழில் செய்து வந்த வணிகர்களில் ஒருவரான வீரகத்தி என்ற விநாயகர் அடியாரும் தமிழ் நாட்டிற்கும் செல்லும் போதெல்லாம் சிதம்பரத்திற்கு சென்று நடராஜப் பெருமானைத் தரிசிக்க மறப்பதேயில்லை. இவ்வாறு தில்லைக் கூத்தன் சிவபெருமானின் ஆடல் காட்சியைக் கண்டு மெய்மறந்து வழிபடும் போதெல்லாம், தன் குலதெய்வ மான விநாயகரின் ஆடல் காட்சியும் அவரது மனதில் தோன்றி மறைவதுண்டு அதன் வெளிப்பாடாகவே நடனமாடும் கோலத்திலுள்ள ஒரு விநாயகர் சிலையை செய்விப்பதற்காக சிதம்பரத்திலுள்ள சிற்பாசாரியார்களை வீரகத்தி அவர்கள் நாடினார். இவரின் விருப்பத்தைக் கேட்டறிந்த அவ்வூர் சிற்பி ஒருவர் மிக மகிழ்வுடன் இவருக்கு வலது காலை தூக்கி ஆடியவாறு சிதம்பரசிற்பக்கலையுடன் கூடிய இலகுவில் யாழ்ப்பாணத்திற்கு தூக்கிச்செல்லக் கூடியவாறான கிட்டத்தட்ட 16 அங்குல உயர அழகிய நடன விநாயகர் விக்கிரகத்தை செதுக்கி வழங்கினார். அதற்கான பெறுமதியை வழங்கி மிக மகிழ்வுடன் அவ் விக்கிரகத்தைப் பெற்றுக்கொண்ட அந்த அடியவர் அதனை கீழேவைக்காது தோளிலும், தலையிலும், மடியிலும் மாறி மாறி சுமந்து தமிழக கரையிலிருந்து கட்டுமரம் மூலம் யாழ். கொழும்புத்துறையை வந்தடைந்தார். அங்கிருந்து சைவ அன்பர்கள் புடை சூழ பிள்ளையாரை சுமந்து வந்து பசுமையும், எழிலும் நிறைந்து விளங்கிய அத்தித்தோப்பிலே ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு உழவாரம் மூலம் புல் செதுக்கி சிறு முற்றமாக்கிய காணியில் ஒரு அத்தி மரத்தின் கீழ் சிறு கொட்டில் அமைத்து எம் பெருமானைக் குடியமரத்தினார்.

1975 ஆம் ஆண்டு இக் கோயிலின் வரலாற்றிலேயே ஒரு திருப்பு முனை ஆகும். மறைந்த அத்தியடி வாழ் திருமகனும் பிரபல வர்த்தகரும் கோடீஸ்வரருமான அமரர் க. குணரத்தினம் (K.G) அவர்கள் இக்கோயி லின் திருப்பணிகள் பெரும்பாலானவற்றை தம் செலவிலேயே செய்து கோயிலின் திருக்குடமுழுக்கு (மஹாகும்பாபிஷேகம்) நிகழ்ச்சியை யாழ். மண்ணே வியக்கும் வண்ணம் பிள்ளையாரின் அருட்கடாட்சத்தினால் தானே முன்னின்று நடத்தி வைத்தார். பெறுதற்கரிய பேறாம் இம் மானிடப் பிறவியை அத்தியடிப் பிள்ளையாரின் பெருங்கருணையினால் இப்பூவுலகில் பெற்றுக்கொண்டுள்ள நாம் அத்தியடிப் பிள்ளையாருக்கு நடைபெறும் அபிஷேகங்கள், பூசை கள், திருவிழாக்கள், திருப்பணிகள் போன்றவற்றில் தவறாது கலந்து கொண்டும் பங்களிப்பும் செய்து நாமும் எமது சந்ததியினரும் தொடர்ந் தும் எம்பெருமான் திருவருளுடன் ஒரு குறையுமில்லா ஆனந்தப் பெருவாழ்வு வாழ்வோமாக! ஆடல் அழகன் அத்தியடியான் பெருங் கருணை அனைவருக்கும் கிடைப்பதாக!!!

- பிள்ளையார் பணியில் நிற்கும் கோயில் நிர்வாகம்.

நாளை சித்திரைப் புத்தாண்டில் சிங்கார தேர் உலா வரும்
**யாழ். அத்தியடிப் பிள்ளையார்**
திருக்காட்சி காணவாரீர்!



விளம்பர அனுசரணை:
**சிங்கப்பூர் ஜுவல்லறி**
93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 459 0260

**வஜிதா**
யமஹா சேவிஸ் ஒப்பந்தகாரர்
மோட்டார் சைக்கிள் திருத்துநர் சேவிஸ் சென்றர்
300/1, நாவலர் வீதி,
ரயில்வே சந்தி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர் M.வசந்தன்
தொ.இல. 0778097741, 0215672219.

விளம்பர அனுசரணையாளர்கள்

**MANOHARAN & VETTIVEL ENGINEERS - CONSTRUCTORS**
கட்டட வேலைகளைத் தரமிக்க கால ஒப்பந்த அடிப்படையிலும் உத்தரவாதத்துடனும் துரித கதியில் செய்துதரப்படும்.
No.49 A, Ambalavanar Road, Atthiyady, Jaffna.
T.P. 021 222 1247

**அம்பாள் மரக்காலை**
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 4921012, 0777111147

**அம்பாள் வெதுப்பகம்**
254, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**ARRUL GLOBAL EXPRESS**
INTERNATIONAL COURIER & CARGO SERVICE
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை.
இல.1, பிறவுண் வீதி,
நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972, Fax : 021 222 8869
சாரங்கா நாணயமாற்று சேவை
151/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6972

பெரியதம்பி வயரிங்வேக்ஸ்
பெரியதம்பி **Aout A/C**
வாகனங்களுக்கான வயரிங்
A/C செய்யும் இடம்.
449, ஸ்ரான்லி றோட்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

K.SRIRANGANATHAN
Proprietor
**RAVINTH**



DIGITAL VIDEO & PHOTO
ALBUM MAKING
DIGITAL PRINTING
DVD WRITING
Navalar Road,
Jaffna.




பெரும்பாலும் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவும்.

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.13

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 2012 பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:-

**குருநகர் சென். றோக். றோ.க. வித்தியாலயம்**

ரு.தனபாலன்- 2ஏ 4சி 3எஸ், றொ.குயின்சினி-ஏ2 பி3சி2எஸ், கொ.அனுசியா-ஏ3 சி4எஸ், பு.சுனித்தா-3சி 5எஸ், ம.மதிபன்-ஏபி6எஸ், விவேக்கா-ஏ 3சி 2எஸ், உ.ஜெயன்சன்-ஏ2சி3எஸ்.

**பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்**

பி.பிரசாத்-8ஏஎஸ், த.மிதுஷா-8ஏஎஸ், கு.அபிராமி-8ஏ எஸ்,ச. கௌசி-7ஏ பிசி, சி.சிந்துவர்மன்-7ஏபி எஸ், ப.விதுஷா-4ஏ 3பி2சி, மோ. ஜெனித்தா-2ஏ 3பி3சி, தி. ஜனனி-2ஏ2பி5சி,வி. லாவண்யா-2ஏ பி5சிஎஸ்.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

ஞா.றெறின் பெளசியா-6ஏ 2பி, தெ.அபிசா-5ஏ 4சி, இ.சுஜந்தன்-5ஏ2சிஎஸ், க.பானுஜன்-4ஏ3பிசி, வி.விஜிதரன்-3ஏ2பி3சிஎஸ், ச.பிரியங்கா-2ஏ2பி3சிஎஸ், ப.ரேணுகா-2ஏபி5சிஎஸ், ப.வசிகரன்-2ஏ2சி2எஸ். (ந)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.13

[illegible] சித்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

* * *

தென்மராட்சி, ஏப்.13

சாவகச்சேரி கல்வயல் ஐயனார் ஆலய மணவாளக் கோல விழாவும் அலங்கார உற்சவமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் திருக்கல்யாண நிகழ்வும் இடம்பெறும். மணவாளக் கோல விழாவினையும் அலங்காரத் திருவிழாவினையும் [illegible] குருக்கள் நடத்துவார். (ந-9)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.13

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ந)

* * *

நயினாதீவு செம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா புதுவருட தினமான 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும், மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந-7)

## இலவசக் கருத்தரங்கு

கொழும்பு,ஏப்.13

கொழும்பு தெஹிவளை கிறீன்விச் உயர்கல்வி நிறுவனத்தின் உன்னால் முடியும் ஒரு நாள் இலவசக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை தெஹிவளை எஸ்.டி.எஸ்.ஜெயசிங்க மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் தலைமையில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் பெண்களுக்கான பிரச்சினைக்கான ஆலோசனைகள், குழந்தை வளர்ப்பும் உளவியலும் சம்பந்தமான பல்வேறு தகவல்கள், சிறந்த ஆசிரியராக மாறுவது எப்படி, முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி, ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி, சிறுவர்களுக்கான பயிற்சி நெறி, கல்வியோடு தொடர்புடைய ஒரு சுயதொழிலை வீட்டில் இருந்தவாறே செய்ய ஒரு புதிய பாடத்திட்டம் போன்றன அறிமுகப்படுத்தவுள்ளன. (எ)

## குருமனை இல்லத்துக்கு காணி வழங்கிய இந்து சகோதரர்கள்

வடமராட்சி,ஏப்.13

கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் பொதுமண்டபமும், குருமனை இல்லம் அமைக்கவும் இந்துக்களான சகோதரர்கள் இருவர் மூன்று பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

தேவாலயத்தின் தெற்குப் பகுதியில் தேவாலயத்துடன் ஒட்டியுள்ள மூன்று பரப்புக் காணியை இதற்கென கரவெட்டியைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் எஸ். வாமதேவன், எஸ்.ஜெயதேவன் ஆகிய சகோதரர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்தக் காணியில் தேவாலயத்துக்கென ஒரு மண்டபமும் குருவானவர் தங்கி இருப்பதற்கென குருமனை இல்லம் ஒன்றும் கட்டப்படவுள்ளதாக தேவாலய பங்குச்சபை தெரிவித்துள்ளது. (ஒ-8)



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பிரான்ஸ் நட்புறவுச் சங்கத்தினர் அண்மையில் தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வழங்கிய நிகழ்வின்போது கல்லூரி அதிபர் மௌலவி எஸ்.ஏ.எம். முபாரக், பிரான்ஸ் நட்புறவுச் சங்கத்தின் தலைவர் கே.இந்திரமோகன், உபதலைவர் எஸ். பத்மநாதன், அதன் பணிப்பாளரான ஜி.றொபர்சன் ஆகியோர் காணப்படுகின்றனர். (ந)

## விழிப்புணர்வுக் கருத்தமர்வு

வடமராட்சி, ஏப்.13

நெல்லியடி வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையுடன் வரி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் கோயில் கல்யாண மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இ[illegible] கருத்தரங்கு நடைபெறு[illegible]

இறை[illegible]த்திணைக்கள யாழ. பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி இறைவரி தொடர்பான விளக்கத்தை அளிப்பார்.

வர்த்தகர்கள், பொதுமக்கள் மற்றும் ஆர்வமுடையோர் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)



கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் 87 ஆவது வருடத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.கணேசநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், ஒருவர் இரத்ததானம் வழங்குவதையும் காணலாம்.

## விஞ்ஞான சங்கம் நடத்திய போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1ஏபி1சி பாடசாலைகளுக்கு இடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதனடிப்படையில்,

**கட்டுரைப்போட்டி**

முதலாம் இடம்-இந்திரகுமார் வினு(யாழ். இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்-ஏன்சலின் விதுசா கனகரத்தினம் (யாழ். திருக்குடும்ப கன்னியம் மடம்), மூன்றாம் இடம்-சிந்துஜா சிவனேசன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சிவஸ்காந்தன் குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி)

**பேச்சுப்போட்டி**

முதலாம் இடம்- சண்முகம் சமுல் (யாழ். மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்- இராமநாதன் ஸ்ரீதிவாகரன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்- சுந்தரமூர்த்தி தெய்வநிசாந்தினி (விசுவமடு மகாவித்தியாலயம்)

**சித்திரப்போட்டி**

முதலாம் இடம்- யோகேஸ்வரன் பகீரதன் (ஹாட்லிக் கல்லூரி), இரண்டாம் இடம்- [illegible] (புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி), மூன்றாம் இடம்- ஜோன்சன் ஜொனிபிரிந்தன் (யாழ். மத்திய கல்லூரி)

**விபரணப்படமாக்கல் போட்டி**

முதலாம் இடம்-யாழ். வேலாயுதம் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம்-யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், மூன்றாம் இடம்-யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

**பாடசாலைத் தோட்டப் போட்டி**

முதலாம் இடம்-சென் ஜோன்ஸ் கல்லூரி, இரண்டாம் இடம்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், மூன்றாம் இடம்-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**சுவரொட்டிப் போட்டி**

முதலாம் இடம்-திருக்குடும்ப கன்னியர்மடம், இரண்டாம் இடம்-யாழ். மத்திய கல்லூரி, மூன்றாம் இடம்-வேலணை மத்திய கல்லூரி

**கண்காட்சிப் போட்டி**

முதலாம் இடம்-யாழ். மத்திய கல்லூரி, இரண்டாம் இடம்- புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, மூன்றாம் இடம்-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

**வினாவிடைப்போட்டி**

முதலாம் இடம்-யாழ். இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்-ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம்-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு நிகழ்வில் மாணவர்கள் பொறுப்பாசிரியர்களுடன் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உதவிச் செயலர் பா.நிமலதாசன் தெரிவித்துள்ளார். (ந)

## பணம், காசோலை மோசடிகள் கடந்த வாரம் 3 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப்.13

48 இலட்சம் ரூபா காசோலை மோசடி மற்றும் பண மோசடி தொடர்பில் கடந்த வாரம் மூன்று முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியைச் சேர்ந்த ஒருவர் 37 இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்தமை தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அதே சந்தேக நபர் அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவரிடமிருந்து 11இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அது தொடர்பில் தாம் விசாரணை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.13

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பொன்னாலை அமரர் எஸ்.எஸ். சின்னையா ஞாபகார்த்தமாக மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி பொன்னாலை மான் பாய்ந்த திடலில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

போட்டியில் முல்லை, கிளி, மன்னார் மாவட்டக் காளைகளும் பங்குபற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப்.13

வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகள் கடந்த 7 ஆம் திகதியில் இருந்து நடைபெற்றுவரும் அதேசமயம் தரம் ஒன்று முதல் தரம் நான்கு வரையான பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் நாளை மறுதினம் 15 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி ஞாயிறுவரை இடம்பெறவுள்ளது.

இதற்கான நேர அட்டவணை பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வட இலங்கை சங்கீத சபையின் நிர்வாக செயலாளர் மு.அருளையா அறிவித்துள்ளார். (ந-ரி)


## யாழ் - நாவற்குழி வரையான ரயில் பாலங்கள் புனரமைப்பு



யாழ்ப்பாணத்தில் இருந்து நாவற்குழி வரையான ரயில் பாதைகளில் இருக்கும் பாலங் கள் மற்றும் மதகுகளை மீள் புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாவற்குழி கடற் பகுதியில் உள்ள இரும்பு மேம்பாலத்துக்கு பதிலாக புதிய பாலம் அமைக்கப்படவுள்ளது. புதிய இரும்புப் பாலம் தற்போது கொழும் பில் உருவமைக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்படவுள்ளதாக ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந-17)

# மகஸின் சிறை தமிழ்க் கைதிகளுக்கு சரவணபவன் எம்.பி.அன்பளிப்பு

## புத்தாண்டு வாழ்த்தும் தெரிவிப்பு



வெலிக்கடை புதிய மகஸின் சிறைச் சாலையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று சந்தித்து புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் புத்தாண்டை கொண்டாடுவதற்கான பூஜைப் பொருள்களுடன் ஏனைய அவசியமான பொருள்களையும் வழங்கினார்.

நேற்று சிறைச்சாலைக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனை மகஸின் சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் ரஞ்சன் வரவேற்று தமிழ் கைதிகள் தங்கி இருக்கும் எப்.ஜி.எச்.ஜே பிரிவுகளுக்கு அழைத் துச் சென்றார்.

மேற்குறிப்பிட்ட நான்கு பிரிவுகளிலும் தண்டனைக் கைதிகள் உட்பட 188 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரையும் நேரில் சந்தித்து நலம் விசாரித்த சரவணபவன், அவர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்வின் போது சிறைச்சாலை விதிமுறைகளுக்கு அமைவாக சிறைச்சாலையில் இருக்கும் 188 கைதிகளுக்குமான பொருள்களின் ஒரு பகுதியை நலன்புரி அதிகாரி நிஸங்கவிடம் சம்பிரதாய பூர்வமாக கையளித்தார். சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் ரஞ்சன், நலன்புரி அதிகாரி நிஸங்க மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளும் உடன் இருந்தனர். (ஒ)

## கணினி வகுப்பு ஆரம்பம்

நெல்லியடி, ஏப்.13

வதிரியில் அமைந்துள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் கணினி வகுப்புக்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இந்த வகுப்பு 10 கணினிகளையும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களையும் கொண்டதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-ரி)

# இலங்கையின் வஞ்சகத்தை இந்தியா உணர வேண்டும்

## ■ கோத்தபாயவின் கருத்துக்கு பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கண்டனம்



இலங்கை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் இந்தியா குறித்த அவதூறுப் பேச்சுக்கு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இனியாவது இலங்கையின் வஞ்சகத்தை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அந்நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார். அவரது குற்றச்சாட்டுக்கள் கடுமையாகக் கண்டிக்கத்தக்கவை.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நடத்தியதே இந்தியா தான் என்றும் இலங்கைப் போரை நிறுத்தும்படி உலக நாடுகளிடமிருந்து நெருக் கடி வந்த போதெல்லாம் அதை சமாளித்து இலங் கையைக் காப்பாற்றியது இந்தியா தான் என்றும் தான் கோத்தபாய இதுவரை கூறி வந்தார்.

ஆனால், இப்போது தனது நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றிக் கொண்டு இந்தியாவுக்கு எதிராகக் குற்றஞ் சாட்டத் தொடங்கியுள்ளார்.

இதற்குக் காரணம் இலங்கை அரசு தற்போது முழுக்க முழுக்க சீனா, பாகிஸ்தான் போன்ற இந்தி யாவின் எதிரி நாடுகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்று விட்டது தான். சீனாவைக் காட்டி மிரட்டியே இந்தியாவிடம் காரியம் சாதித்துக் கொண்ட இலங்கை, இப்போது காரியம் முடிந்ததும் இந்தியாவை கைவிட்டு சீனாவிடம் தஞ்சம் அடைந்து விட்டது.

இலங்கை அரசு வெளிப்படையாகவே இந்தியாவுக்கு எதிராக செயற்படத் தொடங்கி விட்ட போதிலும், இலங்கை எங்கள் நட்பு நாடு என்ற வசனத்தையே இந்தியா திரும்பத் திரும்ப கூறிவருகிறது.

கோத்தபாயவின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் கட்சி, அந்த குற்றச்சாட்டுகளை மறுக்காமல், இலங்கையை நாங்கள் மிகவும் மதிக்கி றோம் என்று கூறியிருப்பதை பார்க்கும்போது இலங்கையை இந்தியா இன்னும் புரிந்து கொள்ளவில்லையோ என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

1962-ஆம் ஆண்டு சீனாவுடனான போரின் போதும், அதன் பின்னர் நடந்த பாகிஸ்தானுடனான போர்களின் போதும் இலங்கை அரசு இந்தி யாவுக்கு ஆதரவாக இருக்கவில்லை. இலங்கையை எந்தக் காலத்திலும் நம்பக் கூடாது என்று மத்திய அரசை தமிழகம் தொடர்ந்து வலியு றுத்தி வந்த போதிலும் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையை இந்தியா மாற்றிக்கொள் ளவில்லை.

மாறாக சீனா பக்கம் இலங்கை சாய்ந்து விடக்கூடாது என்பதற்காக கச்சதீவு போன்ற தமிழகத்தின் சொத்துக்களை இலங்கைக்கு மத்திய அரசு தாரை வார்த்தது. தற்போது இந்தியாவுக்கு எதிராக இலங்கை திரும்பியி ருப்பதன் மூலம் அந்நாடு தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்து விட்டமை உறுதியாகிவிட்டது.

எனவே, இனியாவது இலங்கையின் வஞ்சகத்தை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். அண்டை நாடு, நட்பு நாடு என்று கூறிக் கொண்டு இலங் கையின் தவறுகளுக்குத் துணை போவதைக் கைவிட வேண்டும்.



யாழ். ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தின் முதன்மை வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு முகாமையாளர் எஸ். தவக்குமார் தலைமையில் ரிசிரி சொர்ணாம்பிகை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் 60 முதன்மை வாடிக்கையாளர் கௌரவிக்கப்பட்டு பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன. ரிசிரி பொது முகாமையாளர் பொ.விக்னேஷ்வரன் வாடிக்கையாளர் ஒருவரை கௌரவிக்கிறார். (வ)

## பசுமையாளருக்கு விருது வழங்கல்



யாழ்.மானிப்பாயைச் சேர்ந்த சமாதான நீதிவான் வை.செகரராஜசிங்கத்துக்கு 'பசுமையின் காவலன்' எனும் சிறப்புப் பட்டமும் உயர்விருதும் அண்மையில் தொல்புரம் கலாலய சர்வோதய மண்டபத்தில் வைத்து வழங்கப் பட்டது.

இவர் கடந்த 50 ஆண்டுகளில் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட பயன்தருமரங்களை உருவாக்கி பொது அமைப்புகளுக்கும், பாடசாலை, சனசமூக நிலையங்களுக்கும் இலவசமாக வழங்கி உதவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மானிப்பாய் சத்திய சாய் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் வலி. தென்மேற்கு சண்டிலிப் பாய் பிரதேச செயலக பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் இளைப் பாறிய புகையிரத நிலைய சிரேஷ்ட அதிபருமாவார். இவர் மும்மொழிகளிலும் பன்முகப் புலமை பெற்றவர். (எ-50)

# உலகமயமாக்கல் என்னும் சிந்தனையில் மாணவர் சாதனை படைக்க வேண்டும்

## பரிசளிப்பு நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், ஏப்.13

உலகமயமாக்கல் என்னும் சிந்தனையில் சர்வதேச ரீதியில் எமது மாணவர்கள் சாதனை படைப்பதற்கு தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் கூடுதலான பயிற்சிகளை வழங்கவேண்டும் என்று வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர். எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழா பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே சத்தியசீலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வியில் நீண்ட நோக்கும் அறிவும், ஒழுக்கமும் உள்ள சமூகத்தை உருவாக்க வேண்டும். அறிவு ஒழுக்கம் இரண்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். முன்னோர்கள் ஆலயத்துடன் கல்விச் சாலையினை அமைத்து அறிவினையும் ஒழுக்கத்தையும் வழங்கினார்கள். எதிர்கால சமுதாயம் கல்வி அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற தூரநோக்கு சிந்தனையின் அடிப்படையில் செயற்பட்டார்கள்.

எங்களுடைய பிள்ளைகளை பாரம்பரியத்துடன் சமய சமூக விழுமியங்களையும் மதித்து நடப்பவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும். சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கு பாடசாலைகளின் பங்களிப்பு பெரும் பங்கினை வகிக்கின்றது. பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதான அடைவு மட்டங்களிலும் பெற்ற பெறுபேறுகள் கல்லூரிக்கு பெருமை சேர்க்கின்றன. கல்லூரி மாணவர்களது விடாமுயற்சியும் அதிபர், ஆசிரியர்களது ஊக்கத்தின் காரணமாகவும் வெற்றியை மானிப்பாய் மகளிர் கல்லூரி பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. நாங்கள் தகவல் தொழில் நுட்ப யுகத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது பிள்ளைகளை எதிர் காலத்திற்கு உரியவர்களாக தொழில் நுட்பத்துறையில் சிறந்து விளங்குபவர்களாக உருவாக்க வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் சாதனை படைக்கவேண்டும். சிறந்த சாதனையாளர்களாக உருவாக வேண்டும். இவற்றின் ஊடாக மாணவர்களுக்கு சிறந்த முன்னேற்றத்தினை வழங்குவோம். இதனூடாக சிறந்த அடைவு மட்டத்தினை பெற்றுக் கொள்ள முடிகின்றது-என்றார். (எ)

# ஒரு வழிப்பாதையாக மாறுகின்றன நகரில் இரு வீதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.13

எதிர்வரும் மே மாதம் முத லாம் திகதி தொடக்கம் யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வைரவர் கோயில் வீதி, கன்னாதிட்டி சந்தியிலிருந்து வண்ணை சிவன் கோயில் சந்தி வரையான வீதிகள் ஒரு வழிப்பாதையாக மாற்றப்படுகின்றன. மின்சார நிலைய வீதியிலிருந்து வைரவர் கோயில் வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதிக்கு வாகனங்கள் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை செல்லக்கூடியதாக வும்-

கஸ்தூரியார் வீதிச் சந்தியில் இருந்து கே.கே.எஸ். வீதிக்குச் செல்லக்கூடியதாகவும் இந்த ஒரு வழிப்பாதைகளைப் பயன்படுத்த முடியும். யாழ்.மாநகர சபை, வர்த்தகர் சங்கம், இ.போ.சபை, தனியார் போக்குவரத்துச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கடந்த புதன்கிழமை நடத்திய சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. (ஒ-1-17)




சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான குழுச் செயற்றிட்டத்தின் கீழ் வீதி விபத்துக்கள் சம்பந்தமான 'வாக்கியங்கள் கொண்ட ஸ்டிக்கர்'கள் வாகனங்களுக்கு ஒட்டப்படுவதையும், அருகில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர் அதனைக் கண்காணிப்பதையும் காணலாம். (ந-29)

## கோப்பாய் தரவையில் வெளிநாட்டு பறவைகள்

யாழ்ப்பாணம்,ஏப். 13

கோப்பாய் தரவைக் கடற் பகுதியில் வெளிநாட்டுப் பறவை இனங்களின் வருகை அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த ஒரு வார காலமாகக் கோப்பாய் தரவைப் பகுதியில் காலையிலும் மாலையிலும் பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுப் பறவைகள் அதிகமாகக் கூடுகின்றன.

இந்த வெளிநாட்டுப் பறவைகள் பல்வேறு வர்ணங்களை உடையவைகளாகக் காணப்படுவதாகவும் அவை கூட்டம் கூட்டமாக தரவைப் பகுதியில் தினமும் நடமாடுவதாகவும் மக்கள் கூறுகின்றனர். இந்த வெளிநாட்டுப் பறவைகளைப் பார்ப்பதற்காகத் தினமும் மாலை நேரங்களில் கோப்பாய் தரவையை அண்டிய பகுதிகளில் மக்கள் கூடுகின்றனர்.

இந்த முறையே இந்தப் பகுதியில் இவ்வாறு அதிகளவு வெளிநாட்டுப் பறவைகள் வந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (த-17)

## ‘உதயன்’ மீதான தாக்குதலுக்கு நல்லூர் பிரதேச சபை கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப். 13

‘உதயன்’ பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் தாக்கப்பட்டமையைக் கண்டித்து நல்லூர் பிரதேச சபை கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

சபையின் விசேட கூட்டத்தில் இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் அதே வேளை மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் ஒரே ஒரு பத்திரிகையான ‘உதயன்’ பத்திரிகை தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்துடன் ஜனநாயக சூழலில் இவ்வாறான சம்பவங்கள் ஊடாக கருத்துச் சுதந்திரத்தை நசுக்க முயல்வது எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்று நல்லூர் பிரதேச சபை நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-17)



கடந்த இரண்டு வருடங்களுக்குமேலாகக் குறிகாட்டுவான் பகுதியில் கவனிப்பாரின்றிக் கிடந்த பாதை தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாதை குறிகாட்டுவான், நயினாதீவு இடையே எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள நயினை நாகபூசணி அம்மன் உற்சவத்தின்போது சேவையில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-7)

## இளைஞரின் தொடையை பதம் பார்த்த கிறைண்டர்

யாழ்ப்பாணம்,ஏப். 13

மாபிள் வெட்டும் ‘கிறைண்டர்’ கை தவறியதால் இளைஞர் ஒருவரின் காலின் தொடைப்பகுதியை அது பதம் பார்த்தது.

இந்தச் சம்பவம் மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

மானிப்பாய் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு மாபிள் பதிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இளைஞர் ஒருவர் மாபிளை ‘கிறைண்டர்’ மூலம் வெட்டிக் கொண்டிருந்தபோது அது சறுக்கிக் காலின் தொடைப் பகுதியைப் பதம் பார்த்தது.

இந்தச் சம்பவத்தில் உடுவில் தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த தர்மராஜா சந்திரகுமார் (வயது-25) என்பவரே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (த-14)

## மோ.சைக்கிள் 2 சைக்கிள்கள் பறிபோயின

யாழ்ப்பாணம், ஏப். 13

வெவ்வேறு இடங்களில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்கள் திருடப்பட்டமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் கடந்த 4 ஆம் திகதி 2 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஒருவரே மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவராவார்.

சந்தேகநபர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. மோட்டார் சைக்கிளும் இதுவரை மீட்கப்படவில்லை. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராயில் 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் மற்றொரு இடத்தில் 6 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்களுடனும் தொடர்புடைய சந்தேகத்தில் அரியாலையைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அவரிடமிருந்து சைக்கிள்கள் எதுவும் இதுவரை மீட்கப்படவில்லை.- எனத் தெரிவித்தார். (த-4)

# அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி யாழில் ‘பார்’கள் திறப்பதற்கு முயற்சி

## பொதுமக்கள் தரப்பில் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.13

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திப் புதிய மதுபான நிலையங்களை குடாநாட்டில் திறப்பதற்கான முயற்சிகளை சில செல்வந்தர்கள் மேற்கொண்டு வருவதாக மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

குடாநாட்டில் அண்மைக் காலமாகப் புதிய புதிய ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்களை அமைக்கும் நடவடிக்கைகளைச் செல்வந்தர்கள் சிலர் அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மஹிந்த சிந்தனையின் கீழ் புதிய மதுபான நிலையங்களை நாட்டில் திறப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் குடாநாட்டின் கலாசாரத்தை சீரகுலைப்பதற்கான முயற்சிகளை செல்வந்தர்கள் சிலர் எடுத்துள்ளனர்.

பணம் படைத்தவர்கள் தமக்குச் சொந்தமாக காணிகளில் புதிய கட்டங்களைத் தங்குமிட வசதிகளுடன் கட்டி முடித்த பின்னர் அங்கு மதுபானங்களை வைத்து விற்பனை செய்வதற்கு அரசியல் செல்வாக்குகளை நாடியுள்ளனர்.

மதுவரித் திணைக்களத்தால் அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் அரசியல்வாதிகளுக்கு லஞ்சம் கொடுத்து அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு செல்வந்தர்களால் அமைக்கப்பட்டுள்ள தங்குமிட வசதிகளுடன் கூடிய கட்டடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், பொதுமக்களின் குடியிருப்புக்கள் ஆகியவற்றுக்கு அண்மையாக உள்ளமையால் பிரதேச ரீதியிலான கலாசாரப் பாதிப்புக்களை உருவாக்குவதுடன் தமது மதவிழுமியங்களையும் பாதிப்பதாக பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தங்குமிடங்களில் மதுபானங்களும் விற்பனை செய்யப்பட்டால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் எனச் சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறிப்பாகப் பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதேசங்களில் இவ்வாறான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்கக் கைவிரித்துள்ளமையால் செல்வந்தர்கள் தற்போது அரசியல்வாதிகளின் உதவியை நாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-14)

# ரூபா 15 இலட்சம் பெறுமதியான நகைகள், பொருள்கள் திருட்டு

## கடந்த வாரத்தில் மட்டும்

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்.குடாநாட்டில் கடந்தவாரம் இடம்பெற்ற கொள்ளைமற்றும் திருட்டுச் சம்பவங்களில் நகைகள் உட்பட சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் மாத்திரமே மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் தெரிவித்தனர்.

நேற்றுவெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான எம்.எம்.ஜெப்ரி, எம்.எம்.ஏக்கநாயக்க ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அதிகளவாகக் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிருசுவிலில் பட்டப்பகலில் வீடு உடைத்து 25 பவுண் நகைகள், கைத்தொலைபேசி உட்பட 13 இலட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ள போதும் பொலிஸார் இதுவரை எவரையும் கைதுசெய்யவில்லை.

கைதடியில் கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைதடி மேற்கைச் சேர்ந்த பெண்ஒருவர் வீதியால் சென்றுகொண்டிருந்த போது அவர் அணிந்திருந்த 62 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. நாவற்குழியில் பெண் ஒருவர் அணிந்துசென்ற 37 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதோடு அவரிடமிருந்து சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளது. அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் சட்டநாதர் கோயில் வீதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. விசாரணைகளின் மூலமாக பின்னர் அவை மீட்கப்பட்டன.

மானிப்பாயில் வீடு ஒன்றிலிருந்து 50 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றனர். (த-4)

# விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சி, ஏப்.13

வாகன விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நால்வர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு கைதடியில் வீதியில் நடந்து சென்ற வேளையில் மோட்டார் சைக்கிள் மோதி தலையில் காயமடைந்த நிலையில் 17 வயது மதிக்கத்தக்க இளைஞன் சுயநினைவிழந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டார்.

மேலும் வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதி யில் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் காயமடைந்த வத்திராயன் வடக்கைச் சேர்ந்த பாலசிங்கம்ஜெயபாலசிங்கம் (வயது-33) என்பவரும், நேற்றைய தினம் நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஆலய பெருந்திருவிழாவுக்காக மோட்டார் சைக்கிளில் வந்த இரு குருமார் ஏ-9 வீதியிலிருந்து ஒழுங்கையில் திரும்பிய போது அதே திசையில் வந்த ஹையஸ் வாகனம் மோதியதில் காயமடைந்தனர். மோட் டார் சைக்கிளும் வாகனமும் பலத்த சேதமடைந்தன.

> மோட்டார் சைக்கிள் மோதி தலையில் காயமடைந்த இளைஞன் சுயநினைவிழந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டார்.

விபத்தில் காயமடைந்த இணுவில் மேற்கு கண்ணகை அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த மகாலிங்கக் குருக்கள் சிறிவத்ஸ் சர்மா (வயது-36) சிவபாலசர்மா கௌரிசங்கர் (வயது-23) ஆகியோரும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள னர். (எ-9)

## இன்று மின்தடை



வீதி அகலிப்புப் பணிகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பகல் 5.30 மணி வரை பலாலி, மயி லிட்டி பகுதிகளில் மின் விநியோகம் தடைப்படும் என மின்சார சபையின் யாழ்.பிராந்திய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ஓ-16)

# கட்டார் விபத்தில் இலங்கையர் சாவு

டோகா கட்டாரின்ராஸ் அபு அபோட் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு இலங்கையர்கள் சாவடைந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

போக்குவரத்து சமிஞ்சை விளக்குக்கு அருகில் கடந்த புதன்கிழமை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயம டைந்தவர்களின் எண்ணிக்கை இது வரையில் வெளியிடப்படாத நிலையில் இலங்கை, நேபாளம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாட்டு பிரஜைகளே அதிகம் காயமடைந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

விபத்தில் இரு இலங்கையர்கள் சாவடைந்ததோடு மேலும் இருவர் தீவிர சிகிச் சைப் பிரிவில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

கட்டாரில் சாரதியாக பணி புரிந்த 33 வயதுடைய அப்துல் ஹமீட் மொஹமட் பைசான் என்பவரும் தொழில் புரிந்த 27 வயதுடைய எம். என்.பிரசன்ன ருவான் என்ப வருமே விபத்தில் சாவடைந்தவர்களாவர்.

எம்.என்.பிரசன்ன ருவான் அநுராதபுரத்தையும் அப்துல் ஹமீட் மொஹமட் பைசான் குருநாகல் மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள். ருவானின் சடலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. பைசானின் ஜனாசா கட்டாரில் அடக்கம் செய்யப்படவுள் ளது.


## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் (பலாலி வீதியில்) வீட்டுடன் கூடிய காண்ணி வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0772497082

(35869) (23-6)


# நாவற்குழியில் விசேட பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

தென்மராட்சி, ஏப்.13

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் நேற்று நாவற்குழி பொதுநூலகத்தில் ஆரம்பமாகின.

நாவற்குழி கந்தையா- கனகம்மா நிறைவு நிதியத்தினால் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப் படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலக பொறுப்பதிகாரி நா.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் நினைவு நிதியத்தைச் சேர்ந்த மயில் வாகனம் உட்பட பலர் உரையாற்றினர். (எ-9)


## கல்வி நிறுவனமொன்றுக்குரிய வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகர்/ மானிப்பாய்/ கொக்குவில் பகுதிகள் விரும்பத்தக்கது.

(சி/8343) (23-14) தொடர்பு:- 0789994699


# மரண அறிவித்தல்கள்



## ஐயாக்குட்டி மயில்வாகனம்

அளவெட்டி மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாக்குட்டி மயில்வாகனம் நேற்று (12.04.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கற்பகத்தின் அன்புக் கணவரும் ஞானசோதி, சுசீலாதேவி, நிர்மலாதேவி, ரஞ்சினி, தேவபாஸ்கரன், சிவமோகன் (ஆசிரியர், யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மலிங்கம், சண்முகானந்தன், கதிர்காமேஸ்வரன், குமாரசாமி, இராஜேஸ்வரி (சுகாதாரத் திணைக்களம்), ஞானமலர் (ஆசிரியை, யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

அளவெட்டி மேற்கு, அளவெட்டி. (35970) (23-6,)

## சின்னத்தம்பி கணபதி (மட்டுவில்)

(ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆய்வு கூடப் பணியாளர் மட்டுவில் மகாவித்தியாலயம் )



சரசாலையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் கிழக்கு வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது ஐயனார் கோயிலடி மல்லாகத்தில் வசித்து வந்தவருமான சின்னத்தம்பி கணபதி (ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆய்வு கூடப் பணியாளர்) கடந்த 10.04.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணை, தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கதிர்காமநாதன், சிவநாதன் (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), செந்திநாதன் (லண்டன்), காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் கணேசநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணசேகரம், தனலட்சுமி, தவமணி, நளினி, கலைச்செல்வி, ரோகினி ஆகியோரின் அன்பு மாமனும், பகீரதி, பகீரதன், பகீகரன், பகிஷா, ஜனனி, ஜக்ஷன், ஜஸ்மின், அபிநந்,மேனுஷா, நேருவாசன், தேவயாணி, கௌதமன், கௌரீகன், கலியுகநீலன், வைஷ்ணவி, பார்கவி ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
மல்லாகம். (35973)(14.9)

தகவல்:
மகன் க.கணேசநாதன்.

### அபராதங்கள் மூலம் 20 இலட்சம் அறவீடு

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தரம் குறைந்த பொருள்களை விற்பனை செய்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் விதிக் கப்பட்ட அபராதம் மூலம் 20 லட்சத்து 89 ஆயிரம் ரூபா பணம் பெறப் பட்டுள்ளது.

இந்தத் தகவலை இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள் ளது. கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் குறித்த சோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111



## பழைய மாணவர் சங்கம் யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை பொதுக்கூட்டம் 2013

இடம்- யூனியன் கல்லூரி மண்டபம்
நாள்- 28.04.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம்- காலை 9.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

01. மௌன வணக்கம்
02. தலைவர் உரை
03. போசகர் உரை
04. செயலாளர் அறிக்கை
05. பொருளாளர் அறிக்கை
06. பிரேரணைகள் ஆய்வு
07. ஏனைய விடயங்கள் ஆய்வு
08. புதிய நிர்வாக சபைத் தெரிவு
09. நன்றியுரை

* அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

* பிரேரணைகள் இருப்பின் 27.04.2013இற்கு முன்பாக சங்க முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பழையமாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

N.B.பாலேந்திரன்
செயலாளர்.

(சி/8311)(9.6)



## யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை க.பொ.த (உ.த)- 2015 புதிய அனுமதிகள்

2012 டிசெம்பர் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்து உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றவர்கள் எமது கல்லூரியில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகிய நான்கு துறைகளிலும் கற்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து 23.04.2013 இக்கு முன்பதாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது கல்லூரியில் கற்று உயர்தர வகுப்பில் கற்பதற்குத் தகுதிபெற்ற மாணவர்களுக்கு 24.04.2013 அன்று புதிய உயர்தர வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

அதிபர்.

(C/8337)(6.7.11)


## எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**முத்தையா பாலசுப்பிரமணியம்**

(முன்னாள் உப அதிபர்)

வையத்தின் மைந்தனாக
25.07.1923

தெய்வத்தின் சொந்தமாக
08.04.2008

திதி:
வளர்பிறை திருதியை
13.04.2013 சனிக்கிழமை

ஐந்து ஆண்டுகள் ஆனால் என்ன ஐம்பது ஆண்டுகள்ஆனால் என்ன
உங்கள் பாச நினைவுகள் என்றும் எங்கள் உள்ளத்தை விட்டு அகலாது.
ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்று அழைப்பதற்கு நீங்கள் இல்லையே அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் அன்பு
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி
திருமதி த. பாலசுப்பிரமணியம்,
பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

ஏழாலை தெற்கு.
சுன்னாகம். (35966)(5.6.7)


## வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகின்றனர்.

1. கடையில் பில் எழுதக் கூடியவர்கள் (ஆண்)
2. கடைக்கணக்கு பதிவு செய்தல் (பெண்)
3. பொருள்கள் கட்டுபவர்கள் (ஆண்கள்)

தொடர்பு:077 873 0114
கண்ணன் ஸ்ரோர்ஸ்
25, பலாலி றோட், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. (35965)(6.7.11)



## Soft View Computer Center

புது வருடத்தை முன்னிட்டு பதிவுக் கட்டணம் இல்லாமல் புதிய பிரிவுகள் ஆரம்பம். கணினி, சிங்களம், ஆங்கிலம் மற்றும் Phone Repairing

102, பிரதான வீதி, E.C. கொலின் யாழ்ப்பாணம். 077 905 3545 (C/8339)(6.7.11)

## ஒற்றுமையும் நீதியும் நிலைக்க நல்லாசிகள்

புதிய விஜய வருடம் 13. 04. 2013 சனிக்கிழமை இரவு 11.58 மணியளவில் பிறந்து விட்டது என்பதை நாம் அனைவரும் வாக்கிய பஞ்சாங்கத்தின் மூலம் அறிகின்றோம். இன்றைய தினம் சைவ மக்களாகிய நாம் ஸ்னானம் செய்து புது வஸ்திரங்கள் தரித்து இறைவழிபாட்டில் ஈடுபட்டு பெரியோர்களை வணங்கி ஆசி பெறுவது எங்கள் மரபு ரீதியானதாகும். கடந்த கால துன்பங்களை மறந்து இந்தப் புதிய ஆண்டில் அமைதி, பொறுமை, புரிந்துணர்வு மற்றும் இனமத பேதமின்றி நாம் எல்லோரும் இந் நாட்டில் கௌரவத்துடனும் சமரசமாகவும் ஒற்றுமையுடன் நீதியாகவும் வாழ்வதற்கு இப்புத்தாண்டில் நாம் இறைவனை வேண்டித் துதிப்போம். இப் புத்தாண்டு நம்மெல்லோருக்கும் நல்வாழ்வும், நன்மைகளும் பயக்க எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

சர்வே ஜனாகா சுகினோ பவந்து

*சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்*
*பிரதமகுரு, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம், மானிப்பாய்.*

## முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவரையும் காப்பாற்றுவார் முதல்வர்

### பழ.நெடுமாறன் நம்பிக்கை

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் மூவரையும் காப்பாற்றுவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுப்பார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன்

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''டில்லி குண்டுவெடிப்பில் குற்றவாளியாக இனம்காணப்பட்ட புல்லரின் மரணதண்டனையை 19 ஆண்டுகளுக்குப் பின்னர் உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. கருணை மனு மீது முடிவெடுப்பதில் கால தாமதம் செய்யப்பட்டதை கருத்தில் கொள்ளாமலேயே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இந்தத் தீர்ப்பு கடும் அதிர்ச்சி அளிக்கிறது.

உலகெங்கும் பெரும்பாலான நாடுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டு வரும் வேளையில் இந்தத் தீர்ப்பு மனித உரிமை ஆர்வலர்களை வருத்தமடையச் செய்துள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 3 தமிழர்களின் வழக்கை இந்தத் தீர்ப்பு பாதிக்கக்கூடும். ஆனால், தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 3 தமிழர்களைக் காப்பாற்ற முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றோம்''- என்றுள்ளது. (ற)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றும் இராசையா பாஸ்கரனின் அன்புத் தாயார்

**இராசையா குணஞானவதி**

காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு, துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலக நலன்புரி சங்கம், உடுவில். (c/8348) பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்.

## நளின் நிறுவனத்தின் அறிவித்தல்

### மீளப்பெறாத பொருட்கள் தொடர்பாக

எமது நிறுவன உத்தரவாதம், திருத்த வேலைகளை மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் எம்மிடம் **01-03-2013** ற்கு முந்திய காலப்பகுதியில் ஒப்படைத்த அனைத்து கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை அவற்றிற்குரிய பற்றுச் சீட்டு, உத்தரவாத பற்றுச்சீட்டு என்பவற்றை ஒப்படைத்து வருகின்ற **01-05-2013** ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**01-05-2013** ம் திகதிக்கு பின், பொறுப்பேற்காத எந்த பொருட்களுக்கும் நளின் நிர்வாகம் பொறுப்பேற்காது.

நளின் முகாமையாளர்

**NALIN INFORMATION TECHNOLOGIES**
NALIN Information Technologies Pvt Ltd.
195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.
TP-0212221166/1121, 0777667974

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா சின்னத்துரை



உடுவிலைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்டு தற்சமயம் கனடாவில் வசித்தவருமான திருமதி இராசம்மா சின்னத்துரை கடந்த (11.04.2013) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான இரத்தின சோதி, சிவசோதி மற்றும் பொற்சோதி (கனடா), பரஞ்சோதி (கனடா), ஜெகசோதி (கொழும்பு), ஞானசோதி ஆகியோரின் தாயும் பேரம்பலதாஸ் (கனடா), சாந்தினி, றமணிபரி (கனடா), நிறஞ்சலா (கொழும்பு), கௌதமி ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, செல்வராணி மற்றும் பாக்கியம் (சுன்னாகம்), தங்கரத்தினம் (கனடா), பாலசுப்பிரமணியம் (உடுவில்), பர்வதம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிகலா, குமரேசன், குகன், ஜசிந்தன், கயந்தன், றோஷினி சாருணிக்கா, கீர்த்தனா, சஞ்சீபன், சாமினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகம். (35974) (23-14,6)

தகவல்: குடும்பத்தினர்.
ஜெயம்-0777316452, ஞானம்-0777520332

### வன்னித்தம்பி முத்தையா இராஜேந்திரன்

*(V.M.இராஜேந்திரன்) (இளைப்பாறிய ஆசிரியர் யா/சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி)*



மாதகல் கிழக்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராஜேந்திரன் நேற்று (12.04.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா -தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், ராஜினி, அச்சுதன் (லண்டன்), முகுந்தன், றமணி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதகல் கிழக்கு, மாதகல். (சி/8349)

தகவல்: குடும்பத்தினர். 0779370255

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோன்மணி சுப்பிரமணியம்



மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வடக்கு, உச்சியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சுப்பிரமணியம் நேற்று (12.04.2013) வெள்ளிக்கிழமை பிற்பகல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் தங்கராணி, வசந்தா, பரராஜசிங்கம் (பஞ்சாச்சரம்), பராசக்தி, றஞ்சினி, றாகினி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் துரைசிங்கம், ரேணுகாதேவி (சுதா), நித்தியானந்தம், இரத்தினசிங்கம், சிவம் ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் கதிர்காமு (மணி), வேலுப்பிள்ளை (சந்திரா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜிதா, காலஞ்சென்ற விஜிகரன் மற்றும் விஜிகலா, தசீதரன், ரதிதரன், சுசிதரன், ரகுதரன், தனுசா, பகீதரன், கஜிதரன், பாபுதரன், சுரேந்திரன், றமணன், சுகந்தன், சுதன், சுகன்யா, சுவர்ணி, நிரோஜினி, நிதர்சன், கீர்த்திகா, கஜானன், கஜானி ஆகியோரின் பேர்த்தியும் தருணிகா, தசானிகா, வர்னிதா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உச்சியோடை லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.* (35980) (23-14)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி குணஞானவதி இராசையா



மல்லாகம் ஏழாலையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு பிலிப்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணஞானவதி இராசையா நேற்று (12.04.2013) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் பெரியான் இராசையாவின் அன்பு மனைவியும் பகீரதன் (சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), நளினி ( சாவகச்சேரி சமுர்த்தி வங்கிச் சங்கம் ), பாஸ்கரன் ( சமுர்த்தி வங்கி முகாமையாளர் உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வனிதா, யோகராஜா( பச்சிலைப்பள்ளி பிரதேச சபை), கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ரம்மியராஜ், கேனுஷா, யதுஷா, தர்ஜீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2013 ) சனிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிலிப்ஸ் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்

## இமையாணன் ம.வி.க உதைபந்தாட்ட தொடர்

# இறுதியாட்டத்தில் சிவானந்தா

**இறுதியாட்டம் நாளை புதுவருடப் பிறப்பு அன்று இடம் பெறவுள்ளது. இதில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா அணி மோதவுள்ளது.**

கரணவாய், ஏப்.13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தர் விளையாட்டுக்கழகமும், நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதின. இரண்டு அணிகளும் அயல் கிராமங்கள் என்பதால் போட்டியைக் காண்பதற்கு பார்வையாளர் கூட்டம் மைதானத்தில் அலைமோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் முதல் பாதியில் ஆட்டம் ஆரம்பித்து எட்டாவது நிமிடத்தில் சிவானந்தா அணிவீரர் ஜெயராஜ் தனக்குக் கிடைத்த பந்தினை கலைமதி வீரர்களை இலாவகமாக ஏய்த்து மிகவும் அருமையான கோல் ஒன்றைப் போட்டார்.

அதையடுத்து கலைமதி வீரர்கள் தமது அணிக்கான கோலைப் பெறுவதற்கு பகிரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர். எனினும் சிவானந்தா அணியின் தடுப்பை உடைந்து கலைமதி வீரர்களால் கோல் எதையும் பெற முடியவில்லை. முதலாவது கோல் பெறப்பட்ட் சிறிது நேரத்தில் சிவானந்தா அணி வீரர் நிரோஜன் மேலும் ஒரு கோலை அடித்து தமது அணியை முன்னிலைப் படுத்தினார்.

கலைமதி அணியின் முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் முதல்பாதி ஆட்டம் 2:0 என்ற நிலையில் நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் கலைமதி அணியினர் பந்தினைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். முன்னேறித் தாக்கி கோல் பெறுவதற்கு கடுமையாகப் போராடினர். ஆனால் சிவானந்தா அணியின் பின்கள வீரர்களும், கோல் காப்பாளரும் அவர்களுடைய முயற்சிகளை முறியடித்தனர். இருந்தபோதும் கலைமதியினரின் போராட்டம் ஓயவில்லை. இந்தச் சூழ்நிலையில் இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 14 ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணியால் மேலும் ஒரு கோல் அடிக்கப்பட்ட போதும் அவர்களுடைய அணிவீரர் மேற்கொண்ட தவறு காரணமாக அது நடுவரால் நிராகரிக்கப்பட்டது.

ஆனாலும் 15 ஆவது நிமிடத்தில் உத்வேகம் கொண்ட சிவானந்தா அணிவீரர் லங்கேஸ்வரன் மிகவும் அற்புதமாக கோல் ஒன்றை அடித்து தமது அணியின் கோல் எண்ணிக்கையை மூன்றாக உயர்த்தினார்.

கலைமதி அணியினர் இடைவேளையின்பின்னர்பந்தினைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் பல கோல் பெறும் சந்தர்ப்பங்களைக் கோட்டைவிட்ட வண்ணமிருந்தனர்.

இறுதியில் சிவானந்தா விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது.

இதேவேளை இப்போட்டியில் இரு அணிகளிலும் தலா இரண்டு வீரர்களுக்கு நடுவரால் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.

இப்போட்டியின் இறுதியாட்டம் நாளை புதுவருடப் பிறப்பு அன்று இடம்பெறவுள்ளது. இதில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா அணி மோதவுள்ளது. (ற-400-422)

**17 வயது யாழ்.வலய உதைபந்தாட்டம்**

## சென்.ஜேம்ஸ் சம்பியன்



பரபரப்பாக இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். ஜேம்ஸ் அணியும் யா. மத்திய கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 17வயதுப் பிரிவுக்காகன உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய அணி சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அணியும், யாழ்:மத்திய கல்லூரி அணியும் வெற்றிபெற்று மோதிக் கொண் டன.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. அதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜேன்ஸ் கல்லூரி அணி மோதியது. அதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் மூன்றாமிடத்தைத் தன தாக்கிக் கொண்டது. (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.13

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையம் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும்.

பி.ப.7மணி

முதலவது அரையிறுதியாட்டத்தில் ஏழாலை சரஸ்வதி பி அணி எதிர் தெல்லிப்பழை நண்பர்கள் பி அணி

பி.ப. 8மணி

தெல்லிப்பழை நண்பர்கள் ஏ அணி எதிர் சங்கனை ஞானவைரவர் ஏ அணி (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஏப்.13

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகள்:-

(கொக்குவில் இந்துக் கல்லூரி)

காலை 8.30 மணி

சென்றலைஸ் (சொக்ஸ்) வி.க. எதிர் யாழ்.சென்றல் வி.க.

மதியம் 1 மணி

சென்றலைஸ் (புளூஸ்) வி.க எதிர் ஸ்ரான்லி வி.க

(ஸ்கந்தாவரோதயாக் கல்லூரி)

காலை 8.30 மணி

யங்ஸ்ரார் வி.க எதிர் யூனியன்ஸ் வி.க

மதியம் 1 மணி

ஓல்ட் கோல்ட்ஸ் வி.க எதிர் ஸ்கந்தா ஸ்ரார் வி.க

(மகஜனக் கல்லூரி)

காலை 8.30 மணி

ஜொலிஸ்ரார் வி.க எதிர் ஸ்ரீகாமாட்சி வி.க

மதியம் 1மணி

திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் எதிர் கிறஸ்கோப்ஸ் வி.க (ற-23)

## ஏபி மென்பந்து கிரிக்கெட்டில் கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்




யாழ்ப்பாணம், ஏப்.13

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும், குருநகர் கார்மேல்போயிஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல்போயிஸ் வினையாட்டுக்கழக அணி 16 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் தேசிகன் 24 ஓட்டங்களையும், சாந்தன் 11 ஓட்டங்களையும், அலன்போடர் 8 ஓட்டங்களயும், சுபதாஸ், அயன் ஆகியோர் தலா 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

86 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 15.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது.

றஜிவன் ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டங்களையும், துவாரகன் 15 ஓட்டங்களையும், துசியந்தன் ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களையும், நவகீதன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

ஆட்ட நாயகனாக ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் றஜிவன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்ட நாயகனாக கார்மேல்போயிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் அயன் தெரிவு செய்யப்பட்டார். (ற-23)

**ஆவரங்கால் இ.இ.வி.க.**

## கரப்பந்தாட்ட இறுதி இன்று மின்னொளியில்





யாழ்ப்பாணம், ஏப்.13

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடந்தும் கிருஸ்ணா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிரதம விருத்தினராக கோப்பாய் மத்தியஸ்தர் சபை தவிசாளர் மயில்வாகனமும், சிறப்பு விருத்தினாரக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனோகரனும், கௌரவ விருத்தினர்களாக கரவெட்டிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகஸ்தர் அனுராகந்தன், கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அகலியா ஆகியோர் கலந்து கொள்ளவர்.(ற-23)

## தாச்சி இறுதியாட்டம் இன்று

கைதடி, ஏப்.13

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சியைச் சேர்ந்த கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவினருக்கான தாச்சித் தொடரின் இறுதியாட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கைதடி கலைநகர் துர்க்கா வி.க. 'ஏ' அணியை எதிர்த்து கைதடி கலைநகர் துர்க்கா வி.க. 'பி' அணி மோதவுள்ளது. (ற)

**சங்கானைக் கழகங்களுக்கிடையிலான எல்லே**

## சுழிபுரம் விக்ரோறியன்ஸ் சம்பியன்



வலி.வடக்கு, ஏப்.13

சங்கானைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான எல்லே போட்டியில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் இளைஞர் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அராலி நிலாவொளி இளைஞர் கழகமும் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய விக்ரோறியன்ஸ் இளைஞர் கழகம் 7 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு விளையாடிய நிலாவொளி இளைஞர் கழகம் 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தார்கள்.

ஆட்ட நிறைவில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் 7 இக்கு 2 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுப் பிரதேச சம்பினாகத் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட மட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற் றுள்ளது. (ற-86)

## 'அறிவுநதி பிரீமியர் லீக்' இன்று

யாழ்ப்பாணம், ஏப். 13

கிளிநொச்சி அறிவுநதி, ஜே ஸ்போட்ஸ் நிறுவனம் நடந்தும் அறிவுநதி பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுத் தொடர் இன்று சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

ஆரம்ப நிகழ்விற்கு பிரதம விருத்தினராக கிளிநொச்சி கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஜெயராஜும், சிறப்பு விருத்தினராகக் கிளிநொச்சி மகா வித்தியலய அதிபர் பங்கயச்செல்வன், கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் ரவிந்திரன், கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் கெங்காதரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ற-23)

# சங்காவிடம் மஹேல சரண்

டெல்லி டேர்டெவில்ஸ் அணியை 3 இலக்குகளால் வீழ்த்தியது சன்ரைஸ்ஸர்ஸ் அணி. ஐ.பி.எல்.தொடரின் 14 ஆவது போட்டி டெல்லியில் நேற்று இரவு நடைபெற்றது.

இதில் டெல்லி டேர்டெவில்ஸை எதிர்த்தது ஹைதராபாத் சன்ரைஸ்ஸர்ஸ்.

நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

தொடக்க ஆட்டக்காரர்களாக வோணருடன் களமிறங்கினார் சேவாக். கடந்த போட்டிகளில் உபாதை காரணமாக விளையாடாத சேவாக் நேற்று அணியுடன் இணைந்தார்.

பலமான இந்த ஜோடி வாணவேடிக்கை காட்டுமென எதிர்பார்த்தனர் இரசிகர்கள். மாறாக முதற் பந்துப் பரிமாற்றத்திலேயே ஸ்ரெய்னிடம் வீழ்ந்தார் வோர்ணர்.

சேவாக்குடன் இணைந்தார் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன. அவரும் வெறும் 14 ஓட்டங்களுடன் இசாந் சர்மாவின் பந்தில் இலக்கைப் பறிகொடுத்து வெளியேறினார். இடைவேளைக்குப் பின்னர் இணைந்த சேவாக்கும் சாதிக்கத் திணறினார். அவரும் 12 ஓட்டங்களுடன் சர்மாவிடம் சரணடைந்தார்.

ஏனைய வீரர்கள் பிரகாசிக்கத் தவற டெல்லி அணியால் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 120 ஓட்டங்களை கூட எட்ட முடியவில்லை.

யுனிஜா [15], போத்தா [9], பதான் [23], மோர்கல் [10], நதீம் [0], யாதேவ்[7] ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதிகபட்சமாக ஜாதவ் தனித்து நின்று போராடினார். அவர் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இறுதியில் 8 இலக்குகளை இழந்து டெல்லி அணியால் 114 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

பந்து வீச்சில் சன்றைஸ்ஸர்ஸ் அணி சார்பில் ஸ்ரெய்ன், இசாந்சர்மா, திஸ்ஸார பெரோரா தலா இரு இலக்குகளையும் மிர்ஸா, ராஜன் தலா ஒரு இலக்கையும் சரித்தனர்.

115 என்ற இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட களமிறங்கியது சன்றைஸ்ஸஸ் அணி.

டெல்லி அணியினர் பந்து வீச்சுக்கு மத்தியில் சன்றைஸ்ஸர்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்களின் துடுப்புக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டன.

குமார் சங்ககாரா மட்டுமே அதிகபட்சமாக 28 ஓட்டங்களை பெற்றார் ஏனைய வீரர்கள் எவராலும் நிலைத்து நின்று ஆட முடியவில்லை. இறுதியாக 7 இலக்குகளைப் பறிகொடுத்தே அதுவும் இறுதிப் பந்துப்பரிமாற்றத்திலேயே வெற்றி இலக்கை அடைய முடிந்தது. ரெட்டி [1], பட்டேல் [19], சங்ககார [28], விஹாறி [17], வைற் [4], திஸார பெரேரா [2], ரெட்டி [16] ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

டெல்லி அணி சார்பில் மோர்கல் நதீம் தலா இரு இலக்குகளையும், பதான், போத்தா தலா இரு இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக சன்றைஸர்ஸ் அணியின் மிஸ்ரா தெரிவானார்.

[16]




# சேவாக்கின் ஆட்டம் முடிந்தது...

## முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜெப்ரி பொய்கொட்




சரியாக ஆடாததால் இந்திய கிரிக்கெட் அணியில் இருந்து கழற்றி விடப்பட்ட 34 வயதான ஷேவாக்கின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஜெப்ரி பொய்கொட் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜெப்ரி பொய்கொட் இணையத்தளத்துக்கு அளித்த பேட்டியில், சிலர் தானாகவே ஓய்வு பெறுவார்கள். சிலர் தெரிவாளர்களால் ஓய்வு அளிக்கப்படுவார்கள்.

எதுவாகஇருந்தாலும்வேதனை அளிக்கும் விடயம் தான். இந்திய அணிக்காக ஷேவாக் இனி மேல் ஒருபோதும் விளையாட முடியாது.

இந்திய அணி சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்திய அணியின் தெரிவாளர்கள் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க எடுத்திருக்கும் முடிவு பாராட்டுக்குரியதாகும்.

2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிக்கான அணியை வலுப்படுத்த வேண்டுமானால் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியது முக்கியமானது. ஆட்டத்துக்கு வயது முக்கியம் கிடையாது என்றும் ஆட்டதிறன் தான் முக்கியமானதாகும் எனவும் கூறினார்.


# தரவரிசையை விட ஒலிம்பிக்கே முக்கியம்

ரென்னிஸ் பெண்கள் ஒற்றையர் தர வரிசையில் முதலிடத்தில் இருந்து வந்த அஸரென்கா தற்போது முதலிடத்தை அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸிடம் இழந்துள்ளார். அஸரென்கா தற்போது 3 ஆவது இடத்தில் உள்ளார்.

பெலாரஸ் நாட்டை சேர்ந்த விக்ரோறியா அஸரென்கா கடந்த ஆண்டு நடந்த லண்டன் ஒலிம்பிக் போட்டியில் ஒற்றையர் பிரிவில் வெண்கலப்பதக்கமும், கலப்பு இரட்டையர் பிரிவில் தங்கப்பதக்கமும் வென்றிருந்தார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஒலிம்பிக் பதக்கத்துடன் ஒரு போதும் ரென்னிஸ் தரவரிசையை ஒப்பிட முடியாது என்று நான் நினைக்கிறேன். லண்டன் ஒலிம்பிக் போட்டியின்போது நான் முற்றிலும் வித்தியாசமான உணர்ச்சியை உணர்ந்தேன். இரட்டையர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றதை விட ஒற்றையர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றதை அதிக பெருமையாக நான் நினைக்கிறேன்''- என்றார்



# அறையவில்லை ஹர்பஜன்; முகத்தில் குத்தினார்


சிறிசாந்த்

ஐ.பி.எல் போட்டியில் நேற்றுமுன்தினம் பெங்களுரில் நடந்த ஆட்டத்தின் போது இரு அணித்தலைவர்கள் கம்பீர், வீராட் கோஹ்லி ஆகியோர் முறைத்துக்கொண்டு மோதத் தயாராகினர்.

நடுவர் சமாதானப்படுத்தினார். இதேபோன்று 5 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த போட்டியின்போது ஸ்ரீசாந்த்தை, ஹர்பஜன் சிங் கன்னத்தில் அறைந்தார்.

அந்தச் சம்பவத்தின் ரகசியத்தை ஸ்ரீசாந்த் தற்போது போட்டுடைத்தார்.

இதுகுறித்துத் தனது 'டுவிட்டர்' பக்கத்தில் கூறுகையில்,

''கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த முதல் ஐ.பி.எல். தொடரில் மொஹாலி போட்டியில் என் கன்னத்தில் ஹர்பஜன்சிங் அறையவில்லை, முழங்கையினால் பலமாகக் குத்தினார்.

தோல்வியடைந்த கோபத்தில் ஏற்கனவே திட்டமிட்டு என் மீது முழங்கையினால் பலமாகக் குத்தினார். சம்பவத்தன்று எடுக்கப்பட்ட வீடியோவை முழுமையாக வெளியிட வேண்டும்.

நான் உணர்ச்சிவசப்படுபவன் என்று அனைவரும் என்னை ஏசுகின்றனர். நாம் மதிக்கும் ஒரு நபர் [ஹர்பஜன்] நம்மில் முதுகில் குத்தும் நபராக இருப்பார் என்று தெரியவரும்போது உணர்ச்சிவசப்படாத மனிதர்கள் உண்டா?

5 ஆண்டுகளாக இது பற்றி வாய் திறக்காமல் இருக்கிறேன் ஏனென்றால் என்னுடைய சர்வதேச கிரிக்கெட் முடிவுக்கு வந்திருக்கும்.

அந்த விவகாரத்தில் அனைவரும் சுயநலவாதிகளாக இருந்தனர் என்றும் நான் தவறு செய்யாதபோது கூட எனக்கு ஆதரவு இல்லை'' எனவும் தனது 'டுவிட்டரி'ல் புலம்பிளத்தள்ளியுள்ளார்.

# சங்கிலியன் பூங்காவில் புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப். 13

தமிழ் சிங்களப் புத்தாண்டு விழா யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் , கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது.

இந்தத் தினத்தில் ஆண், பெண் இரு சாராருக்கும் தூர ஓட்டம், சைக்கிள் ஓட்டம் என்பன காலை 6 மணிக்கு முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள வலயக்கல்வி முன்றலில் ஆரம்பிக்கப்படும். இதில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தூர ஓட்டம், சைக்கிள் ஓட்டம் (ஆண், பெண்), கிறீஸ்மரம் ஏறுதல், வரவேற்பு நடனம், கபடி, கிராமிய நடனம் (நாட்டு வளம்), பொம்மை நடனம், தேசிக்காய் கரண்டி (பெண் கீழ் பிரிவு), கிராமிய கலைகளின் சங்கமம், தலையணைச் சண்டை, கதம்பம், தேங்காய் துருவுதல் (பெண்), பலூன் உடைத்தல், கௌத்துவம் (நடனம்), கிடுகு பின்னல் (பெண்), காவடி நடனம், போர்த்தேங்காய் உடைத்தல் (ஆண்), கண்டிய நடனம், முட்டி உடைத்தல் (ஆண், பெண்), கிராமிய நடனம், கயிறு இழுத்தல் (ஆண், பெண்), றபான் நடனம், குறத்தி நடனம், யானைக்குக்கண்வைத்தல் (சிறுவர்கள்), கிராமிய நடனம் போன்ற விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன. போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் அன்றைய தினத்தில் சங்கிலியன் பூங்காவில் காலை 6 மணிக்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள முடியும். (ந)

# சட்டவிரோத இலங்கையர் மூவாயிரம் பேர் சவூதியில்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல் தெரிவிப்பு

சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைகின்ற சட்ட விரோத இலங்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத பணியாளர்களை தொழிலில் ஈடுபடுத்தியுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு அந்தநாட்டு அரசு தீர்மானித்தமையே இதற்குக் காரணம் என்று பணியகத்தின் பொது முகாமையாளர் ஹரிஸ்சந்திர பட்டகொட தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சட்டவிரோதமாக சவூதி அரேபியாவில் தங்கியுள்ள சுமார் 300 இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பும் நோக்கில் ஜெத்தாவிலுள்ள அலுவலகத்தை நாடியிருக்கின்றனர்.

எனினும், சவூதி அரேபியாவில் சுமார் மூவாயிரம் இலங்கைப் பணியாளர்கள் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கின்றனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் சுட்டிக் காட்டியுள்ளது. சவூதி அரேபியாவிலிருந்து அவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்காக தலா ஐயாயிரத்து 800 சவூதி றியால்களை கட்டணமாகச் செலுத்த நேரிட்டுள்ளது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


WALK IN INTERVIEW

Part Time IT Lecturers

Are you with IT Qualified?
Looking for IT Job?
Get trained.......
Get Job....
Get Success.
Join with successful Team

Interview on 13.04.2013, Saturday 10.30 am
@
Gateway Tech
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555
E - mail : gatewayjfn@sltnet.lk

வீடு வாடகைக்கு

சோமசுந்தரம் அவனியூவில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்)
மாதவாடகை: 25000/=
தொடர்புகளுக்கு: 0752160233

தேவை

உணவகத்தில் வேலை செய்ய ஆள்கள் தேவை. எமது தரம் வாய்ந்த உணவகத்தில் கடமையாற்றுவதற்கு ஆண்கள், பெண்களுக்கு ஓர் அருமையான சந்தர்ப்பம்.
* நிறைவான சம்பளம்
* தரமான தங்குமிடவசதி
* இலவச உணவு
முன் அனுபவம் இருந்தால் நன்று. இல்லாவிடில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
அன்னக்கிளி உணவகம்
பழைய பூங்கா தோட்டம்,
128, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: சுமன்(0772863392)

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்....
றோயல் அக்கடமி
பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)
A/L 2015
ஆரம்பம்: ஏப்ரல் 16 மாலை 3.00 மணி

வர்த்தகப்பிரிவு
பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : பகீரதன்
வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு
தமிழ் பத்மநாதன்
புவியியல் பாபு
இந்துநாகரிகம் பூரீஸ்
நாடகமும் அரங்கியலும் சிவா
ஊடகவியல் மனோ
அளவையியல் E.S.பவன்
அரசியல் சுகாஷ்
வரலாறு R.S.சந்திரன்
ஆங்கிலம் சந்திரமவுலி

2014 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன

I P M
சர்வதேச புலவர் திருமண சேவை
INTERNATIONAL PULAVAR MATRIMONY
10.05.1962 இல் இருந்து திருமண சேவையில்....
238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 7147, 075 842 7395
106, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
T.P. 021 490 0733, 0755287045

கனடா அமெரிக்காவில்
படிக்க, உழைக்க
மிக மிகக் குறைந்த
கட்டணத்தில் சட்ட
ஆலோசனை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2015
கணித, உயிரியல் வகுப்புக்கள்
(தமிழ் மொழி, ஆங்கில மொழி)
பௌதீகம்: V.ஜெயசீலன், V.பார்த்தீபன்
இரசாயனம்: T.சிவகுமார்,
இணைந்த கணிதம்: S.பிரதீபன்,
உயிரியல்: E.R.ஈசன்
ஆரம்பம் 17.04.2013 (புதன்) 8.00AM

SUBRA
A/L 2015
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப்பிரிவுகள்
புதுவருட சுபவேளையில் 14.04.2013 ஞாயிறு காலை 9.15 AM
O/L Day Class ஆரம்பம்: 14.04.2013
★ ஒரு பிரிவில் 50 மாணவர்கள் மட்டுமே.
★ தீவுப்பகுதி மாணவர்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட சலுகைக்கட்டணம்.
(c/8313)(8.6)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேஒரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே.இச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலியநாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com
(நக்கா வீதியும் கச்சேரிநல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)

Vinoth Curtains
யாழ். மண்ணில் அறிமுகமாகிறது
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோர்காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
தொடர்பு- மைக்கல்
0774906323,
0777797532
இல-50/1,நாவலர்வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
(23933)(9.14)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2015
கலை வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| ★ தமிழ் ★ N. பாலா | ★ வரலாறு ★ K. சுதன் | ★ அரசியல் ★ S. கோகுலன் |
| ★ புவியியல் ★ N. பாபு | ★ நாடக அரங்கியல் ★ மங்களேஸ் | ★ கிறிஸ்தவ நாகரிகம் ★ J.J. வசந்தன் |
| ★ இந்து நாகரிகம் ★ வாகீசன் | ★ அளவையியல் ★ E.S. பவான் | ★ பொருளியல் ★ பிரதீபன் |
| ★ கணக்கீடு ★ N. ராஜன் | ★ வணிகக்கல்வி ★ ரூபன் | ★ சித்திரம் ★ அஜ்ரன் |

ஆரம்பம்:- 17/04/2013 புதன் 8.00am

விற்பனையாகின்றன
போட்டிப்பரீட்சை வழிகாட்டிகள்
தொகுப்பு: த.தவசேகர்
* வடமாகாண பொது சேவைகள் பரீட்சை வழிகாட்டி விலை-500/=
* கல்விமாணித் தெரிவு விலை-200/=
* பொதுஅறிவு பொது உளச் சார்பு 400/=
* கிராமசேவகர் 350/=
பூபாலசிங்கம், அன்னை, கஜன், சிறீ ராமலிங்கம்,ஜோதி புத்தகசாலைகளில்

கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு
உயர் தரத்திலான கொங்கிறீற் கற்கள், வேலித்தூண்கள், கிணற்றுக் கற்கள் என்பவற்றை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:- 0777716243

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
O/L Day Class
"SUPER GRADE" ஆசிரிய குழு
ஆரம்பம்: 17.04.2013 புதன் 8.00A.M

FLC FRENCH LANGUAGE CENTRE
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்
FRENCH CLASSES
Canada, French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்.
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்.)
690 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்....
ஆரம்பம் : 20.04.13 at 2pm
No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
T.P : 0779 789 456.
ஆரம்பம் : 23.04.13 at 11am.
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
English(A1,B1,IELTS), Italian, Deutsch, Sinhala Classes


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.